# கல்வியும் கேள்வியும்

ஆசிரியர்

கு. மதுரை முதலியார்

சென்னை, லயோலா கல்லூரி முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59. பிராட்வே · சென்னை 1.

முதற் பதிப்பு : மார்ச், 1960
இரண்டாம் பதிப்பு : மே, 1961
மூன்றாம் பதிப்பு : ஏப்ரல், 1962
நான்காம் பதிப்பு : ஜூலை, 1962
உரிமை ஆசிரியருக்கு.

**விலை ரூ. 2—25**

மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை-14

# முன்னுரை

MADRAS

பல்லாண்டுகளாகத் தமிழ்ப் பெருமக்கள் தந் தாய்மொழியாகிய தமிழமுதை உண்டு மகிழ்ந்து பலவகைப்பட்ட தமிழ் நூல்களைக் கற்று வருவதைத் தமிழுலகம் நன்கறியும். அங்ஙனம் கற்று வரும் கல்லூரி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சங்கத் தமிழின் சிறப்பையும், சங்க காலத்திற்குப் பிற்பட்ட காப்பியத் தமிழின் சிறப்பையும், பண்டைத் தமிழ் நூல்களை யெல்லாம் நன்கு ஓதி யுணர்ந்த கம்பரது காவியச் சிறப்பையும், தேசிய மகா கவியாக விளங்கும் பாரதிப் பாடல்களின் சிறப்பையும் அறிமுகப்படுத்தி வைக்கலாம் என்று எண்ணினேன். அவ்வெண்ணத்தின் பயனே இச் சிறு நூல்.

இதில் திருவள்ளுவர் உரைத்துள்ள கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவு என்பவற்றை மேனாட்டுப் புலவர்களின் கருத்துக்களோடு வைத்து ஆராய்ந்து எழுதியுள்ளேன். சிலப்பதிகாரத்தில் சேரன் செங்குட்டுவனது வீரச்செயல்களையும், மணிமேகலையில் மாதவி, அவள் மகள் மணிமேகலையாகிய இருவர்களின் தூய உள்ளங்களையும் எடுத்துக் காட்டியுள்ளேன். கம்ப ராமாயண வீரச் சுவையிற் சிறிதெடுத்துத் தமிழுலகிற்கு வழங்கியுள்ளேன். முடிவாகப் பாரதியாரின் அறிவாற்றிலையும் எடுத்துக்காட்டச் சிறிது முயன்றுளேன். இவ்வண்ணம் அமைந்துள்ள இச் சிறுநூல் தமிழுலகிற்குச் சிறிதேனும் பயன்படலாம் என்று நம்புகின்றேன்.

இங்ஙனம்,

கு. மதுரை முதலியார்

# உள்ளுறை


I. திருக்குறள் — பக்கம்

1. கல்வி ... 5
2. கல்லாமை ... 16
3. கேள்வி ... 23
4. அறிவுடைமை ... 32

II. சிலப்பதிகாரம்

1. செங்குட்டுவனது வடநாட்டுச் செலவு ... 41
2. பத்தினிக்குக் கல்லெடுப்பித்தல் ... 45
3. பத்தினிக் கல்லை நீராட்டல் ... 52
4. பத்தினிக் கல்லை நிலைநாட்டுதல் ... 58

III. மணிமேகலை

1. மாதவியின் உள்ளம் ... 64
2. மணிமேகலை மலர்வனம் புகுதல் ... 67
3. சுதமதி கூறிய அறிவுரை ... 72
4. சுதமதியின் வரலாறு ... 75

IV. கம்ப ராமாயணம்

1. கன்னிப் போர் ... 78
2. சடாயுவின் வீரப் போர் ... 81
3. அனுமனது வீரப் போர் ... 89
4. முதற் போர் ... 97
5. கும்பகருணனது வீரப் போர் ... 112

V. பாரதியார் ... 136

# I. திருக்குறள்

## 1. கல்வி

எல்லோர்க்கும் இன்றியமையாத கல்வியைத் திருவள்ளுவர் அரசியலுள் வைத்துள்ளமை சிந்தித்தற்குரியது. உலகினை யாளும் அரசன் கல்விச் செல்வமின்றியிருப்பின், தன்னுயிர்க்கேயன்றி, மன்னுயிர்க்கும் பயன் படா தொழிவான். அவனது நாடு நாடாகாமல் காடாகக் காட்சியளிக்கும். அரசனுக்குக் கல்வியில்லாத போது அவன் கோலின்கீழ் வாழும் குடிமக்கள் எங்ஙனம் கல்வியைப் பெற்றுக் கவினுற்று விளங்கக்கூடும்? நாடு காடாகவும், மக்கள் மாக்களாவும் ஆகாமல், நாடு நாடாகவும், மக்கள் மக்களாகவும் விளங்க, அரசன் கல்வியறிவு உடையவனாக விளங்குதல் வேண்டும் என்பதனை நோக்கியே, கல்வி அரசியலில் இடம் பெற்று விளங்குகின்றது; எனினும், யாவர்க்கும் நன்மை பயக்கும் சிறப்புக் கல்விக்குண்டு. ஆகையால் அரசற்கேயுரிய யானை, குதிரை, தேர், படைக்கலம் என்றிவற்றின் நூற் கல்வியைக் கூறாமல் பொதுப்படக் கல்வியைப்பற்றிக் கூறுகின்றார் திருவள்ளுவர்.

எல்லாச் செல்வங்களிலும் கல்விச் செல்வம் மிகச் சிறந்தது என்பதை வற்புறுத்திக் காட்டவே,

"கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
மாடல்ல மற்றை யவை"

என்றார் தெய்வப்புலவர். இக்குறட்பாவில், "மாடு" என்னுஞ் சொல்லால் திருவள்ளுவர் செல்வத்தைக் குறித்

துள்ள மாண்பு நீள நினைதற்குரியது, பண்டைக் காலத்தில், பொதுவாக மக்களும், சிறப்பாகத் தமிழரும், மாடுகளைக் கொண்டே செல்வத்தை மதித்து வந்தனர் என்பது நன்கு புலனாகின்றது.

" ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே......"

என்ற திருப்பாவைச் செய்யுள் ஈண்டு நினைவிற்கு வருகின்றது.

திருவள்ளுவர், கல்விச் செல்வத்தை அழியாத சீரிய செல்வமாகக் கருதியதால், மற்றைச் செல்வங்கள் அழியும் சிறப்பற்ற செல்வங்கள் என்பதை அறிகின்றோம்.

'கல்விச் செல்வம் பிறரால் கவரப்படமாட்டா; அக்கல்விச் செல்வத்தைத் தகுதி வாய்ந்த மாணவர் களுக்குக் கொடுத்தால், அது மிகுமே யன்றிச் சிறிதும் குறைதல் இல்லை; பொறாமை காரணமாக மிக்க சிறப் பினையுடைய அரசர்கள் அச்செல்வத்தைக் கவர்ந்து கொள்ள எண்ணின், அங்ஙனம் அவர்களாலும் அதனைக் கொள்ளைகொண்டு செல்ல முடியாது. ஆதலால், ஒருவன், செல்வமென்று தன் பிள்ளைகளுக்குச் சேர்த்துவைக்கத் தக்கவை கல்விப் பொருள்களே, மற்றைச் செல்வப் பொருள்கள் அல்ல' என்னும் கருத்தை நாலடிச் செய்யுள் ஒன்றில் காணலாம்.

கற்றோரது சிறப்பினையும் கல்லாதவரது இழிவினையும் திருவள்ளுவர் இரண்டு குறட்பாவால் அழகுறக் கூறியுள் ளார். அவற்றுள் ஒன்றைக் கீழே காணலாம்:

" கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்."

எல்லாவிடத்துப் பொருள்களையும், எல்லாக் காலத்துப் பொருள்களையும் காணவல்ல ஞானக் கண்ணுடைமையின், கற்றவரைக் 'கண்ணுடையர்' என்றார் திருவள்ளுவர். நோய் முதலியவற்றால் துன்பம் செய்யும் ஊனக்கண்ணே உடைமையின், கல்லாதவர் முகத்திலுள்ள இரண்டு கண்களையும் 'புண்' என்றார் அப் பொய்யில் புலவர்.

கற்றவரைக் கண்ணுடையரென்றும், கல்லாதவரை முகத்தில் இரண்டு புண்ணுடையரென்றும் திருவள்ளுவர் கூறியதற்குக் காரணம் கூறச் சிந்தித்த காளிங்கர்,

'மற்று அஃது எப்படியோ எனின், கண் முதலாகிய ஐம்பொருள்களும் தத்தம் பொருள்களைக் காணுமிடத்துக் கல்வியாகிய ஞானக் கண்ணினால், அவற்று உண்மைத் தன்மையையும், அளவிறந்த வீடு ஆகிய நுண்பொருளையும் பழுதறக் காண்பர்; மற்று அஃதில்லார், புறத்ததாகிய முகத்து இரண்டு நீர்ப்பசையறாது நெகிழ்ந்து, தோலும் தசையும் உடைய புண்கண்ணர்' எனக் கூறியுள்ளார்.

'கைப்பொருள் கொடுத்தும் கற்றல், கற்றபின் கண்ணுமாகும்'

என்னும் சிந்தாமணிச் செய்யுளும் ஈண்டு நோக்கற்பாலது.

"எண்ணென்ப ஏனை யெழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும உயிர்க்கு"

என்னும் குறளை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

'அறியாதார் எண்ணென்று சொல்லுவனவும், மற்றை எழுத்தென்று சொல்லுவனவும் ஆகிய கலைகள் இரண்டனையும், அறிந்தோர் சிறப்புடை உயிர்கட்குக் கண்ணென்று சொல்லுவர்' என்று பரிமேலழகர் இக் குறளுக்கு உரை கண்டுள்ளார். அறம், பொருள், இன்பம்,

வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களைப் பெறுவதற்கு எண்ணும் எழுத்தும் கருவியாகலின், அவற்றைக் கண்ணென்றார் திருவள்ளுவர். பொதுப்படக் கூறிய கல்வி பலவற்றுள்ளும், இவை யிரண்டும் சிறந்தன என்பதை அறிகின்றோம். இக்காலத்தில் எண் என்பது கணிதம் முதலிய அறிவியற் கலைகளையும், எழுத்தென்பது இலக்கியக் கலையையும் குறிப்பதாகக் கொள்வது பொருத்தமாகும்.

கற்றவரது சிறப்பினையும், கல்லாதவரது இழிவினையும் கூறும் மற்றொரு குறளில் திருவள்ளுவர், கற்றவரைத் 'தலையாயவர்' என்றும், கல்லாதவரைக் 'கடையர்' என்றும் கூறியுள்ளார்,

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்."

'செல்வர்முன் வறியவர் நிற்குமாறு போல, தாமும் ஆசிரியர் முன் தாழ்ந்து நின்றும் கற்றவர் தலையாயினர்; அந்நிலைக்கு நாணிக் கல்லாதவர் இழிந்தாரேயாவர்' என்பது பரிமேலழகர் உரை. இக்குறளுக்கு, 'முன் இல்லார்போல் தாழ்ந்து நின்று கற்றார், பின் உடையார்; கல்லாதவர் கடையரே' என உரைப்பாரும் உண்டு. இனித் தமிழ்ப் பெரும் புலவர் வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர், 'உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றாலும், கற்றார் கடையராவரோ? ஆகார்; ஏனைக் கல்லாதவரே கடையர் என்ற கருத்துப்பட உரைத்தலும் ஒன்று' எனக் கூறியுள்ளார்.

'தன் ஆசிரியற்கு ஓர் ஊறுபாடுற்றவிடத்து அது தீர்த்தற்கு வந்து உதவியும், மிக்க பொருளைக்கொடுத்தும் வழிபாட்டு நிலைமையை வெறாது கற்றல் ஒருவற்கு அழகிது; அதற்கு என்னை காரணம் எனின், பிறப்பு ஒரு

தன்மையாகிய ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வி விசேடத்தால் தாயும் மனம் வேறுபடும்; ஒரு குடியின் கண் பிறந்த பலருள்ளும் மூத்தோன் வருகவென்னுது அவருள் அறிவுடையோன் சென்ற நெறியே அரசனும் செல்லும்; வேறுபாடு தெரியப்பட்ட நாற்குலத்துள்ளும் கீழ்க்குலத்துள் ஒருவன் கற்பின், மேற்குலத்துள் ஒருவனும் இவன் கீழ்க்குலத்தான் என்று பாராது, கல்விப் பொருட்டு அவனிடத்தே சென்று வழிபடுவான் ஆதலான்' என்னும் கருத்தமைந்த புறநானூற்றுப் பாடல் ஒன்றுண்டு (புறம் செய். 183). அப்பாட்டால், ஏக்கற்றும் கற்ருரது சிறப்பு நன்கு விளங்குகின்றது.

கற்ற பெருமக்களுக்கு, 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்ற கருத்தும், 'ஒருவன் சாந்துணேயும் கற்றல் வேண்டும்' என்ற கருத்தும் பொருந்திய அழகிய குறளே அடியில் காணலாம்.

" யாதானும் நாடாமால் ஊராமால் என்னெருவன்
சாந்துணேயும் கல்லாத வாறு."

இக்குறளுக்குப் பரிமேலழகர், 'கற்றவனுக்குத் தன் நாடும் தன் ஊருமேயன்றி, யாதானும் ஒரு நாடும் தன் சொந்த நாடாம்; யாதானும் ஓர் ஊரும் தன் சொந்த ஊராம். இங்ஙனமாயின், ஒருவன் தான் இறக்குமளவும் கல்லாது கழிகின்றது என் கருதி?' என உரை கண்டுள்ளார்.

'கற்ருேர் பெறும் சிறப்பைக் கண்டும் கல்லாதார் சாந்துணேயும் வாழ்நாட்களே வீழ் நாளாக்குவது என் கருதியோ!' எனக் கல்லாதார் பொருட்டு இரங்குவார் போன்றும், அவரை நோக்கி வெகுள்வார் போன்றும் கூறியுள்ள 'என்' என்னுஞ் சொல் ஆழ்ந்த பொருளுடைத்து.

இவ் அருங்குறட்பாவிற்குப் பரிதியார்,

''எந்தத் தேசமேயானாலும் தன் தேசமேயாம்; மாலூராகிய வைகுண்டப்பதம் மறுமைக்காம்; ஆதலால் சாமளவும் கல்வியே பயிலுவான்' என்று உரை கூறி யுள்ளார்.

இவ்வுரையைச் சிறிது விளக்கி, பேரறிஞர் வித்துவான் புருஷோத்தம நாயுடு கூறியுள்ள உரையைக் கீழே காணலாம்:

'யாதானும் நாடாம்—அறம், பொருள், இன்பங்களாகிய இம்மைப் பயன் மூன்றனையும் தெரிவித்தவாறு; மால் ஊராம்—திருமால் ஊராகிய மோட்ச உலகத்தைத் தெரிவித்தவாறு என்றது மறுமைப் பயனைத் தெரிவித்தபடி. ஆல்—ஆகையாலே, சாம் துணையும் கல்லாதவாறு என்—தான் இறக்குமளவும் கல்லாது கழிகின்றது என் கருதி? என்பது இதன் பொருளாம். சதுர்வித புருடார்த்தங்களையும் கொடுக்கக் கூடியது கல்வியாகையாலே, அதனைச் சாந்துணையும் பயிலல்வேண்டும் என்பது இச் செய்யுளின் கருத்து.'

ஒருவன் சாந்துணையும் ஏன் கற்றல் வேண்டும்? என்னும் கேள்விக்கு விடையளிப்பார்போல் ஒரு குறள் திருவாய்மலர்ந்தருளியுள்ளார் திருவள்ளுவ தேவர்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து."

ஒரு பிறப்பில் கற்ற கல்வி, ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் சென்று உதவும் என்பது திருவள்ளுவர் துணிபு.

ஒருவன் இறப்பதற்குமுன் சிறிது கற்று இறப்பினும், மறுமையில் அதனை மிக வருந்தாது கற்று விளங்குவதைக்

காணலாம். சில பிள்ளைகள் இளமையிலேயே ஆசிரியரும் வியக்கும் வண்ணம் கூரிய அறிவுடையராய்த் திகழ் வதையும், ஏனைய பிள்ளைகள் அங்ஙனம் திகழாமையையும் காண்கின்றோம். இக்காட்சியிலிருந்து முன் கற்ற கல்வி பின் வந்து உதவுதலை உய்த்துணரலாம்.

'பற்றித் தொடரும் இருவினைப் புண்ணிய பாவமுமே' என்பர் ஆன்றோர். நாம் இம்மண்ணுலகை நீத்துச் செல்லும்பொழுது நம்முடன் வருவன நாம் சேர்த்து வைக்கும் பொருள்கள் அல்ல. 'காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே' என்ற சொற்றொடரே பட்ட ணத்துப் பிள்ளையாரை முற்றத் துறந்த முனிவராக்கியது. பொருட் செல்வம், கல்விச் செல்வம் என்னும் இருவகைச் செல்வங்களுள் நம்முடன் வருவன கல்விச் செல்வமாகை யால் அதனைச் சாந்துணையும் கற்றல் வேண்டும் என்பது அறிஞர் துணிபு.

கற்ற பெருமக்களது இயல்பினை இரண்டு திருக் குறளான் இயம்பியுள்ளார் திருவள்ளுவர். அவற்றுள் ஒன்று:

"உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்."

கற்றாரைக் காணல் அரிது. கண்டாலும் அவர்க ளுடன் பழகும் பேறு பெறலரிது. கற்றாரைக் கற்றாரே காமுறுவர். கற்றரது சேர்க்கையால், கற்றாரும் கல்லாரும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்வர். கற்றரால் ஏனையோர் பெறும் நன்மைகள் பலப்பல. அத்தகைய நல்லோர் பிரிவால் மக்கள் வருந்துவர்; அவரது கூட்டத்தால் மிக மகிழ்வர். இவற்றையெல்லாம் கண்ணாரக் கண்டுள்ள திருவள்ளுவர், 'கற்ற நல்லோர் பிறர் ஒருவருடன் கூடும் காலமெல்லாம் தம்மை அவர் பெரிதும் உவக்குமாறு

கூடி, மற்று யாதானும் ஒரு வழியால் பிரிய நேரின், அவர் தம்மையே எப்பொழுதும் சிந்திக்குமாறு பிரிதல்; அதுவே கல்வியாற் சிறந்த அறிவினையுடையோர் தொழில்' என்றார்; இதற்கு மாறாகப் பேதையாரது பிரிவால் துன்ப மில்லையாகையால், 'பெரிதினிது பேதையார் கேண்மை' என நகைச்சுவை ததும்பக் கூறியுள்ளார்.

கற்றாரது இயல்பினைக் கூறும மற்றொரு திருக்குறள் :

" தாம்இன் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

கல்வியிற் சிறந்து விளங்கும் பெரியோர், அழுக்காறு முதலிய தீய குணங்களின் நீங்கி, அறம் கிடந்த உள்ளத்தராய் விளங்குவர். ஆகையால் எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும் என்று எண்ணுவதே அவரியல்பு.

'தாம் இனிதாக நுகர்வதொன்றை உலகத்தார் நுகர்ந்து இன்புறுவாராகக் கண்டால், அதற்கு இன்புறுவர் கற்றறிந்தவர்' என்பது இக்குறளுக் கெழுந்த மணக்குடவர் உரை.

இத்திருக்குறளுக்குப் பரிமேலழகர்,

'தாம் இன்புறுதற்கு ஏதுவாகிய கல்விக்கு உலகம் இன்புறுதலால், அச்சிறப்பு நோக்கி, கற்றறிந்தார், பின்னும் அதனையே விரும்புவர்' என்றார்.

கல்வியின் சிறப்பையும், கற்றாரது பெருமையையும் கண்ணாரக் கண்டு களிக்கும் ஒருவன், கற்றல் இன்றியமையாதது என்பதனையும், அவனால் கற்கப்படும் நூல்கள் இத்தகையவாய் இருக்கவேண்டும் என்பதையும், அந் நூல்களை எவ்வண்ணம் கற்கவேண்டும் என்பதனையும், அங்ஙனம் கற்பதன் பயன் யாது என்பதையும் சுருங்கக் கூறி, விளங்க வைத்துள்ள திருக்குறளைக் கீழே காணலாம்:

" கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

'கற்பவை என்றதனுன், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் உறுதிப் பொருள் உணர்த்துவன அன்றிப் பிற பொருள் உணர்த்துவன, சின்னுள், பல்பிணிச் சிற்றறிவினர்க்கு ஆகா என்பது பெற்ரும்' என்ருர் பரிமேலழகர். ரஸ்கின் என்னும் மேனுட்டுப் புலவர், தாம் செய்த சொற்பொழிவு ஒன்றில், ஒரு மணி நேரத்திற் குரிய நூல்கள் என்றும், எல்லாக் காலத்திற்கும் உரிய நூல்கள் என்றும் நூல்களை இரண்டு வகையாகப் பிரித்துக் காட்டினுர்.* நாலடியில், 'பால்போன்ற நூல்களும் நீர் போன்ற நூல்களும் இவ்வுலகில் உள; அறிவுடையோர் அன்னம்போல், நீர் போன்ற நூல்களை நீக்கிப் பால் போன்ற நூல்களைக் கற்பர்' என்ருர்.

'கசடறக் கற்றலாவது, விபரீத ஐயங்களை நீக்கி, மெய்ப் பொருளை நல்லோர் பலருடனும் பலகாலும் பயிறல்' என்ருர் பரிமேலழகர்.

நூல்களைக் கற்கும் விதத்தைப்பற்றி ரஸ்கின் கருத்தினைக் கீழே படித்து மகிழ்க :

'நீ நீண்ட நாள் இவ்வுலகில் வாழும் பேறு பெறின், பிரிட்டிஷ் பொருட்காட்சி சாலையிலுள்ள எல்லா நூல் களையும் படித்து முடித்துவிடலாம். எனினும், படியா தவன் எனவே நீ கருதப்படுவாய். ஆனுல் ஒரு நல்ல நூலில் பத்துப் பக்கம் படித்தாலும், எழுத்தெண்ணிப் படிப்பின், ஒவ்வொரு மொழியின் உட்பொருளையும் மிக

* 'All books are divisible into two classes, the books of the hour ndthe books of all time.' —Ruskin—'Of King's Treasuries.

ஆழ்ந்து கற்பின், நீ ஓரளவில் கல்விமான் எனக் கருதப் படுவாய்.'*

கற்கப்படும் நூல்களைக் கசடறக் கற்றாலும், அக் கல்விக்குத் தக நிற்கவில்லை யென்றால், அக் கல்வியால் ஒரு பயனும் இல்லையென்பார், 'நிற்க அதற்குத் தக' என்றார். கற்ற கல்விக்குத் தக இல்லறத்தில் நிற்றலை நாலடிச் செய்யுள் ஒன்று நன்கு விளக்குகின்றது (செய். 250)

'இல்லறத்தில் மனைவியுடன்கூடி வாழ்கின்றபொழுது அறம் பொருள்களுக்குக் காரணமான தொழில்களையும் உடன்பட்டுச் செய்து, அவற்றால் உள்ளனவாகும் இவ் வுலக இன்பங்களையும் அனுபவித்து, தானம் முதலிய அறத் தொழில்களையும் தகுதியுடையவர்களுக்கே செய்து, இம்மூன்று காரியங்களும் இங்ஙனம் ஒரு பிறப்பிலேயே ஒருவனுக்குத் தடை யில்லாமல் நிறைவேறுமாயின், அந்நிலைமை, பிற நாடுகள் பலவற்றிற் சென்று வியா பாரஞ் செய்து, இலாபம் பெற்று, மீண்டு தனது பட்டி னத்தை யடைந்த மரக்கலத்தை யொக்கும்' என்று சொல்வர் அறிவுடையோர்.'

கல்வியின் சிறப்பினையுணரும் மேன்மக்கள் சிறிது கற்ற அளவில் அமையாது, மேன்மேல் கற்றல் வேண்டும் என்பதைக் கீழ்வரும் திருக்குறள் வற்புறுத்தலைக் காண்க:

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு."

அறிவு பெருகவேண்டின், மேன்மேலும் கற்றல் வேண்டும்; கற்ற அளவு அறிவு ஊறும். 'நூலளவே

---

* 'You might read all the books in the British Museum if yon could live long enough, and remain utterly illiterate, uneducated person; but that if you read ten pages of a good book, letter by letter, that is to say, with real accuracy, you are for ever more in some measure an educated person.'

யாகுமாம் நுண்ணறிவு' என்பது ஔவையாரின் அமுத மொழி. ஆனால்,

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை யறியவே மிகும்"

என்னும் குறள் மேற்குறளோடு மாறுபடுவதுபோல் காணப்படினும், ஆழ்ந்து நோக்குவார்க்கு அங்ஙனம் மாறுபடாமை புலனும். "ஊழ்வினை நல்லதாக இருக்கிற வரையில் படிப்புக்கேற்ப அறிவு வளர்தலைக் கூறியது 'தொட்டனைத்து' எனத் தொடங்கும் திருக்குறள் என்றும், 'நுண்ணிய நூல்' எனத் தொடங்கும் திருக் குறள், ஊழ் நல்லதல்லாவிடத்து உள்ள நிலைமை யென்றும் வேறுபாடு அறிக" என்பது வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியரின் குறிப்புரை.

'எங்கும் பரந்த நீரைத் தோண்டி வெளிபடுத்துதல் போல, முன்னைப் பிறவிகளில் முயன்று எய்திய கல்வி யறிவு இந்தப் பிறவியில் இயற்கையறிவாக உயிரோடு ஒன்றியிருக்க, அதனைக் கல்வியான் நன்கு விளக்க வேண்டும். முயற்சி மெய் வருந்தக் கூலி தருவதுபோலக் கற்ற அளவே கல்வி மிகும். ஒருமைக்கண் கற்ற கல்வி எழுமையுந் தொடருமாதலின், கல்வியான் அறிவு வெளிப் படுவது ஒன்றே ஆவது; அறிவு புதிதன்று என்பதாம். மணற்கேணி என்றமையின், மணலில் தோண்டப்பெற்ற கேணி இடுகரையாய் எப்போதும் சிதைந்து கொண்டே யிருக்கும். சிதையச் சிதைய நீர் சுரவாது. அதுபோலக் கல்வி கற்றுவிட்டால் மறதிக்கு ஏதுவாம்; அங்ஙனம் மறக்க விடாமல் பலகாலும் பயிலுதலால் அறிவு சுரக்கச் செய்யவேண்டும் என்பதுமாம்.'*

---

*திருக்குறள் உரைவளத் தொகுப்பாசிரியர்.

## 2. கல்லாமை

திருவள்ளுவர் கல்வியின் சிறப்பைப் பத்துத் திருக் குறளான் சொல்லியும் அது முடிவு பெருமையின், உடன் பாட்டு வழியால் முன்னர்க் கூறியவர், எதிர்மறை வழியால் இவ்வதிகாரத்தில், கல்லாமையால் உளதாகும் குற்றத்தைக் கூறுகின்ருர்.

கல்லாதவரை, 'முகத்திரண்டு புண்ணுடையர்' என்றும், கடையரென்றும் முன்னதிகாரத்தில் இழித்துக் கூறிய தெய்வப் புலவர், இவ்வதிகாரத்தில்,

''உளரென்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களரனையர் கல்லா தவர்''

என்ருர்; தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையால், 'கல்லா தவர் களரனையர்' என்ருர். 'களர் தானும் பேணற்பாடு அழிந்து, உயிர்கட்கும் உணவுமுதலிய உதவாததுபோலத் தாமும் நன்கு மதிக்கற்பாடு அழிந்து, பிறர்க்கும் அறிவு முதலிய உதவார் என்பதாம்' என்பது பரிமேலழகர் உரை.

'கல்லாதார் வெறும் பிணம் ஆதலன்றிச் சிறிது உயிரோடு நடைபெறுதலை உடையரென்று சொல்லிக் கொள்ளும் அளவின்றி, மற்று வித்தியது ஒன்று விளைதல் சிறப்பில்லாத களர்த்தரையே ஒப்பு; அவர்க்குக் கல்வியினுல் விளையும் மறுமை ஆக்கமும் இல்லை' என்பது காளிங்கர் உரை.

பாரதத்தில் பழம் பொருந்து சருக்கத்தில் நகுலன், கல்லாதவரை, 'முருக்கின் மணமிலா மலர்' என இழித்துக் கூறியதைக் கீழ்வரும் பாடலால் அறிக :

" குலமிக வுடையர் எழின்மிக வுடையர்
குறைவில் செல்வமும் மிகவுடையர்
நலமிக வுடையர் என்னினும் கல்வி
ஞானம் அற்பமும் இலாதவரை
வலமிகு திகிரிச் செங்கையாய் முருக்கின்
மணமிலா மலரென மதிப்பேன்
சலமிகு புவியில் என்றனன் வாகைத்
தார்புனை தாரைமா வல்லான்."

கல்லா மாக்களைச் சவட்டு நிலமாக்கிய திருவள்ளுவர், மற்றொரு குறளால், மிருகங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றார்:

" விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்."

"மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உணவு, உறக்கம், அச்சம், ஆசை முதலிய பல பொதுக்குணங்களாக இருப்பினும், மிருகங்களிலும் மனிதர் சிறந்தவர் என்பதற்கு ஏற்ற விவேக முதிர்ச்சி கற்றவர்க்கே உண்டு.'

இக்குறட்பாவிற்குப் பரிமேலழகர், 'விலங்கொடு நோக்க மக்கள் எத்துணை நன்மையுடையர், அத்துணைத் தீமையுடையர், விளங்கிய நூலைக் கற்றாரோடு நோக்கக் கல்லாதவர்' என உரை கண்டுள்ளார்.

'நாற்கால் சீவனாகிய மிருகத்திற்கும் மனிதற்கும் எத்தனை தூரமுண்டு; அத்தனை தூரமுண்டு கல்லாதாற்கும் கல்வியுள்ள பேர்க்கும்' என்பது பரிதியார் உரை.

கல்லாதாரை மணக்குடவர் விலங்கென்றே கூறுகின்றார்.

கல்வியில்லையாயினும் மேல்சாதியில் பிறந்த காரணத்தால் ஒருவற்குப் பெருமையில்லையோ எனின், உடலோடு

ஒழியும் சாதி உயர்வினும், உயிரோடு செல்லும் கல்வியின் உயர்வே சிறப்புடையது என்பதைக் கீழ்வரும் திருக் குறளால் அறியலாம்:

" மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு."

செல்வமும் நற்குடிப்பிறப்பும் ஒருவனை உயர்த்த வல்லன எனினும், அவன்பால் கல்வி யில்லையேல், அவனை அறிஞர் எவரும் உயர்வாக எண்ணார்.

மேற்குலத்தில் தோன்றினும், கல்வியில்லையேல் ஒருவற்கு உலகில் மதிப்பில்லை என்று மேல் குறளில் கூறிய திருவள்ளுவர், அவன் வடிவழகிற் சிறந்து விளங்கினும் பயனில்லை என்று கூறிய திருக்குறளைக் காண்க:

" நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று."

ஆண்களும் பெண்களும் வடிவழகிற் சிறந்து விளங்க வேண்டும் என்பது சிலர் கொள்கை. அழகை வெறுப்பார் உலகில் இல்லை. ஆனால், எது அழகு என்பதை ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும்.

" குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு"

என நாலடியார் கூறுவதிலிருந்து, 'கல்வியழகே யழகு' என்பது நன்கு புலனாகின்றது.

மகனாகப் பிறந்தவன் அறிவுடையவனாகத் திகழ்தல் வேண்டும். அவ்வறிவு, 'நுண்ணிதாய் மாட்சிமைப்பட்டுப் பல நன்னூல்களில் நுழைந்திருத்தல்வேண்டும்' என் கின்றார் பேரறிஞராக விளங்கிய திருவள்ளுவ தேவர்.

" நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை
பண்ணப் பணைத்த பெருஞ்செல்வம்"

என்பதிலிருந்து நுண்ணறிவே பெருஞ்செல்வ மென்றும், அஃதின்மையே வறுமை யென்றும் அறிகின்ருேம்.

அறிவை, 'மாட்சிமைப்பட்ட அறிவு' எனத் திருவள்ளுவர் கூறியுள்ளதை நீள நினைந்த பரிமேலழகர்,

'அறிவிற்கு மாட்சிமையாவது, பொருள்களைக் கடிதிற் காண்டலும், மறவாமையும் முதலாயின என உரை கூறிய நயம் பெரிதும் பாராட்டற்பாலது. இத்தகைய அறிவில்லாதவனது எழிலும் நலனும், 'சுதையால் மாட்சிமைப்படப் புனைந்த பாவையுடைய எழுச்சியும் அழகும் போலும்' என்கின்ருர் திருவள்ளுவர்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினர்க்கினியர், தொல்காப்பியப் பொருளதிகார வுரையில், 'எழில்' என்னும் சொற்கு விளக்கம் கூற வந்த இடத்து, 'எழிலாவது' வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி, இன்னும் வளரும் என்பது போன்று காட்டுதல்' என்ருர்.

கல்வியிற் சிறந்த பெரியோர், மாணவை மண்ணுறுத் தலைக் காணும் கல்லாதார், தாமும் அங்ஙனம் அவையை அலங்கரிக்க விரும்பிச் சொற்பொழிவாற்றத் துணியின், அது சதுரங்கக் கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பதனை ஒக்கும். கற்ருேரும் மற்ருேரும் அடங்கிய அவையில் கல்லாதார் சொற்பொழிவாற்றுதல் எங்ஙனம் கைகூடும்? கற்ருேருள்ளும் சிலரே சொற்பொழிவாற்றும் திறன் பெற்றுத் திகழ்கின்றனர். இதனுலன்ருே குமரகுருபரர், 'மாணவை மண்ணுறுத்தும் செல்வமும் உண்டு சிலர்க்கு' என்று கூறினர். சொல்லாலும் பொருளாலும் அவையை அழகு செய்ய வேண்டுமென்று விரும்பும் ஒருவன் பல நூல்களை ஆழ்ந்து கற்றிருத்தல் வேண்டும் என்பதை மனத்தில் எண்ணிய திருவள்ளுவர்,

"அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கொட்டி கொளல்"

என்றார்.

கல்லாதவரும் நனி நல்லராதற்கு உபாயம் கூறுகின்றார் திருவள்ளுவர்:

"கல்லா தவரும் நனிநல்லர் கற்றார்முன்
சொல்லா திருக்கப் பெறின்."

கல்லாதவர் கற்றார்முன் இருக்க நேரின், அடக்கத்தினை மேற்கொண்டு, ஒன்றனையும் சொல்லாதிருத்தல் கூடுமாயின், அவரும் மிக நல்லவராவர்.

'சொல்லாதிருக்கப் பெறின்' என்றதனால், 'அங்ஙனம் கல்லாதார் அடக்கமுடையவராக இருத்தல் அரிது' என்பது தெரிகின்றது.

திருவள்ளுவர் கல்லாதவர் நிலைக்கு மிக இரங்கி, அவர் நல்லராதற்கு நா அடக்கமாகிய உபாயத்தையும் சொல்லியருளினார். ஆனால், நாலடிச் செய்யுள், கல்லாதவர்பால் சிறிதும் இரக்கம் காட்டாது,

"கல்லாது நீண்ட ஒருவன் உலகத்து
நல்லறி வாளர் இடைப்புக்கு—மெல்ல
இருப்பினும் நாயிருந் தற்றே இராஅ
துரைப்பினும் நாய்குரைத் தற்று"

என்று அவரை மிக இழித்துக் கூறியுளது.

மக்களுக்கு இயல்பாக அறிவு அமைந்துள்ளதை யாவரும் அறிவர். அவ்வறிவினை இயற்கையறிவென்றும், வருந்திப் பெறும் கல்வியறிவைச் செயற்கை யறிவென்றும் வகைப்படுத்திக் கூறுவர் அறிஞர். இயற்கையறிவு, செயற்கை யறிவுடன் கூடிய பொழுதுதான் சிறந்து விளங்கும். சிலர் கல்வியறிவின்றியும் நல்லறிவுடையவர் போல் காணப்படுகின்றனரே, அவரது அறிவை உலகம்

கொள்ளுமா? என்று கேட்போரது ஐயத்தை நீக்குவார் போல் திருவள்ளுவர் கூறியுள்ள திருக்குறளைக் காணலாம்:

"கல்லா தவன் ஒட்பம் கழியநன் றாயினும்
கொள்ளார் அறிவுடை யார்."

கல்லாதவரது அறிவு நன்றாகாது. ஆயிற்றாயினும், நத்தை வயலில் ஊர்ந்து செல்லும்போது சில வேளையில் அ, ஆ வைப் போன்ற வடிவெழுத்துத் தோன்றும். அவ்வெழுத்தை யொத்தது அவர்களது அறிவு. இவ்வெழுத்தினைப் பரிமேலழகர், 'ஏரலெழுத்து' என்பர். இவ்வண்ணம் எப்பொழுதோ ஒரு காலத்து வெளிப்படும் கல்லாதாரது அறிவினை அறிவுடையார் கொள்ளார்.

மக்களே போல்வர் கல்லார். அவர் கல்லாரே ஆயினும் தமது செல்வப் பெருக்காலும் வடிவழகாலும் தம்மைப் பெரிதும் மதித்துத் திரிவர். இங்ஙனம் தருக்கித் திரிகின்றவர் கல்லார் என்பதை எங்ஙனம் அறிவது என வினவுவாரை நோக்கித் திருவள்ளுவப் பெருந்தகை,

"கல்லா வொருவன் தகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்"

என்றனர்.

'சொல்லாடச் சோர்வு படும்' என்றதனால், கல்லாதாரது பெருமை யெல்லாம், கற்றார் அவர்களை நெருங்கிச் சொல்லாடும் துணையே நிற்கும் என்று அறிகின்றோம்.

'ஒப்புரவறிதல்' என்னும் அதிகாரத்தில், 'செல்வம் நயனுடையான்கண் படின்' என்றும், 'செல்வம் பெருந்தகையான்கண் படின்' என்றும் திருவள்ளுவர் கூறியிருப்பதிலிருந்து, அங்ஙனம் நல்லார்பால் செல்வம் படுதல் இல்லை யென்பதை அறிகின்றோம். ஒருகால் அத்தகைய மேன்மக்களிடம் செல்வம் உண்டானால், அது, 'பயன்படு

மரம் ஊர் நடுவே பழுத்தாற்போலும்' என்றும், 'எல்லா வுறுப்பும் பிணிகட்கு மருந்தாய், தப்பாத மரத்தை யொக்கும்' என்றும் கூறினர் தெய்வப் புலவர்; உலக நடையை விரும்பிச் செய்யும் பேரறிவாளனிடம் செல்வம் உண்டானுல், அது ஊருணியில் நீர் நிறைந்தாற்போல் பலர்க்கும் பயன்படும் என்றும் கூறினர். இவ்வண்ணம் அறத்துப்பாலில் திருவாய் மலர்ந்தருளிய திருவள்ளுவர், ஈண்டுக் கல்லார்கண் பட்ட திருவின் கொடுமையை எண்ணிப் பார்த்து:

> "நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னுதே
> கல்லார்கண் பட்ட திரு"

என்ருர். நல்லாரிடம் உள்ள திரு, நானிலத்திற்கே நன்மை விளக்கும் என்பதில் யாருக்கும் சிறிதும் ஐயமின்று. நல்லார் வறுமைப்பிணியால் வாடுவரேல், அவ்வறு மையைக் காணும் உலகம் மிக வருந்தும். எனினும், அந் நல்லார், வறுமையிலும் செம்மையராய், சுடச்சுடரும் பொன்போல் வறுமைப் பிணி வருத்த வருத்த, நற்குண நற்செயல்களின் சிறிதும் நீங்காராய் ஒளியுடன் விளங் குவர். நல்லாரது வறுமையான் உலகிற்கு உண்டாகும் தீமையினும், கல்லாரது செல்வத்தான் உலகிற்கு விளையும் தீமை மிகப்பெரிது என்பது திருவள்ளுவரது திருவுள்ளம்.

# 3. கேள்வி

திருவள்ளுவர் பல செல்வங்களைப் பற்றிப் பேசியுள்ளார். கல்வியென்னும் அதிகாரத்தில், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றவர், ஈண்டு,

> "செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
> செல்வத்துள் எல்லாம் தலை"

என்றனர். இதிலிருந்து கல்விச் செல்வத்தைக் காட்டிலும் கேள்விச் செல்வம் சிறந்தது என்பதை யறிந்து மகிழ்கின்றோம். கேள்விச் செல்வம், கற்றவர்க்கு அவரது கல்வியாலாகிய அறிவைப் பெருக்கி உறுதிப்படுத்தும்; கல்லாதார்க்குக் கல்வியறிவைப் புதிதாக வுண்டாக்கும். உழைத்தும் பயின்றும் பெறும் பொருட்செல்வம், கல்விச் செல்வம் இரண்டினும், இருந்து எளிதிற் கொள்ளும் செவிச் செல்வம் சிறந்தது என்பதை யாவரும் கொள்வர்.

செவிச் செல்வமாவது கேள்வியான் எல்லாப் பொருளையும் அறிதல். பொருளான் வருவனவற்றைப் பிற செல்வங்கள் என்றார். 'அவை நிலையா ஆகலானும், துன்ப விளைவின ஆகலானும் இது தலையாயிற்று' என்பது பரிமேலழகரது விளக்கம்.

கேள்விச் செல்வத்தின் சிறப்பினை யுணர்ந்தவர்கள் ஏனைய செல்வங்களில் உள்ள பற்றை விட்டு, இக்கேள்விச் செல்வத்தையே பெற முயலவேண்டும் என்பது திருவள்ளுவர் கருத்து.

மேற்பாட்டில் கல்வி முதலிய பல செல்வங்களைக் காட்டிலும் கேள்வி சிறந்தது என்று கூறியவர்,

மற்ருெரு பாட்டில், உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவினும் கேள்வி சிறந்தது என்கிருர் :

"செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்."

இத்திருக்குறளால் கேள்வி, செவிக்கு உணவாதலை அறிகின்ருேம்.

"செவிக்கு உணவாகிய கேள்வி இல்லாதபொழுது, வயிற்றுக்கும் சிறிது உணவு இடப்படும். சுவை மிகுதியும் பிற்பயத்தலுமுடைய கேள்வி உள்ளபொழுது வெறுக்கப் படுதலான், 'இல்லாதபோழ்து' என்றும், பெரிதாயவழித் தேடல் துன்பமேயன்றி, நோயும் பெருகுதலான் 'சிறிது' என்றும், அதுதானும் பின்னிருந்து கேட்டற் பொருட் டாகலான் 'ஈயப்படும்' என்றும் கூறினுர். ஈதல் வயிற்றது இழிவு தோன்ற நின்றது" என்பது பரிமேலழகரது நுட்ப வுரை.

செவிக்கு உணவாகிய கேள்வி யில்லாத போழ்தும் சிறிதுதான் உட்கொள்ள வேண்டும் என்பதற்குரிய கார ணத்தைத் திருவள்ளுவர் மருந்து என்னும் அதிகாரத்தில் கூறியுள்ளார் :

"இழிவறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்
கழிபேர் இரையான்கண் நோய்."

சீரணமாகும் அளவினை அறிந்து உண்பவன்கண் இன்பம் நிலைத்து நிற்பதுபோல் மிக உண்பான்கண் நோய் நீங்காது நிலைத்து நிற்கும் என்பது இக் குறளின் பொருள்.

கேள்வியின் சிறப்பை இரண்டு திருக்குறளால் கூறிய தெய்வப் புலவர், அக் கேள்விச் செல்வத்தையுடைய பெரியோரது சிறப்பினை ஒரு குறளான் அழகுறக் கூறி யுள்ளார் :

"செவியுணவிற் கேள்வி யுடையார் அவியுணவின்
ஆன்றாரோடு ஒப்பர் நிலத்து."

இல்வாழ்க்கை யென்னும் அதிகாரத்தில், 'இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்பவன் தேவனுள் ஒருவனாக வைத்து நன்கு மதிக்கப்படுவான்' என்று சொன்ன திருவள்ளுவர், ஈண்டுச் 'செவியுணவாகிய கேள்வியினையுடையார் அவியுணவினையுடைய தேவரோடு ஒப்பர்' என்கின்றார். நூற் பொருள்களைக் கேட்டவர் விண்ணுலக இன்பம் போன்ற இன்பத்தை இவ்வுலகிற் பெறுவர் என்பது கருத்து.

"அறிவால் நிறைந்தமையான் 'ஆன்றார்' என்றும், துன்பம் அறியாமையால் 'தேவரோடு ஒப்பர்' என்றும் கூறினார்" என்பது பரிமேலழகர் உரை.

'கேள்விச் செல்வத்தையும் மதி நுட்பத்தையு முடையவர்களுடன் கூடியிருந்து மகிழ்தலைக் காட்டிலும் இன்பம் தருவதாயிருப்பின், தேவர்களது நகரமாகிய அமராவதியை யாம் காண்பாம்' என்னும் கருத்தமைந்த நாலடிச் செய்யுளைக் கீழே படித்து மகிழலாம்:

"தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி."

* 'கற்றோர் நேசத்தைப்போலச் சுவர்க்காநுபவம் தத்துவ ஞானத்துக்கும் முத்தி பெறுவதற்கும் ஏதுவாகாததனால், கற்றவர்களோடு சிநேகித்து அனுபவிக்கும் ஆநந்தம் சுவர்க்காநுபவத்தால் உண்டாகும் ஆநந்தத்தினும் சிறந்ததென்பது கருத்து. அறிவுடையோருடன் கூடி மகிழ்தலினும் இனிய தன்றாதலின், தேவர் பதியை

* வை. மு. ச., சே. கி.

யாம் காணக் கடவேமல்லேம் எனக் கற்றறிந்தோரது கூட்டுறவின் அருமை பெருமைகளைத் தெரிவித்தபடி.'

கேள்விச் செல்வமுடையாரது சிறப்பினைக் கூறிய திருவள்ளுவர், அக்கேள்வியான் வரும் நன்மையை நான்கு திருக்குறளான் நன்கு விளக்கியுள்ளார். அவற்றுள் ஒன்றினைக் கீழே காண்க:

" கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு
ஒற்கத்தின் ஊற்றாந் துணை."

ஆண்மகனாகப் பிறந்தவன், உயிர்க்கு உறுதி பயக்கும் சிறந்த நூல்களைக் (அறம், பொருள், இன்பம், வீட்டைப் பற்றிய நூல்களை) கற்றல் வேண்டும். அங்ஙனம் கல்லாதவன், கற்ற பெருமக்களை நோக்கி, அவர் கூறுவனவற்றை ஊன்றிக் கேட்டு உயர்நிலையடைதல் வேண்டும். கல்வியானது எப்படி 'ஊறுங்கவல் ஒன்று உற்றுழியும் கைகொடுக்குமோ,' அதேபோல் கேள்வியும், ஒருவனுக்குத் தளர்ச்சி வந்தவிடத்தும் துணையாய் நிற்கும்.

'இவ்வுலகத்துள் ஒருவன் கற்கும் நெறியினால் கற்கப் பெற்றிலனாயினும், கற்றுணர்ந்த சான்றோருழைச் சென்று வழிபட்டுப் பயிலக் கேட்க. மற்று, அக்கேள்வியானது அங்ஙனம் கேட்ட ஒப்பிறந்தோனுக்கு நரகினுட் சென்று விழாது மறுமை நெறிச் செல்லுதற்குப் பெரியதோர் உறுதித்துணை' என்பது காளிங்கரது உரை.

" இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்."

இது கேள்வியின் பயனைத் தெரிவிக்கும் மற்றொரு குறட்பா. மேற் குறளில், 'கற்றிலனாயினும் கேட்க' என்றார். யார் சொல்லைக் கேட்டல் வேண்டும்? என்று வினவுவோரை நோக்கி, 'ஒழுக்கமுடையார் வாய்ச்சொல்' என்றார் தெய்வப்புலவர். கற்றவர் வாய்ச்சொல் கேட்டற்

குரியது என்று திருவள்ளுவர் கூறவில்லை. காரணம் கற்றவர்களெல்லாம் கல்வியின் பயனாகிய ஒழுக்கத்தைப் பெற்று விளங்குவதில்லை என்பதே.

'உலகத்தோடு பொருந்த ஒழுகுதலைக் கல்லாதார், பல நூல்களையும் கற்றாராயினும் அறிவில்லதவரே' என்றும், 'மறந்தும் தீய சொற்களைத் தம் வாயால் சொல்ல ஒழுக்கமுடையவர்க்கு முடியா' என்றுமுள்ள கருத்தமைந்த திருக்குறட்பாக்களை ஈண்டுச் சிந்தித்தல் தகும்.

இவ்வுலகினைத் திருவள்ளுவப் பெருந்தகை, வழுக்கு தலையுடைய சேற்று நிலமாகக் காண்கின்றார். இதில் இயங்குவார்க்குப் பெரியோரது உறுதிச் சொல்லாகிய ஊன்றுகோல் இல்லையேல், அவர்கள் பல இடங்களில் விழுந்து துன்புறுவர் என்பது நன்கு புலனாகின்றது.

"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்."

இக்குறளும் கேள்வியான் விளையும் நன்மையையே கூறுகின்றது.

'கண்டது கேட்கப் பண்டிதன் ஆவான்' என்ற பழமொழி வழங்கினாலும், அங்ஙனம் கேட்டல் நன்றன்று என்பது திருவள்ளுவர் கருத்து. அதனால் அப்பேரறிஞர், 'எனைத்தானும் நல்லவை கேட்க' என்றார். நல்லார் வாயிலிருந்து நல்ல சொற்களே வரும். நல்லார் யார்? கல்வி, கேள்வி, அறிவு ஒழுக்கங்களை யுடையவரே நல்லார். வழுக்கியும் அவர் வாயிலிருத்து தீய சொற்கள் பிறத்தல் இல்லை என்பது திருவள்ளுவர் துணிபு.

'எவ்வளவைத்தேனும், சிறிது என்று இகழாது, சான்றோருழைச் சென்று, நல்லவற்றிலே சில கேட்டுக்கொள்க. அது சிறிதேயாயினும் ஒருவர்க்குப் பெரிய உபதேசமாய்

முடியும்; ஆகலான் அமைந்த பெருமையவாகிய முத்தியைக் கொடுக்கும்' என்பது காளிங்கரது உரை.

நிறைந்த பெருமையைப் பெற்று, இவ்வுலகில் சிறந்து விளங்க வேண்டும் என்று எண்ணுகின்றவர்கள் சிறிதாயினும் உறுதிப் பொருள்களை நல்லாரிடம் கேட்டல் வேண்டும்.

"பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லார் இழைத்துணர்ந்து
ஈண்டிய கேள்வி யவர்."

'ஒரு பொருளைத் தப்ப வுணர்ந்தாலும், அறிவின்மையாயின சொல்லார், ஆராய்ந்து உணர்ந்து நிரம்பிய கேள்வியை யுடையார்' என்பது மணக்குடவர் உரை.

கல்விச் செல்வமில்லாதவரைக் குருடர் என்று சொன்ன திருவள்ளுவர், கேள்விச் செல்வமில்லாதவர்களைச் செவிடர் என்று கூறுகின்றார்:

" கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி."

செவியில் இயற்கையாக வுள்ள தொளை, நூற்பொருள் நுழைவதற்கு வழியாகாதபொழுது, அச்செவி சிறப்பித்துக் கூறத்தக்கதன்று. செவி படைத்ததற்குப் பயன் நூற்பொருள் கேட்டலே.

ஔவையாரது கல்வியின் சிறப்பை உணராத ஏனன் என்பவன், பொருட் செல்வம் பெற்றிருந்தும், கல்வி கேள்விச் செல்வங்களையும் நற்குணச் செல்வங்களையும் பெறாத காரணத்தால் ஔவையாரது வருகையால் மகிழாது கதவடைத்து உள்ளேயிருந்தான். அவனது செயலைக் கண்ட ஔவையார், அவனுக்குச் செவியிருந்தும், கேள்விச் செல்வத்தைப் பெறுதற்குரிய செவியின்மைக்கு மிக வருந்தினாள் என்பர்.

திருநாவுக்கரசரும், செவிகளை முன்னிலைப்படுத்தி, 'செவிகாள், எம் இறை செம்பவள எரிபோல் மேனிப் பிரான் திறம் எப்போதும் கேண்மின்கள்' என்று நல்லுபதேசம் செய்தருளினர்.

" மூவுலகும் ஈரடியான் முறைநிரம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடும் கான்போந்து
சோவரணம் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே"

என்னும் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவைச் செய்யுளும் இங்குச் சிந்தித்தற்குரியது.

திருவள்ளுவர், 'இனியவை கூறல்' என்னும் அதிகாரத்தில், 'பணிவுடையன் இன்சொலனாதல் ஒருவற்கு அணி' என்று கூறினர். இவ்வதிகாரத்தில், ஒருவன் பணிந்த மொழியினையுடையனாக விரும்பின், நுண்ணிதாகிய கேள்விச் செல்வத்தை யுடையவனாதல் வேண்டும்' என்கின்றார்:

" நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய
வாயினர் ஆதல் அரிது."

தமது நிலையையும் பிறரது நிலையையும் அறிவிக்கும் கல்வி கேள்விகளையுடையவர், பிறரிடத்து மிக்க வணக்கத்துடன் பேசுவர். அவரல்லாதார், அப்படிப் பேசாமல் தம்மைத் தாமே வியந்து பேசிக்கொள்வர். வீடணன் அடைக்கலம் புக வந்தபொழுது சுக்கிரீவன் முதலியோர் அவ்வரக்கனுக்கு அடைக்கலம் அளித்தல் தக்கதன்று என்று கூறினர்கள். அவர்கள் கருத்துக்களையெல்லாம் கேட்ட பின்னர், கருணையின் வடிவாய் விளங்கிய இராமபிரான், அநுமனைப் பார்த்து, 'செறிபெருங் கேள்வியாய், கருத்து என் செப்பு' என்றான். அப்பொழுது நேரிலா

அறிவனுகிய அநுமன், பேரறிவின் வடிவாய் விளங்கிய பெருமகனுகிய இராமனை நோக்கி,

"இணங்கினர் அறிவிலர் எனினும் எண்ணுங்கால்
கணங்கொள்கை நம்மனோர் கடன்மை காணென
வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன்
நுணங்கிய கேள்வியான் நுவல்வ தாயினன்"

என்று கம்பநாட்டாழ்வார் தாம் கூறிய செய்யுளில் திருவள்ளுவர் கருத்தை, 'வணங்கிய சென்னியன் மறைத்த வாயினன் நுணங்கிய கேள்வியன்' என்ற தொடரில் அமைத்துள்ள அழகு பாராட்டற்குரியது.

கேள்விச் செல்வம் இல்லாதார் தமக்கும் பிறர்க்கும் பயன்படார். ஆகையால் அவர்கள் வாழினும் அழியினும் உலகிற்கு வருவது ஒன்றுமில்லை யென்பதைக் கீழ்வரும் குறளால் அறியலாம்:

"செவியின் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என்?"

சுவை, செவிச்சுவை, வாய்ச்சுவை யென இருவகைப் படும். செவியால் நுகரப்படும் சுவை, சொற்சுவையும் பொருட்சுவையுமாம். சொற்சுவை, குணம், அலங்காரம் என இருவகைப்படும். பொருட்சுவை, காமம், நகை, கருணை, வீரம், வெகுளி, அச்சம், இழிப்பு, வியப்பு, சாந்தம் என ஒன்பது வகைப்படும். இதனை வடமொழியாளர் நவ ரசம் என்பர். வாயான் நுகரப்படும் சுவை ஆறும். அவை: கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என்பன. வாயான் நுகரப்படும் சுவை மக்களுக்கும் விலங்குகட்கும் பொது. செவியின் சுவை மக்களுக்கே உரியது. அச்சுவையினை யுணராத மக்கள் மக்களர்கார். ஆகையால் அவர்களை மாக்கள் எனத் திருவள்ளுவர் இழித்துக் கூறியுள்ளார்.

" மாவும் மாக்களும் ஐயறிவுடைய
மக்கள் தாமே ஆறறி வுடைய"

எனத் தொல்காப்பியர் கூறியதிலிருந்து ஐயறிவுடைய விலங்கையொத்த மக்களும் உண்டு என்பதும், அவர்கள் மாக்கள் எனப்படுவர் என்பதும் புலனுகின்றன.

கல்வியிற் பெரிய கம்பநாடர், கல்வி, கேள்வி முதலியவற்றைப் பற்றிக் கூறியுள்ள அரிய செய்யுள் ஒன்று நினைவிற்கு வருகின்றது.

'அயோத்தியென்னும் நகரத்தில், கல்வியாகிய ஒரு மரமூலம் முளைத்து வளர்ந்து, கேள்வியாகிய கிளை கிளைத்து, தவமாகிய தழை தழைத்து, அன்பாகிய அரும்பு அரும்பி, அறமாகிய மலர் மலர்ந்து, போகமாகிய பழம் பழுத்தது' என்று கூறும்படி, அந்நகரத்து மாந்தர், கல்வி, கேள்வி, தவம், அன்பு, அறம், போகம் ஆகியவைகளைச் சிறப்பாகவுடையார் என்னும் கருத்துடையது அச் செய்யுள்:

" ஏகம் முதற்கல்வி முளைத்தெழுந்து எண்ணில் கேள்வி
ஆகம் முதல்திண் பணைபோக்கி அருந்த வத்தின்
சாகம் தழைத்து அன்பரும்பித் தருமம் மலர்ந்து
போகக் கனியொன்று பழுத்தது போலு மன்றே."

# 4 அறிவுடைமை

திருவள்ளுவர் கல்வி கேள்விகளைப்பற்றி மேலே கூறினர். அவ்விருவகைச் செல்வங்களைப் பெறுவது அறிவுச் செல்வத்தைப் பெறும்பொருட்டே. ஆகையால் இனி, அறிவுடைமைபற்றிக் கூறத் தொடங்குகின்ருர். அங்ஙனம் தொடங்குகின்றவர் ஐந்து திருக்குறளான் அறிவினது இலக்கணத்தைக் கூறுகின்ருர்:

"சென்ற இடத்தால் செலவிடாத் தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு."

அறிவிலா மக்கள் மனம்போன போக்கெல்லாம் சென்று, அல்லற்பட்டு அழிவதைக் கண்ணுரக் காண்கின்ருேம். ஆகையால் குதிரைப்பாகன் குதிரையை நன்னிலமறிந்து செலுத்தி, நல்ல ஆற்றலுடையவன் என்று புகழ் பெறுவதுபோல், மனத்தைத் தீநெறியின் நீக்கி, நன்னெறிக்கண் செலுத்துவதே அறிவு என்கின்ருர் திருவள்ளுவப் பேரறிஞர்.

'காற்றிலும் கடிய வேகமுடைமை நெஞ்சிற்கு இயல்பு ஆகலான், அங்ஙனம் அஃது ஓடியவழி, ஓட விட்டுக் கொடாது, மற்று அதனை யொழித்து, அவ்வுள்ளத்தை நீக்கி, நன்மைப் பகுதியிலே வருந்தியும் செலுத்தவல்லது அறிவாவது' என்பது காளிங்கர் உரை.

கல்வியிற் பெரிய கம்பரும், கோசலநாட்டு மக்களைப் பற்றிக் கூறியபொழுது, அவர்கள் தம் ஐம்பொறிகளையும் நன்னெறியிற் செலுத்தும் பேரறிவு படைத்த பெருமக்கள் என்று கூறியிருப்பது இங்குச் சிந்தித்தற்குரியது.

அறிவின் இலக்கணத்தைக் கூறும் மற்றொரு அருங் குறளைக் கீழே காணலாம்:

" எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."

'குணங்கள் மூன்றும் மாறிமாறி வருதல் யாவர்க்கும் உண்மையின், உயர்ந்த பொருள் இழிந்தார் வாயினும், இழிந்த பொருள் உயர்ந்தார் வாயினும், உறுதிப் பொருள் பகைவர் வாயினும், கெடு பொருள் நட்டார் வாயினும் ஒரோவழிக் கேட்கப்படுதலான், எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் என்றார்' என்பது பரிமேலழகரது உரை.

'கள்ளியினிடம் பிறக்கும் அகிலையும், கரிய காக்கையது சொல்லையும் பிறந்த இடம் நோக்கி இகழாது உயர்வாகக் கொள்ளுமாறுபோல், கீழாயினோர் வாயிற் பிறந்ததேயாயினும், நல்லுரையாயின் இகழாது ஒழிக' என்ற கருத்துடைய பழமொழிச் செய்யுள் ஒன்றுண்டு.

எத்துணை உயர்ந்தவராயிருப்பினும், எத்துணைத் தாழ்ந்தவராயிருப்பினும், அவர்களது உயர்வு தாழ்வினைக் கருதாது, அவர்கள் கூறும் சொல் குறிக்கும் பயன் நோக்கிக் கொள்ளுதலும் தள்ளுதலும் செய்வதே அறிவு.

'யாதானும் ஒரு பொருளைக் கீழ்ச் சொன்ன தம் மரபின் உயர்ந்தோர் மாட்டுக் கேட்பினும் கேட்க; மற்று ஏனை இழிந்தோரிடத்துக் கேட்பினும் கேட்க. நாம் கேட்கின்ற பெரும் பொருளின்கண் சிறிதும் குல வேற்றுமை இல்லாமையான், அவர் உரைக்கும் பெரும் பொருளின் உண்மையைத் தெரியக் காண்பதும், மற்று ஏனைய சிறு பொருளை விரும்பாது விடுத்தலுமே அறிவினது இயல்பு' என்பது காளிங்கரது உரை.

திருவள்ளுவர், 'மெய்யுணர்தல்' என்னும் அதிகாரத்தில்,

" எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று கூறிய திருக்குறளும் ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

அறிவின் இலக்கணத்தைக் கூறும் வேறொரு குறள்:

" எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்பது அறிவு."

அரிய பொருள்களைப் பிறர்க் கெடுத்துரைக்கும் பேரறிஞர், கேட்போர் மனங் கொளச் சொல்லும் சொற்களை வழுவின்றி எளிமை பொருந்தச் சொல்லுவர். பிறர் சொல்லக் கேட்குஞ் சொற்கள் இனிது விளங்கா வாயினும், வழுவோடு கூடியிருப்பினும், அச்சொற்களின் பயனை மாத்திரம் கொண்டு, அச்சொற்களைப் பொருட் படுத்தார்.

'தாம் சொல்லும் சொல்லின் நுண்மையை மற்றும் எப்பெற்றியோரும் நெஞ்சினுல் தேர்ந்து உணரும் பொரு ளாகவும் சொல்லி, மற்று அதுவேயுமன்றி, அதனைக் கேட்போர் செவிக்குப் பெரிதும் இனிதாகவும் சொல்லிப் பின்னும் தாம் பிறர் வாய்ச்சொற்களில் தீர்ந்த நுண்ணிய பொருளையும் அங்ஙனம் காண வல்லது யாது? மற்று அதுவே அறிவாவது' என்பது காளிங்கர் உரை.

'பிறர்க்குத் தாம் சொல்லுங்கால் அவர் பின்னுங் கேட்டலை விரும்புமாறு சொல்லி, அவர் தமக்குச் சொல் லுங்கால் அச்சொல்லின் பயனைக் கொண்டொழிதல் குற்றமற்றூரது துணிபு' என்னும் கருத்தமைந்த திருக் குறளை இங்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம்:

" வேட்பத்தாம் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடல்
மாட்சியின் மாசற்றூர் கோள்."

எது அறிவு என்பதை நன்கு விளக்க எழுந்துள்ள மற்றொரு திருக்குறளைப் படித்து மகிழலாம்:

" உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு."

'உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம். அந்நட்பின்கண் முன் மலர்தலும் பின் கூம்புதலுமின்றி ஒரு நிலையனுவது அறிவாம். உலகம் என்பது ஈண்டு உயர்ந்தோரை, அவரோடு கயப்பூப்போல வேறுபடாது, கோட்டுப் பூப்போல ஒரு நிலையே நட்பாளுயின் எல்லா இன்பமும் எய்துமாகலின், அதனை அறிவு என்ருர். இதனைச் செல்வத்தின் மலர்தலும் நல்குரலில் கூம்பலும் இல்லது என்று உரைப்பாரும் உளர்' என்பது பரிமேலழகர் உரை.

மேலே வந்துள்ள திருக்குறளில் ஒட்பம், அறிவு என்னும் இரு சொற்கள் வந்துள. இவ்விரண்டு சொற்களுக்கும் 'அறிவு' என்பதே பொருள் என்பர் பலர். இங்ஙனம் ஒரே பொருளைக் குறிக்கும் இரண்டு சொற்களை இத்திருக்குறளில் திருவள்ளுவர் பெய்திருப்பாரா என்பது ஐயத்திற்குரியது. இவ்விரண்டு சொற்களுக்கும் பொருளில் சிறிதாவது வேறுபாடு இருக்கவேண்டும். அவ்வேறுபாடு நன்ருய்ப் புலனுகவில்லை. பரிமேலழகர், 'உலகத்தை நட்பாக்குவது ஒருவனுக்கு ஒட்பமாம்' என்று கூறி யுள்ளார். இவ்வுரை பொருந்துவதாகத் தெரியவில்லை. அறிவைப்பற்றிப் பேசுகின்ற இடத்தில் நட்பைப்பற்றிப் பேசுதற்குரிய அவசியம் இல்லை. ஆகையால் உலகத்தைத் தழுவி நடப்பதே ஒட்பம் என்று கூறுவது மிகப் பொருந்து வதுபோல் காணப்படுகிறது. இதனைத் திருவள்ளுவரது மற்ருெரு குறளும் வற்புறுத்தலைக் காணலாம் :

" உலகத்தோடு ஒட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்."

இக்குறளிலிருந்து உலகத்தோடு ஒட்ட ஒழுகுபவரே அறிவுடையர் என்பது புலனுகின்றது. 'மலர்தலும்

கூம்பலும் இல்லது அறிவு' என்னும் தொடர்க்கு, 'நல்லது வரும்பொழுது மகிழ்தலும், தீயது வரும்பொழுது வருந்துதலுமின்றி என்றும் ஒரு நிலையில் இருப்பது ஒருவனுக்கு அறிவாம்' என்று பொருள் கூறுவது பொருந்தும்.

'உலகத்தையெல்லாம் யான் நியமித்தலான் என்னை நியமிப்பார் இல்லை' எனக் கருதி, தான் நினைத்தவாறே ஒழுகின், பாவமும் பழியுமாம் ஆகலான் அவ்வாறு ஒழுகுதல் அறிவன்று என விளக்கிய திருக்குறளைக் கீழே காண்க:

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு."

இத்திருக்குறள் அறிவின் இலக்கணத்தைக் கூறும் ஐந்தாம் குறள்.

'பெரியோர் எப்படி நடந்தார் அந்த ஒழுக்கத்திலே நடப்பது அறிவு' என்பது பரிதியார் உரை.

ஐந்து குறட்பாக்களான் அறிவின் இலக்கணத்தைக் கூறிய தெய்வப் புலவர், அவ்வறிவினையுடைய பெரியாரது இலக்கணத்தை இரண்டு திருக்குறளால் கூறத் துணிந்து,

"அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்
அஃது அறிகல்லா தவர்"

என்றார்.

பின் வரக்கடவதனை முன்னரே அறியவல்லார் அறிவுடையார் என்பது திருவள்ளுவர் கருத்து. இது பொதுவாக எல்லோர்க்கும் பொருந்துமாயினும், சிறப்பாக அரசர்க்கு மிகப் பொருந்துகின்றது. 'ஆவது கருதானாகில், அமைச்சர் சொல் கேளானாகில், அத்தகைய அரசன் கெடுவது திண்ணம்' என்னும் கருத்தினைப் பாரதத்திலும் காண்கிறோம். கல்வியிற் பெரிய கம்பரும், 'உற்றது

கொண்டு மேல்வந்து உறுபொருள் உணரும் கோளார்' என அமைச்சரைப் பற்றிக் கூறியது அரசர்க்கும் பொருந்தும். இனி, 'ஆவது அறிவர்' என்பதற்கு, 'தமக்கு வரும் நன்மை அறிவார்' என்று உரைப்பாரும் உளர்.

அறிவுடையாரது இலக்கணத்தைக் கூறும் மற்ெறாரு திருக்குறளைக் கீழே காணலாம் :

''அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்.''

வேந்தனுக்கு இயற்கைக் குணங்களாகிய ஈகை, அறிவு, ஊக்கம் என்பவற்றைக் கூறவந்த திருவள்ளுவர், அஞ்சாமையையும் உடன் எண்ணி,

''அஞ்சாமை யீகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு''

என்றார். ஈண்டு, 'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' எனக் கூறியிருப்பது முன்னுக்குப்பின் முரணுவதுபோல் காணப் படுகிறது. இவ்விரண்டு குறள்களின் பொருளையும் ஊன்றி உணரின், முரண் இன்மை தெற்றென விளங்கும்.

இறை மாட்சியில் கூறியுள்ள அஞ்சாமையால் பழி பாவங்களும் கேடும் வாரா. குடிகளுக்கு வரும் துன்பங் களைப் போக்கி, எடுத்த கருமத்தை இனிது முடித்தற்கு அஞ்சாமை இன்றியமையாதது. மேலும், போரில் பகை வரது ஆற்றலைக் கண்டு அஞ்சாமை நல்லரசர்க்குரிய நற் பண்பாம். ஆனால், பழி, பாவம் முதலியவற்றைத் தரும் செயல்களைக் கண்டு ஒருவன் அஞ்சாதிருப்பின், அவன் அறிவுடையனாகான்.

திருவள்ளுவர், 'கயமை' என்னும் அதிகாரத்தில், 'அச்சமே கீழ்களது ஆசாரம்' என்றார். ஈண்டுக் கயவ

ரிடத்தில் உள்ள அச்சத்தைப் புலவர் பெருமான் எடுத்துக் காட்டி, நமக்கும் நகையுண்டாக்கி, அவரும் நகைத்து நிற்கின்றார். ஒழுக்கமுடைய பெரியார்போல் காணப்படும் கயவரை நமக்கு அறிமுகப்படுத்தி, அவர்கள் நல்லொழுக்கத்தை மேற்கொண்டிருப்பதற்குக் காரணம் தமக்கு வரும் துன்பத்தை நோக்கி உண்டான அச்சமே யன்றி, அஃது அவரது இயல்பன்று; மனம் போகும் போக்கில் ஒழுகுவதே அவரது இயல்பு என்று கூறியுள்ளது ஈண்டுச் சிந்தித்தற்குரியது.

அறிவின் சிறப்பினைக் கூறும் அழகிய திருக்குறளைக் கீழே படித்து மகிழலாம் :

> "அறிவுஅற்றம் காக்கும் கருவி செறுவார்க்கும்
> உள்ளழிக்கல் ஆகா அரண்"

தனக்கும் நாட்டுக்கும் எவ்வகையிலும் கேடு வாரா வண்ணம் காப்பவனே காவலனாவான். அங்ஙனம் காத்தற்குள்ள பல கருவிகளுள் அறிவே சிறந்த கருவியாகும். அறிவில்லாத அரசன் படை வலியாலும், பிற அரசர்களது துணை வலியாலும் தன்னையும் தன் நாட்டையும் காத்துக் கொள்ளல் அரிது என்பது கருதியே, திருவள்ளுவர், 'அறிவு அற்றம் காக்கும் கருவி' யென்றார். தமயந்தி அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களையே நான்கு படைகளாகக் கொண்டு, தன்னைக் காத்துப் பெண்ணரசியாக விளங்கியதை அறிவுடைய உலகம் அறியும்.

அரசனது நாட்டைக் காக்கப் பல அரண்கள் உண்டு. அவையெல்லாம் புற அரண்களே; அவைகள் ஒரு காலத்தில் பேராற்றல் படைத்த பகைவரால் அழிக்கப் படலாம். ஆனால், ஓர் அரசன் அறிவாகிய உள்ளரணைப் பெற்றிருப்பானேல், அதனை எத்தகைய ஆற்றல் படைத்த

மன்னரும் அழிக்க முடியாது என்பதனை, 'செறுவார்க்கும் உள்ளழிக்கல் ஆகா அரண்' என்ற தொடர் தெரிவிக்கின்றது.

'அரசர்க்கு யானை, குதிரை, தேர், காலாள் என்னும் நாற்பெரும் சிறையும் அரண் அன்று; தமக்கு இங்ஙனம் சிறந்த அறிவு எது? அதுவே தமக்கு ஓர் இடையூறு வரும் வழிப் பாதுகாக்கும் படையாவது; அதுவுமன்றிப் பின்னும் பகை வேந்தர்க்கு உள் புக்கு அழித்தல் அரிதாய அரண் ஆவதும் அதுவே' என்பது காளிங்கரது உரை.

அறிவுடையோர்க்குத் துன்பம் இன்மையால் என்றும் இன்புற்றிருப்பர் என்பதைத் தெரிவிக்கும் கீழ்வரும் குறட்பா :

"எதிரதாக் காக்கும் அறவினார்க்கு இல்லை
அதிர வருவதோர் நோய்."

'வரக்கடவதனை முன் அறிய வல்லார் அறிவுடையராவர்' என முன்னொரு குறளில் கூறிய திருவள்ளுவர், அங்ஙனம் முன்னறிந்து, தம்மையும் தம் நாட்டையும் காக்கவல்ல அறிவினையுடையார்க்கு. அவர் உள்ளமும் உடலும் நடுங்கும் வண்ணம் வருவதொரு துன்பமும் இல்லை என்று இக் குறளால் தெரிவிக்கின்றார். துன்பமில்லையென்றதால் இவ்வண்ணம் காக்கும் அறிவுடைய அரசர் என்றும் இன்புற்றிருப்பர் என்பதை உய்த்துணரலாம். இத்தகைய அரசர்க்கு எடுத்துக்காட்டாக விளங்குபவன் மணிமேகலையில் வரும் ககந்தன் என்பவன். அக்காவலன் அரசர்களைக் கொல்லத் தீர்மானித்திருந்த பரசுராமர் வரவை முன்னரே அறிந்து, தன் காமக்கிழத்தியின் மகனாகிய ககந்தன் என்பவனை அரசனாக்கித் தான் வேறிடம் சென்றான். பின்னர், பரசுராமர் அங்கு வந்து, ககந்தனைக் கண்டு, அவன் குலமகன் அல்லன் என்பதை

அறிந்து, அவனையும் அவன் நாட்டையும் அழிக்காமல் சென்றார். இவ்வரலாற்றினை மணிமேகலையில் காணலாம்.

'துன்பம் வருவதற்கு முன்பே வருமென்று நினைத்துக் காக்கும் அறிவை யுடையார்க்கு நடுங்க வருவதொரு துன்பம் இல்லை' என்பது மணக்குடவர் உரை.

அறிவின் சிறப்பையும், அதன் இலக்கணத்தையும், அதனை யுடையாரது இலக்கணத்தையும், அறிவுடையார்க்கு வரும் இன்பத்தையும் அழகுறக் கூறிய தெய்வப் புலவர், அறிவுடைமை யென்னும் அதிகாரத்தின் ஈற்றுக் குறளில் செல்வர் யார்? வறிஞர் யார் என்பதனைத் தெரிவிக்கின்றார் :

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்."

திருவள்ளுவர் தம் நூலாகிய திருக்குறளில் பலபல செல்வங்களைக் கூறியுள்ளார். அப்பெரியார் நற்குணங்களைச் செல்வம் என்பர்; கல்வி கேள்விகளைச் செல்வமென்பர். இப்படி அவர் கூறியுள்ள செல்வங்கள், உள்ளத்திற்கு உவகை தருவனவாம். இவ்வண்ணம் கூறியுள்ள அப்பெருந்தகை, அறிவுடைய பெருமக்கள் எல்லாச் செல்வமும் உடையவர் எனவும், அறிவிலார் எல்லாம் உடையராயினும் வறிஞரே யெனவும் கூறியுள்ள அழகு பெரிதும் போற்றற்பாலது. இவ்வழகிய குறட்பாவிற்கு பரிமேலழகர் நுட்பவுரையைக் கீழே காண்க :

"செல்வங்கள் எல்லாம் அறிவால் படைக்கவும் காக்கவும் படுதலின், அஃது உடையாரை, 'எல்லாம் உடையர்' என்றும், அவையெல்லாம் முன்னே அமைந்து கிடப்பினும், அழியாமல் காத்தற்கும், அழிந்துழிப் படைத்தற்கும் கருவியாகிய அறிவு இல்லாதாரை, 'என்னுடையரேனும் இலர்' என்றும் கூறினார்."

# II. சிலப்பதிகாரம்

## 1. செங்குட்டுவனது வடநாட்டுச் செலவு

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மைந்தனாகிய சேரன் செங்குட்டுவன் வஞ்சிமா நகரில் உள்ள வெள்ளி மாடம் என்ற மாளிகையில் தன் மனைவி இளங்கோ வேண்மாளுடன் இன்புற்று வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் மலை வளம் காண விரும்பி, விளையாட்டிற்குரிய பலவகைப் பொருளும் கொண்டு, மனைவியும் மற்றவரும் தன்னைச் சூழ்ந்துவரப் புறப்பட்டுச் சென்று, பேராற்றங் கரையிலுள்ள மணற்குன்றிலே தங்கியிருந்தான். அப்பொழுது, குன்றக் குரவை நிகழ்த்தும் மலைமகளிர் பாடலும், வென்றிச் செவ்வேள் வேலவன் பாட்டும் தினை மா இடிப்போர் உலக்கைப் பாட்டும், வேறு பல ஒலிகளும் அவனுக்கு இன்பத்தை விளைத்தன.

அப்பொழுது கண்ணகி விமானம் ஏறிச் சென்ற அதிசயத்தைச் சேரன் செங்குட்டுவனிடம் தெரிவிக்கக் கருதிய மலைவாணர்கள், குறிஞ்சியில் கிடைக்கும் பலவகைப் பொருள்களையும் காணிக்கையாகக் கொண்டு அங்கு வந்தனர். பின்னர் அவர்கள் தம் அரசனைக் கண்டு வணங்கி, 'வேந்தர் வேந்தே, வாழ்க நின் கொற்றம்! யாம் வாழும் மலையில் வேங்கை மரத்தின் கீழே மங்கையொருத்தி தனித்துயர் அடைந்துவந்து நின்றனள். பல தேவர்கள் அவ்விடம் வந்து, அப்பெண்ணரசிக்கு அவள் காதற் கொழுநனைக் காட்டி, அவளையும் உடனழைத்துக்

கொண்டு, எங்கள் கண்முன்பே விண்ணகம் சென்றனர். அப்பெண்மணி எந்நாட்டாளோ! யார் மகளோ! அறியோம்' என்று மீண்டும் ஒரு முறை வாழ்த்தி நின்றனர்.

அப்பொழுது அரசனது பெருஞ் சிறப்பினையும், மலை வளத்தின் மாட்சியையும் கண்டு மகிழ்ந்து உடனிருந்த தமிழ்ப் பெரும்புலவர் சாத்தனர் என்பவர், செங்குட்டுவனை நோக்கி, "அரசே, அந்நிகழ்ச்சியை யான் அறிவேன், கேட்டருள். பாண்டியன் தன் மனைவியின் சிலம்பைத் திருடிய கள்வன் கோவலன் என்றெண்ணி அவனைக் கொல்வித்தான். அதனையறிந்த அவன் மனைவி கண்ணகி, பெருஞ்சினங்கொண்டு, பாண்டியன் முன் சென்று வழக்காடி வென்றாள். அவள் வழக்கைக் கேட்ட நெடுஞ்செழியன் தான் செய்த பிழையை நினைந்து, மனமுடைந்து, தன் இருக்கையிலிருந்து வீழ்ந்து இறந்தான். இவ்வண்ணம் பாண்டியன் இறக்க, அவன் கோப்பெருந்தேவி, அத்துயர் பொறாது,

> " மன்னவன் செல்வுழிச் செல்க யானெனத்
> தன்னுயிர் கொண்டவன் உயிர்தே டினள்போல்"

உடன் உயிர் விட்டனள். பாண்டியனது கொடுங்கோல் தன்மையை உன்னிடம் கூற வந்தவள்போல் தனக்குரிய சோழ நாடு செல்லாது நின்னுடு அடைந்தனள் அந் நங்கை" என்று நடந்தவற்றை யெல்லாம் சுருங்கக் கூறி அரசனை வாழ்த்தினர்.

பாண்டியனுக்கு நேர்ந்தவற்றை யெல்லாம் கேட்ட செங்குட்டுவன் மிகவருந்தி, சாத்தனரை நோக்கி, 'புலவர் பெருமானே, பாண்டியன் செங்கோலினின்று வழுவிய செய்தி, எம்மையொத்த அரசர் செவிகளில் சென்று எட்டுவதற்கு முன்பே அவனது உயிர் நீங்கிய செயல், வல்வினை வளைத்த கோலை உடனே நிமிர்த்துச் செங்கோலாக்கியது. அரசர்க்கு, காலத்தில் நாட்டில் மழை

பெய்யாதாயின் அச்சம்; உயிர்கள் தவறு செய்யுமாயின் அச்சம்; கொடுங்கோலுக்கு அஞ்சி, மன்னுயிர்களைக் காத்தற்குரிய உயர் குடியில் பிறத்தலால் துன்பமல்லது சுகமேயில்லை' யென்று கூறினான்.

பின்னர், சேரன் செங்குட்டுவன், தன் மனைவியை நோக்கி, ''நங்கையே, கணவனுடன் தன்னுயிர் விட்ட பாண்டியன் மனைவி கோப்பெருந்தேவியும், சினத்துடன் நம் நாடு நோக்கி வந்த கண்ணகியும் ஆகிய இவ்விரு பெரும் பத்தினிகளுக்குள்ளே யாவர் வியக்கத்தக்கவர்?'' என்றான். அதற்கு அவன் மனைவி வேண்மாள், 'தன் காதலன் துன்பம் காணாது உயிர் நீத்த பாண்டியன் பெருந்தேவி விண்ணுலகத்தே பெருந் திருவுறுக. நம் நாட்டை நோக்கி வந்த பத்தினிக் கடவுளை நாம் வழி படுதல் வேண்டும்' என்று கூறினாள்.

மனைவியின் மணி மொழிகளைக் கேட்ட செங்குட்டு வன் மிக மகிழ்ந்து, தன் அமைச்சர்களை நோக்கினான். அவர்கள், 'நம் நாடு நோக்கிவந்த அப்பத்தினிக் கடவுளுக்குப் படிவம் சமைத்தற்குரிய சிலையைப் பொதிய மலையிலிருந்தேனும், இமய மலையிலிருந்தேனும் எடுத்து வருதலே தக்கதாம். ஆனால் பொதியத்திலிருந்து கொணர்வதைக் காவேரியிலும், இமயத்திலிருந்து கொணர்வதைக் கங்கையிலும் நீராட்டுதல் மிகப் பொருத்தமுடையதாகும்' என்று கூறினர்.

அதனைக் கேட்ட செங்குட்டுவன் பொதிய மலையில் கல்லெடுத்துக் காவிரியில் நீராட்டல், பெருவீரராகிய சேரர் குடிப் பிறந்த எங்களுக்குச் சிறப்புடைய செய லன்று. ஆகையால் இமயத்திலிருந்து கல்லெடுப்பித்துக் கங்கையில் நீராட்டி வருதலே எம் பெருமைக்கு ஏற்ற செயலாகும். மலையரசன் எம் விருப்பத்துக்கு இணங்கா னாயின், இங்கிருந்து வஞ்சிமாலை சூடிய சேனைகளுடன்

சென்று, எம் வீரச்செயல்கள் பலவற்றையும் அவனுக்குக் காண்பிப்போம்' என்று வீர மொழிகள் பல விளம்பினன்.

செங்குட்டுவன் கூறிய வீர மொழிகளைக் கேட்ட வில்லவன் கோதை என்ற சேனாதிபதி அரசனை வாழ்த்தி, 'மன்னர் மன்ன, சோழ பாண்டியர் நம்மொடு பகைத்துக் கொங்கர் செங்களத்தே தம் புலிக் கொடியையும் மீனக் கொடியையும் போரில் இழந்து ஓடினராயினும், அச் செய்தி திக்கயங்களின் செவிவரை சென்று பரவிற்று. நீர் சூழ்ந்த இந் நிலவுலகத்தினை வென்று, தமிழ் நாடாக்க வேண்டி வடநாடு செல்லக் கருதின், ஆங்கு நும்மை எதிர்ப்பவர் யாருமே இல்லை யென்பது உறுதி. இமய மலைக்கு நீவிர் செல்லக் கருதியிருப்பது பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய சிலையின் பொருட்டே ஆதலால், அங்கு வாழும் அரசர்க்கெல்லாம் வில், கயல், புலி ஆகிய வற்றை அடையாளமாகக் கொண்ட நும் திருமுகத்தை முன்னே விடுத்தருளல் வேண்டும்' என்று கூறினன்.

சேனாதிபதி கூறியவற்றை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த அழும்பில் வேள் என்னும் அமைச்சன், இந் நாவலந் தீவில் நம் பகைவரின் ஒற்றர்கள் இவ்வஞ்சிமா நகரைவிட்டு நீங்குவாரல்லர். அவ்வொற்றர்களே நம் வடநாட்டுச் செலவுபற்றிய செய்திகளைப் பகையரசர்க்கு அறிவிப்பர். ஆகையால் நம் வடநாட்டுச் செலவை இந் நகரில் பறையறைந்து தெரிவித்தலே போதும்' என, செங்குட்டுவனும் அதற்கு உடன்பட்டான்.

பின்னர்ச் செங்குட்டுவன் பேராற்றங்கரையிலிருந்து புறப்பட்டுத் தன் படையுடன் வஞ்சிமா நகரம் அடைந் தான். உடனே யானைமேல் முரசு ஏற்றப்பெற்றுச் செங் குட்டுவனது வடநாட்டுச் செலவுபற்றியும், அங்குள்ள பகையரசர் வந்து பணியாவிடில், அவருக்கு நேரும் கேடு களைப்பற்றியும் ஊரெங்கும் பறை அறையப்பட்டது.

## 2. பத்தினிக்குக் கல்லெடுப்பித்தல்

வஞ்சிமா நகரில் சேரன் செங்குட்டுவனது வட நாட்டுச் செலவுபற்றிப் பறையறையப்பட்டது. பின்னர், அன்று மாலை, அமைச்சர், தானைத் தலைவர்கள் முதலியோர் ஒருங்கு கூடிச் செங்குட்டுவனை வாழ்த்தி, வடநாட்டுச் செலவில் நடத்தற்குரிய செயல்களைக் கேட்டு நின்றனர்.

அப்பொழுது அம்மன்னன் அரியணையில் வீற்றிருந்து, படைத் தலைவர்களை நோக்கி, "ஆரிய மன்னர் பலர் தம் நாட்டில் நிகழ்ந்த சுயம்வரம் ஒன்றன்பொருட்டுக் குழுமி யிருந்த இடத்தே, தென் தமிழ் நாடாளும் வேந்தர், மின் தவழும் இமய வெற்பில் வில்லையும் புலியையும் கயலையும் பொறித்த நாள் எம்போலும் முடி மன்னர் இல்லைபோலும்' என்று நகைத்து இகழ்ந்தனர் என்பதை அறிந்துளேன். அவ் இழிமொழி எனக்கு மட்டுமன்றி என்போன்ற தமிழ் மன்னர்க்கும் பழி விளைக்கக்கூடியதே. ஆகையால், அங்ஙனம் இகழ்ந்த வடதிசை மன்னரது முடிமிசைப் பத்தினிக் கடவுளைச் சமைத்தற்குரிய சிலையை ஏற்றிக்கொண்டு வருவேன். அங்ஙனம் செய்யேனாயின், என் பகைவரை நடுங்கச்செய்து அடக்காமல் என் நாட்டுக் குடிகளை வருத்தும் கொடுங்கோலனாகக்கடவேன்" என்று வெகுண்டு கூறினான்.

செங்குட்டுவன் சினந்து கூறியவற்றைக் கேட்ட புரோகிதன், 'இமயவரம்பனே, வடநாட்டு மன்னர் நின்னை இகழ்ந்து கூறினவரல்லர். நின்னோடு எதிர்க்கும் மன்னரும் உளரோ? கோபம் தணிக' என்று மன்னவன் சினத்தை மாற்றினன்.

உடனே காலக்கணிதன் எழுந்து நின்று, 'அரசே, நின் வெற்றி வாழ்க! இவ்வுலகிலுள்ள பகையரசரெல்லாம் நின் அடித்தாமரைகளைப் பணியத்தக்க நல்ல காலம் இதுவே. நீ கருதிய வினையை முடித்தற்கு இப்பொழுதே எழுக' என்றான்.

நிமித்திகன் மொழிகளைக் கேட்ட செங்குட்டுவன் உடனே தன் வாளையும் குடையையும் வடதிசைப் பெயர்க்கும்படி ஆணையிட்டான். அவ்வாணை பிறந்ததும், போர் வீரர் ஒலியொடு முரசங்களும் ஒலித்தன. அப்பொழுது ஐம்பெருங் குழுவும்† எண்பேராயமும்‡ ஏனையோரும் 'செங்குட்டுவன் வாழ்க!' என்று வாழ்த்தினர். அப்பொழுது யானையின் பிடர்மேல் ஏற்றப்பட்ட அரச வாளும் வெண் கொற்றக் குடையும் வஞ்சிப்புறத்துள்ள கோட்டையில் புகும்படி செய்து, செங்குட்டுவன் தன் அத்தாணி மண்டபத்தையடைந்தான்.

அன்றிரவு போர் விருப்பத்தால் களிப்புற்றுத் தன்னுடன் வருவதற்கிருந்த தானைகளுக்கும் தானைத் தலைவர்க்கும் செங்குட்டுவன் பெருஞ் சோறளித்து, அவ்வீரர்களை ஊக்கி, வஞ்சிமாலையை மணி முடியில் அணிந்து, மறுநாட் காலையில் வடநாட்டுச் செலவுக்குச் சித்தமாயிருந்தான்.

மறுநாட் காலையில், அரண்மனையிலே அரசர் இடுதற்குரிய திறைகளை அழைக்கும் காலை முரசம் முழங்கிற்று. அப்பொழுது காலைக் கடன்களை யெல்லாம் முடித்திருந்த

---

† ஐம் பெருங்குழு: அமைச்சர், புரோகிதர், சேனபதியர், தூதுவர், சாரணர்.

‡. எண்பேராயம்: கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத்தலைவர், யானை வீரர், இவுளிமறவர்.

சேரன் செங்குட்டுவன் தான் வழிபடும் சிவபிரானது திருவடி நிலைகளை வலங்கொண்டு வணங்கி, வஞ்சிமாலை சூடிய மணி முடியைச் சென்னியில் தாங்கி, பட்டவர்த்தனக் களிற்றின்மேல் ஏறினன். அப்பொழுது, 'குடவர் கோமானாகிய செங்குட்டுவன் வெற்றி பெறுக' என்று வாழ்த்திக்கொண்டே, ஆடக மாடம் என்னும் கோயிலில் அறிதுயில் அமர்ந்தருளும் திருமாலின் பிரசாதத்துடன் அரசன் முன் சிலர் வந்து நின்றனர். செங்குட்டுவன் சிவபிரான் சேவடிகளைச் சென்னியில் தாங்கியிருந்தமையால், அத்திருமால் பிரசாதத்தை வாங்கித் தன் அணித்தோள் மேல் தாங்கிப் புறப்பட்டான்.

அப்பொழுது நாடக மடைந்தையர் நெருங்கி நின்று இரு கைகளையும் கூப்பி, 'வெற்றி வேந்தே, போர்க் களிற்றின்மேல் வெண் கொற்றக்குடை நிழலில் தோன்றும் நின் காட்சி என்றும் இன்பம் பயந்து விளங்குக!' என்று துதித்தனர். யானை வீரரும், குதிரை வீரரும், வாட் படை தாங்கிய மறவர்களும் தங்கள் வேந்தனது வாள் வலியை ஏத்தினர். இவ்வண்ணம் சிலர் துதிக்கவும், சிலர் ஏத்தவும் செங்குட்டுவன் சென்று, நீலகிரி என்னும் மலையின் புறத்தே அமைக்கப்பெற்ற படை வீட்டை அடைந்து, தான் ஏறியிருந்த யானையிலிருந்தும் இழிந்து, வீரரெல்லாம் பேரொலி செய்து வாழ்த்த, காவல் மிக்க தன் இருக்கையில் அமர்ந்து இளைப்பாறினன்.

அக்காலை, அந்தரத்தில் செல்லும் முனிவர் சிலர் செங்குட்டுவன் வீற்றிருக்கும் அரசிருக்கையை நோக்கி, ஒளி மிக்க மேனியுடன் வந்தனர். முனிவரது வருகையை அறிந்த செங்குட்டுவன் எழுந்துவந்து, அவர் திருவடிகளை வணங்கி நின்றான். அப்பொழுது அம் முனிவர்கள், 'சிவபிரான் அருளால் வஞ்சிமாநகரில் தோன்றி விளங்கும்

அரசே, யாங்கள் பொதிய மலைக்குச் செல்கின்றோம். இமயமலைவரை செல்வது நின் கருத்தாகலின், அங்கு வாழும் அருமறை யந்தணர்களைக் காப்பது நின் கடமை யாகும்' என்று கூறிச் செங்குட்டுவனை வாழ்த்திச் சென்றனர்.

பின்னர், கொங்கண நாட்டுக் கூத்தர்களும் கொடுங் கருநாடர்களும் வரிப்பாடல்களையும் குரவைப் பாடல் களையும் பாடிக்கொண்டும் வாழ்த்திக்கொண்டும் சேரன் முன்னே வந்து தோன்றினர். செங்குட்டுவன் அவர்களுக் கெல்லாம் தாங்கள் எதிர்பாராத சிறந்த அணிகளை அளித்து, மிக்க மகிழ்ச்சியுடன் வீற்றிருந்தான்.

அப்பொழுது வாயில் காவலன் செங்குட்டுவன் திருமுன் வந்து நின்று, 'சேர அரசே, நாடக மகளிர் நூற்றிருவரும், வாத்தியக்காரர் இருநூற்றெண்மரும், நகை விளைத்து மகிழச் செய்யும் வேழம்பர் நூற்றுவரும்' நூறு நெடுந்தேர்களும், ஐந்நூறு களிறுகளும், பதினாயிரம் குதிரைகளும், இன்ன இன்ன சரக்கென்று எழுதப் பெற்று, யாத்திரைக்கு வேண்டிய பண்டங்கள் ஏற்றப் பெற்ற சகடங்கள் இருபதினாயிரமும், சஞ்சயன் என்பவனைத் தலைமையாகக் கொண்ட சட்டையிட்ட முதல்வர் ஆயிரவரும் நின் வாயிலில் காத்திருக்கின்றனர்' என்றான்.

அதனை யுணர்ந்த செங்குட்டுவன், வாயில் காவலனை நோக்கி, 'சஞ்சயனுடன், நாடக மகளிரும், கஞ்சுக முதல் வரும், வாத்தியக்காரரும் இங்கு வரக்கடவர்' என்று கட்டளையிட்டான். அன்னானுடன் தூதர் தலைவனும் அரசவை புகுந்து, செங்குட்டுவனை வணங்கி வாழ்த்தி, உடன் வந்தவரை யெல்லாம் அரசனுக்கு முறைப்படி காட்டினான். பின்னர் அவன் செங்குட்டுவனை நோக்கி, ''தேவரீர் வடநாடு செல்வது, பத்தினிக் கடவுளைச்

சமைத்தற்குரிய சிலை யொன்றன் பொருட்டேயாயின், ‘இமயமலையில் கல்லெடுப்பித்துக் கங்கை யாற்றில் அதனை நீராட்டித் தர யாங்களே வல்லோம்’ என்று தங்களின் நட்பரசராகிய நூற்றுவர் கன்னரும் தெரிவித்திருக் கின்றனர்’’ என்று அறிவித்து வாழ்த்தி நின்றான்.

இவற்றை யெல்லாம் அமைதியுடன் கேட்டுக்கொண் டிருந்த செங்குட்டுவன், ‘நன்று; வடநாட்டரசனான பால குமரன் மக்களாகிய கனகன், விசயன் என்ற இருவரும் தம் நாவினைக் காவாதவராய், விருந்தொன்றிலே வட நாட்டரசர் பலருடன் கூடி, தமிழ் வேந்தரான எம் முடைய ஆற்றல் அறியாது இகழ்ந்து உரையாடினராம். அதனால் பத்தினிக்குக் கல் எடுப்பித்தலோடு அவரிடம் நம் ஆற்றலைக் காண்பித்தற்காகவும் இச் சேனை புறப் பட்டுள்ளது, இச் செய்தியை நம் நண்பராகிய நூற்றுவர் கன்னர்க்குத் தெரிவித்து, கங்கைப் பேரியாற்றை நம் சேனைகள் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்களை அவர் உதவியால் சித்தம் செய்வதற்கு நீவிர் முன்பு செல்லக் கடவீர்’ என்று கட்டளையிட்டான்.

சஞ்சயன் என்பான் செங்குட்டுவன் ஆணையைச் சிரமேற்கொண்டு, தன் துணைவருடன் முற்படச் சென்றான். அவன் போனவுடனே, நாவன்மை படைத்த தூதுவர் ஆயிரவரும், பாண்டியர் முதலிய அரசர்கள் அளித்த சந்தனம், முத்து முதலிய திறைகளைக் கொண்டு வந்து நின்றனர். அவர்களுக்குச் சேரன் தன் இலச்சினை யிட்ட திருமுகங்களை எழுதுவோரைக் கொண்டு எழுது வித்து, அத்தூதர் கையில் கொடுத்து, அரசர்களிடம் அவற்றை முறைப்படி சேர்ப்பிக்குமாறு ஆணையிட்டு அவர்களை அனுப்பினன். அவர்கள் எல்லாம் போன பின்னர் மற்றைய மன்னர் தன் வெற்றிச் சிறப்பை ஏத்த,

சேரன் செங்குட்டுவன் தன் படையோடு நீலகிரிப் படை வீட்டினின்றும் நீங்கி வடநாடு நோக்கிச் சென்ழுன்.

இவ்வண்ணம் தன் பெருஞ் சேனைகளுடன் சென்ற செங்குட்டுவன் முடிவில் கங்கைப் பேரியாற்றை நெருங்கினுன். அங்கு, முன்னரே சென்றிருந்த சஞ்சயனுல் நூற்றுவர் கன்னர் உதவிகொண்டு கங்கையைச் சேனைகள் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்கள் சித்தம் செய்யப் பட்டிருந்தன. அவ் ஆற்றை அடைந்த செங்குட்டுவன் தன் படைகளுடன் அவ்வாற்றைக் கடந்து வடகரையடைந்தான். அப்பொழுது அந்நாட்டினை ஆண்டுகொண்டிருந்த நூற்றுவர் கன்னர், சேரன் செங்குட்டுவனுக்கு அன்பொடு கலந்த நல்வரவேற்பு அளித்தனர். அதனைப் பெற்று மகிழ்ந்த செங்குட்டுவன் அங்கு நின்றும் புறப்பட்டுத் தன் பகைவரது நாட்டை யடைந்து பாசறையில் தங்கினுன்.

இவ்வண்ணம் செங்குட்டுவன் பெரும்படையுடன் தம் நாட்டில் வந்து தங்கிய செய்தியைக் கனக விசயர் என்ற ஆரிய அரசர் அறிந்து, உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன், சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன் என்ற எல்லா வடவேந்தரையும் துணையாகக் கொண்டு, தமிழர் ஆற்றலைக் காண்போம் என்று செருக்கிச் சேனையுடன் போர்க்கோலம் பூண்டு எதிர்த்தனர். அப்பொழுது இரையைத் தேடி வேட்டைக்குச் சென்ற சிங்கம் ஒன்று, யானைப் பெருங்கூட்டத்தைக் கண்டு, மிக மகிழ்ந்து பாய்வதுபோல், செங்குட்டுவன் வட வேந்தரது சேனையின்மேல் பாய்ந்தான்.

வடவரும் தமிழரும் செய்த பெரும் போரில் துகிற் கொடிகளின் பந்தர்களால் சூரிய கிரணங்கள் மறைப் புண்டன. கொடும் பறைகளும், சங்கங்களும், நீண்ட

கொம்புகளும், முரசங்களும் எதிரொலியுண்டாகும்படி ஒலித்தன. அப்பொழுது சேரன் செங்குட்டுவன் ஆரிய அரசரின் படைகளைக் கொன்று குவித்து, அவர்களுடைய தேர், யானை, குதிரைகளில் ஆட்கள் இல்லாமல் செய்து, தும்பை சூடி விளங்கினான். நாவைக் காவாது தமிழ் அரசரை இகழ்ந்த கனக விசயர், தம் தேர் வீரர்கள் ஐம்பத்திருவருடன் செங்குட்டுவனது சின வலையில் சிக்கி அகப்பட்டனர். மற்றப் பகைவர்கள் தங்கள் படைகளை யெறிந்துவிட்டு, சடை முதலியவற்றைத் தரித்த துறவிகளாகவும், பீலிகளைக் கைக்கொண்ட சைனமுனிவராகவும், பாடகராகவும் பற்பல வேடம் பூண்டு, பல பல இடங்களிலே பதுங்கி யொளிந்தனர். செங்குட்டுவனது போர்க் களத்தைக் கண்டு மகிழ்ந்த பேய்கள், ஊன் சோற்றை வயிறுற உண்டு களித்து, தமக்கு இத்தகைய பெருவிருந்து செய்த செங்குட்டுவன் 'ஊழியளவும் வாழ்க!' என்று வாயார வாழ்த்தின.

இவ்வண்ணம் சேரன் செங்குட்டுவன் ஆரியப் படையை வென்று, தான் நினைத்த காரியங்களில் ஒன்றை முடித்துக்கொண்டான். பின் அவ்வீரன் தன் தானைத் தலைவனாகிய வில்லவன் கோதையை நோக்கி, 'வட திசையில் வேதநெறியை வளர்க்கும் அந்தணர்களைச் செல்லும் இடங்களில் எல்லாம் போற்றிக் காக்கக் கடவீர்' என்று கூறி, அவனை யேவி, பத்தினிக் கடவுளைப் பொறித்தற்குரிய சிலையை இமயமலையிலிருந்து கொணரச்செய்து, அவ்வினையையும் முடித்துக்கொண்டனன்.

# 3. பத்தினிக் கல்லை நீராட்டல்

தமிழரது ஆற்றலை யறியாது மலைந்த் ஆரியப் படைகளைப் போரில் ஒரு பகற்குள்ளே அழித்து விளங்கிய சேரன் செங்குட்டுவன், சினம் மிக்க தன் சேனைகளால் பத்தினிக் கடவுளுக்குரிய சிலையை இமயத்தினின்றும் எடுப்பித்தான்; பின்னர் போரில் தோல்வியுற்ற கனக விசயர் முடிமேல் அச்சிலையை ஏற்றிக்கொண்டு, அதனை நீராட்டித் தூய்மை செய்தற் பொருட்டுக் கங்கைப் பேரியாற்றின் வடகரையில் வந்து சேர்ந்தான்.

சேரன் செங்குட்டுவன் அவ்விடம் வந்ததும், அரசன் ஆணையின்படி ஆகமம் வல்லோரால் அப்பத்தினிச் சிலை கங்கையில் முறைப்படி நீராட்டப் பெற்றது. பின்னர், சேர மன்னன் தன் சேனையுடன் நாவாய்கள் மூலம் அப் பேரியாற்றைக் கடந்து அதன் தென்கரைக்கு வந்தான். அவ்வாற்றின் தென்கரை வெளிப்பரப்பிலே, செங்குட்டுவன் நட்பாளராகிய கன்னரால் சேரர் பெருந்தகை படைகளுடன் வந்து தங்குவதற்கு அழகிய மண்டபங்களும், அத்தாணியும், பூம்பந்தரும், உரிமைப்பள்ளியும், பூஞ்சோலையும், தாமரைப் பொய்கையும், ஆடலரங்குகளும் அழகு பெற அமைக்கப்பெற்றிருந்தன. செங்குட்டுவன் கங்கையாற்றின் தென்கரை வத்து, அழகிய படை வீட்டில் பரிவாரங்களோடு தங்கினன்.

இவ்வண்ணம் சேரர் செங்குட்டுவன் படை வீட்டில் தங்கியபின், போரில் அரிய வீரச் செயல்களைக் காட்டி வீர சுவர்க்கம் அடைந்தவர்களின் மைந்தர்களையும், மார்பில் விழுப்புண் பட, மாற்றுரைப் புறங்கண்டு மீண்ட

எல்லா வீரர்களையும் அழைத்து, அவர்கள் அடைந்த வெற்றிக்கு அறிகுறியாக அவர்கட்கெல்லாம் பொன்னு லாகிய வாகைப் பூக்களை, தான் பிறந்த நாளில் செய்யும் பெருங் கொடையினும் மிகுதியாகக் கொடுத்து மகிழ்ந் தான். பின்னர், அப்பெருந்தகை பனம்பூவைத் தும்பை மாலையுடன் சூடித் தன் அரசிருக்கையில் வீற்றிருந்தான்.

அப்பொழுது மாடலன் என்னும் மறையவன் எதிர் பாரா வண்ணம் அங்கு வந்து தோன்றி, அரசனுக்கு ஆசி கூறினன். பிறகு அம்மறையவன் செங்குட்டுவனை நோக்கி, 'எம் கோவே, மாதவியின் கடற்கரைப் பாட லானது, கனக விசயரின் முடித்தலைகளை இங்ஙனம் நெரித்துவிட்டது. இது வியக்கத்தக்கதே!' என்று ஒரு விநோத வார்த்தையைக் கூறினன். அதனைக் கேட்ட செங்குட்டுவன், அவன் கருத்தை அறியாதவனுய், 'நான் மறையாளனே, பகைப் புலத்தரசர் பலரும் அறியா நகைச் சொல் ஒன்றை இங்கு வந்து என்முன் கூறினை. நீ சொன்ன உரைப் பொருள் யாது? அதனை விளங்கச் சொல்லுக' என்றான்.

அப்பொழுது அம்மறையவன் சேரனை நோக்கி, 'குடவர் கோவே, காவிரிப்பூம் பட்டினத்தில் நிகழ்ந்த கடல் விளையாட்டிற்குத் தன் காதலனுகிய கோவலனுடன் சென்றிருந்த மாதவி யென்னும் நாடகக் கணிகை, கருத்து வேறுபடப் பாடிய கானல் வரிப்பாட்டால், கோவலன் அவளை வெறுத்துப் பிரிந்து, தன் மனைவி கண் ணகியை உடன் அழைத்துக்கொண்டு மதுரைமா நகரம் புகுந்தான். அங்ஙனம் புகுந்தவன், பாண்டியன் உயிர் நீத்து விண்ணுலகு அடையும்படி கொலையுண்டனன். அங்ஙனம் கொலையுண்ட கோவலனின் கற்புடைய மனைவி உன் நாட்டை அடைந்தமையாலன்றோ, அப் பத்தினி

இப்பொழுது வடதிசை யரசருடைய மணிமுடியிலேறி விளங்குகின்றாள்' என்று முன்னிகழ்ந்த கோவலன் வரலாற்றைச் சுருங்கக் கூறினான்.

பின்னும் அம்மறையவன் செங்குட்டுவனை நோக்கி, "வேந்தர் வேந்தே, யான் இங்கு வருவதற்கு அமைந்த காரணத்தையும் கேட்டருள்க. அகத்திய முனிவருடைய பொதிய மலையை வலம் செய்துகொண்டு, கன்னியா குமரித் துறையில் நீர்த்தமாடி, மீண்டும் வருகின்ற யான் மதுரைமா நகரம் சென்றேன். அங்கே நான் தங்கியிருந்த பொழுது, பாண்டியன் தன் கணவனை அநியாயமாகக் கொல்வித்த கொடுங்கோன்மையைத் தன் சிலம்பைக் கொண்டு அவ்வரசனுக்கு விளக்கிக் கண்ணகி வழக்கில் வென்றாள் என்ற செய்தி ஊர் முழுதும் பரவிற்று. அக் கொலைச் செய்தியைக் கேட்ட ஆய்ச்சியர் தலைவியாகிய மாதரி, 'இடைக்குல மக்களே, அந்தோ! அடைக்கலப் பொருளை இழந்து கெட்டேன்; கோவலன் குற்றமுடையவ னல்லன். அரசனே தவறினான். செங்கோலும் வெண் குடையும் இங்ஙனம் பிழைபடவும் நேர்ந்தனவோ!' என்று அலறி, இரவின் நடுச்சாமத்தே எரியிற் புகுந்து மாய்ந்தனள். கோவலன், கண்ணகி இருவரையும் தம் முடன் அழைத்துக்கொண்டு மதுரை வந்த கவுந்தியடிகள், கோவலனை அரசன் கொலை செய்தது கேட்டதும் உண் டாகிய பெருஞ் சீற்றமானது அம்மன்னனது மரணத்தால் தணிந்ததாயினும், 'என் தொடர்பால் இவர்கட்கு இக் கொடுவினை வந்ததுபோலும்!' என்றிரங்கி, உண்ணா நோன்பு கொண்டு உயிரை விட்டனள். மேலும் கண்ணகி யின் சீற்றத்தால் மதுரைமா நகரம் எரிக்கப்பட்டது.

இவற்றையெல்லாம் மதுரையில் நேரில் உணர்ந்த யான், பின்பு என் ஊராகிய காவிரிப்பூம்பட்டினம் சென்று, என் நண்பனான கோவலன் கொலையுண்டது

முதலியவற்ருல் யான் அடைந்த துயரங்களை ஆங்குள்ள பெரியோர்கட்கு உரைத்தேன். அவ்வாறு உரைத்த செய்தி சிறிது சிறிதாக ஊரெங்கும் பரவி, முடிவில் கோவலன் தந்தை மாசாத்துவானுக்கு எட்டிற்று. அவ்வணிகர் தலைவன் தன் மைந்தனுக்கும் மருகிக்கும் பாண்டிய னுக்கும் நேர்ந்த கொடுந்துன்பங்களைப் பொருதவனுய், இல்லத்தை வெறுத்துத் தான் படைத்த பெரும்பொருள் அனைத்தையும் உத்தம தானங்களில் செலவிட்டான்; பின்பு பௌத்த சங்கத்தார் இருக்கையாகிய இந்திர விகாரத் தைச் சார்ந்து, அங்கே பிறப்பறத் தவம் செய்துகொண் டிருந்த முனிவர் முந்நூற்றுவரைச் சரணமடைந்து துறவி யாயினன். அம்மாசாத்துவான் மனைவியாகிய கோவலன் தாயோ, தன் செல்வ மகனுக்கு நேர்ந்த துன்பத்தைப் பொருது, மிக வருந்தி உயிர் விட்டாள். கண்ணகியின் தந்தையான மாநாய்கன் தவ முனிவராகிய ஆசீவகரை யடைந்து, தன் பெரும் பொருள்களால் புண்ணிய தானங் களைப் புரிந்து துறவு பூண்டான். அவன் மனைவியாகிய கண்ணகியின் தாய் சில நாட்களில் உயிர் நீத்தனள். இச் செய்திகளையெல்லாம் கேட்ட மாதவி பெரிதும் வருந் தினுள்; பின்னர், துன்பம் விளைக்கும் பரத்தையர் கோலத் திலே தன் மகள் மணிமேகலையைப் புகவிடாது, தன் கூந்தலைக் களைந்து, பிக்குணியாகிப் பௌத்த விகார மடைந்து அறவுரை கேட்டனள்.

இவ்வண்ணம் யான் மதுரையிலிருந்து கொண்டுவந்த கொடுஞ் செய்தியைக் கேட்டவர்களுள் சிலர் இறந்தமை யால், அப்பாவத்தைப் போக்கும் பொருட்டுக் கங்கை யாட எண்ணி இங்கு வந்தேன். வேந்தே, நீ வாழ்க!'' என்று கூறி முடித்தனன்.

மாடலன் கூறியவற்றையெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த செங்குட்டுவன், 'நான்மறையாள, பாண்டியன்

தான் புரிந்த கொடுங்கோன்மையை நினைத்து உயிர் நீத்த பின்னர், அப்பாண்டி நாட்டில் என்ன நிகழ்ந்தது?' என்றான். அப்பொழுது மாடலன் அரசனை நோக்கி, 'மன்னர் மன்ன, கொற்கை நகரத்தே இளவரசனாய் விளங்கிய வெற்றிவேற் செழியன் என்பவன், திருமா பத்தினியாகிய கண்ணகிக்குப் பொற்கொல்லர் ஆயிரவரை ஒரு பகலில் பலியிடுவித்தான்; பின் தன்னரசனை இழந்து வருந்தும், புகழ்பெற்ற மதுரை மூதூரில் அரியணைமிசை அமர்ந்து விளங்கினான்' என்று கூறினான்.

அப்பொழுது வானில் அந்தி வெண்பிறை தோன்றிற்று. அங்ஙனம் பிறையெழுந்து விளங்கியதைச் செங்குட்டுவன் நோக்கினான். அக்காலை அருகிலிருந்த நிமித்திகர் தலைவன் சேர வேந்தனைப் பார்த்து, 'அரசர் ஏறே, வஞ்சிமா நகரிலிருந்து நீவிர் புறப்பட்டு இன்றோடு முப்பத்திரண்டு மாதங்கள் ஆகின்றன' என்று கூறி வாழ்த்தினான். பின்னர், செங்குட்டுவன் மாடலன் மூலம் தன் மைத்துனனாகிய சோழனது செங்கோல் ஆட்சியைக் கேட்டு மகிழ்ந்து, அவனுக்கு ஐம்பது துலாம் பொன்னைத் தானமாக அளித்தான். பின்னர், தனக்கு உதவி புரிந்த கன்னர் நூற்றுவரையும் அவர்களுடைய நாட்டுக்குச் செல்லுமாறு விடுத்து, தமிழரது பேராற்றலை யறியாது போர்க்கோலம் பூண்டு வந்து தோல்வியுற்ற அரசரைச் சோழ பாண்டியற்குக் காட்டிவர ஆணையிட்டுப் பின்பு தன் இளைப்பு நீங்கப் பள்ளியிற் பொருந்தித் துயின்றான்.

செங்குட்டுவன் நிலை இவ்வாறாக, வஞ்சிமா நகரிலே செல்வ மிகுந்த அரண்மனையுள் பொன்மயமாக விளங்கும் அந்தப்புரத்திலே அழகிய பெரிய கட்டிலின்மேல் கோப்பெருந்தேவியாகிய இளங்கோவேண்மாள் நாயகனது நெடுநாட் பிரிவால் தூக்கமின்றித் துன்புற்றிருந்தாள்.

சேரன் செங்குட்டுவனது வடநாட்டு வெற்றியை அறிந்த செவிலிமார்கள் மிக மகிழ்ந்து, கோப்பெருந் தேவியிடம் விரைந்துவந்து, 'அன்னாய், காதற் கொழுநன் பிரிவால் உண்டான நின் கவலையை இனி யொழியக்கடவாய். வெற்றிமாலை சூடி வரும் நின் கணவனை விரைவில் கண்டு களிப்பாய்' என்று பல்லாண்டு பாடினர். அரசிக்கு ஊழியம் செய்யும் கூனரும் குறளரும் தேவிபால் சென்று, அடிவணங்கி, 'அரசியே, எம்பெருமான் வெற்றியோடு வந்துவிட்டான். நலம் பெற்று மகிழ்ச்சியோடு விளங்குக' என்றார். இவ்வண்ணம் அரசியின் ஆயத்தார் பெருந் தேவியின் பிரிவாற்றா நிலையை ஆற்றி நின்றனர்.

அரசி, நால்வகை நிலங்களினின்றும் எழுந்த இன்னிசைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டே நாயகனது வரவை எதிர்நோக்கிய வண்ணமாக இருந்தாள். அப்பொழுது சேரன் செங்குட்டுவன், முத்து மாலைகள் அமைந்த வெண்கொற்றக் குடையின்கீழ் வாகையணிந்து, பட்டவர்த்தனக் களிற்றின்மேல் வந்து கொண்டிருந்தான். சேரனது வெற்றி வருகையைக் கண்ட கோநகர் முழுதும் மகிழ்ச்சியோடு வந்து மன்னனை யெதிர்கொள்ள, சேரன் செங்குட்டுவன் வெற்றித் தானையுடன் வஞ்சி மூதூரில் வந்து புகுந்தனன்.

# 4. பத்தினிக் கல்லை நிலை நாட்டுதல்

வெண்கொற்றக் குடையால் மண்ணகத்தைக் குளிர்வித்த செங்குட்டுவன் வெற்றி விளங்கும் வஞ்சிமா நகரில் புகுந்த பின்னர், மகளிரெல்லாம் கூடித் திருவிளக்குகளைக் கொணர்ந்து நின்று, மலர்களைத் தூவி, 'உலக மன்னனாகிய நம் அரசன் நீடு வாழ்க!' என்றேத்த, மாலைக் காலம் வந்தது. அப்பொழுது இளைஞரான வீரர்கள் இசைவல்ல மகளிரது இன்னிசையைக் கேட்டு இன்பக் கடலுள் ஆழ்ந்தனர்.

பின்னர், குடிகளது குறை தீர்க்க வெளிவரும் காலத்து விளங்கும் செங்குட்டுவனது திருமுகம்போலத் தோன்றிய முழுமதியை வஞ்சிமா நகர்க்குக் காட்டி மாலைக் காலம் மறைந்தது. அப்பொழுது வஞ்சிமா நகரின் நடுவு நின்றோங்கிய பொன்மயமான அரண்மனையிலே நிலா முற்றமாகிய மணியரங்கில் அம்முழுமதியின் காட்சியைக் காண மகளிர் தம் கைகளில் விளக்குகளை ஏந்திப் பல்லாண்டு பாடிய வண்ணம் ஒருபுடை வந்தனர். மத்தளம் யாழுடன் பண் கனிந்த பாடலிசைகள் ஒரு சார் ஒலித்தன. அப்பொழுது ஆடை, கண்ணாடி, அணிகலன்கள் முதலியவற்றைக் கொண்ட சேடியர் சூழ இளங்கோவேண்மாள் எழுந்தருளினாள். வேந்தர் பெருமானான செங்குட்டுவன் தன் பத்தினியோடு கூடி, மணியரங்கினை அடைந்து அதில் வீற்றிருந்தான்.

அப்பொழுது கூத்தில் வல்லவனாகிய சாக்கையன் என்பவன் அரசன்முன் வந்து நின்று, சிவபிரான் திரிபுரங்களை எரித்தபொழுது உமையவளை ஒரு பாகத்துக்

கொண்டு ஆடிய கொட்டிச் சேதம் என்னும் கூத்தினை ஆடிக்காட்ட, செங்குட்டுவனும் கோப்பெருந்தேவியும் அவ்வாடலைக் கண்டு மகிழ்ந்தனர். இருவரது நன்மதிப்பையும் பெற்ற கூத்தச் சாக்கையன் விடைபெற்று நீங்கிய பின்னர், செங்குட்டுவன் தன் தேவியுடன் அந் நிலா முற்றத்தை விட்டுப் புறப்பட்டு வேத்தியல் மண்டபத்தை அடைந்தான்.

அப்பொழுது நீலன் முதலானோர் மறையோனாகிய மாடலனுடன் அவ்விடம் வந்து, அரசனது ஆணை பெற்று உட்சென்று, அரசனை வணங்கினர். பின்னர், சேரனுடைய தூதர் தலைவனான நீலன் செங்குட்டுவனை வாழ்த்தி நின்று, ''வெற்றி வேந்தே, தேவரீர் எங்களுக்கிட்ட கட்டளைப்படியே சோழர் தலைநகரத்துக்குச் சென்று, சித்திர மண்டபத்தில் வீற்றிருந்த செம்பியர் பெருமானைக் கண்டு, வட நாட்டுப் போரில் அகப்பட்ட ஆரிய மன்னரை அவ்வேந்தனுக்குக் காட்டி, அவனடிகளை வணங்கி நின்றோம். அப்பொழுது அம்மன்னன், 'போர்க்களத்தே பேராண்மை காட்டிப் பொருது, தம் வாளையும் குடையையும் அக் களத்தேவிட்டு, உயிர் தப்பியோடிய வேந்தரைப் பிடித்துக்கொண்டு வருதல் ஒரு வெற்றியாகாது' என்று தன் தேர்ப்படைத் தலைவனை நோக்கிக் கூறினான்.

பின்னர் நாங்கள் மதுரை சென்று பாண்டியனைக் கண்டோம். 'அமர்க்களத்தே தங்கள் குடைக்காம்பை நட்டுவத் தலைவர்போலக் கையிலே பிடித்துக்கொண்டு, போர்க்களத்தைத் துறந்து, புறங்கொடுத்து, தவக் கோலம்கொண்டு ஓடின ஆரிய மன்னர்கள்மேல் இவ்வாறு மிக்க சீற்றம்கொண்ட அரசனது வெற்றி, இதுவரையில்லாத புதுமையாகும்' என்றான் அப் பாண்டியன்''

என அவ்வேந்தர்கள் இகழ்ந்து கூறிய மொழிகளைச் சேரர் பிரானிடம் கூறி நின்ருன்.

நீலன் கூறிய நிந்தை மொழிகளைச் செவியுற்ற செங் குட்டுவன் மிக வெகுண்டு, தாமரைக் கண்கள் தழல் நிறங் கொள்ள நகைத்தான். சேரனுக்குச் சோழ பாண்டியர் மேல் சீற்றம் பெருகுதலை மறையவஞகிய மாடலன் கண்டு, எழுந்து நின்று, ''வேந்தர் வேந்தே, நின் வெற்றி விளங்குவதாக! மிளகுக் கொடி மிக்க மலைப்பக்கத்தே உறங்கும் யானைக் கூட்டங்களையுடைய பகைவரது வியலூரை ஒருகால் அழித்து விளங்கிஞய். ஆத்திமாலை யுடையவரும் சோழர் குடியினருமாகிய ஒன்பதின்மரும் ஒருங்கு கூடி விளைத்த பெரும்போரை நேரிவாயில் என்ற ஊரில் வென்று திகழ்ந்தாய். பெரிய தேர்ச்சேனைகளுடன் இடும்பாத வனத்துத் தங்கி, அங்கு விளைந்த போரைக் கடந்தாய். நெடுங்கடலில் மரக்கலங்களைச் செலுத்தி, சினத்துடன் தன்மேல் எதிர்த்துவந்த ஆரிய மன்னரைக் கங்கைக்கரையில் வென்று வீறுபெற்ருய். உயர்ந்தோர் பலருடன் பழகி, அறிய வேண்டுவனவற்றை அறிந்துள்ள அரசர் ஏறே, நீடு வாழ்க! யான் கூறும் சொற்களை இகழாது கேட்டருள வேண்டும்:

உலகம் காத்தலை மேற்கொண்டு விளங்கும் உனது சிறந்த ஆயுட்காலத்தே ஐம்பதாண்டுகள் கழிந்துவிட்டன. இன்னும் நீ அறங்கள வேள்வியைச் செய்யாது, மறக்கள வேள்வியே செய்து வருகின்ருய். வீரவேந்தர் செயற்குரிய வினைகளை யெல்லாம் முற்றச்செய்து, உன்னுடைய தலை நகரத்தில் முன்னிருந்த புகழ் மிக்க உன் முன்ஞேரில் ஒருவரும் இன்று இல்லாமையால், இவ் யாக்கை நிலையற்ற தென்பதை நீயேஉணர்வாய்.செல்வம் நிலையா தென்பதை வெற்றியாளரான தமிழரசரை யிகழ்ந்த இவ் வாரிய மன்னரிடத்தில் நீயே கண்டனை. இனி இளமை நிலையா

தென்பதை, உனது நரை முதிர்ந்த யாக்கையால் நீயே காணலாம். தேவனாகப் பிறந்த ஒரு நல்லுயிர் மக்கட் பிறவிக்குத் திரும்பவும் கூடும். அவ்வாறே மக்கள் யாக்கையில் பொருந்திய ஆன்மா விலங்குடலை எடுக்கலாம். விலங்குடலை யெடுத்தது, துக்கம் மிக்க நரக கதியையும் அடையலாம். ஆதலால் இவ்வுயிர்கள் ஆடுகின்ற கூத்தரைப்போல் ஓரிடத்தே ஒரு கோலங்கொண்டு நிலைத்தல் ஒரு பொழுதும் இல்லை. உயிர்கள் தாம் செய்யும் வினைக்கேற்ப அவ்வந்நிலையை யடையும் என்பது குற்றமற்ற அறிஞரது மெய்யுரையாகும். பேரறிவு சான்றபெரியோய், இவற்றையெல்லாம் ஆழ்ந்து சிந்தித்தருள்க. யான் இவற்றையெல்லாம் பொருட்பரிசில் காரணமாகச் சொன்னேன் அல்லன். ஆதலால் வீட்டு நெறி யளிக்கும் வேத வழிப்படியே அரசர்க்குரிய பெரு வேள்விகளை நீ செய்தல் தகும். அவ்வறங்களை, 'நாளைச் செய்வோம்' என்று இருப்பின், இந் நல்லுயிர் நீங்கினும் நீங்கும். வாழும் நாட்களை வரையறுத் துணர்ந்தோர் இவ்வையகத்தில்லை. ஆதலால் வேள்வி செய்வதற்குரிய இவ்வேண்மாளுடன் கூடி, அரசரெல்லாம் நின்னடி போற்ற, அவ்வேள்வியைச் செய்து முடித்து, ஊழியோடூழி உலகம் காத்து நீடு வாழ்க!'' என்று அறிவுரை கூறினன்.

இவ்வண்ணம் மாடலன், செங்குட்டுவனது செவியே வயலாக, வேதம் வல்ல தன் நாவைக் கொண்டு உழுது, சிறந்த அற வித்துக்களை விதைத்தான். அவ்விதைகள் அப்போதே விளைந்து பக்குவம் பெற்ற உணவாய்ப் பெருக, அவற்றை விரைந்துண்ணும் வேட்கை அவ்வரசனுக்கு உண்டாயிற்று. அதனல் சேரர் பெருமான், வேதவழிப்பட்ட அறங்களை நன்கறிந்த வேள்வி யாசிரியர்களுக்கு மாடலன் கூறிய முறையே வேள்விச் சாந்தியின் விழாவைத் தொடங்கும்படி ஆணையிட்டான்.

பின்னர், சேரன் செங்குட்டுவன் தன்னால் சிறைப் படுத்தப்பட்ட ஆரிய மன்னராகிய கனக விசயரைச் சிறை யினின்று விடுவித்து, வேளாவிக்கோ மந்திரம் என்னும் மாளிகையில் அவர்களை வசிக்கும்படி செய்வித்து, தான் செய்யும் வேள்வி முடிந்ததும் அவ்வரசர்களை அவரது நாட்டுக்கு அனுப்புவதாக அறிவித்தான். அதுவரை அவ்வாரிய அரசர்களுக்கு வேண்டுவனவற்றைச் செய்து வருமாறு வில்லவன்கோதை யென்னும் சேனாதிபதிக்குக் கட்டளையிட்டான். பிறகு அழும்பில்வேள் என்னும் அமைச்சனோடு ஆயக்கணக்கர்களை ஏவி, வளம் மிக்க மூதூர்களிலே சிறைப்பட்டவரை விடுவித்துச் சிறைச் சாலைகளைத் தூய்மை செய்யவும், அரசிறை செலுத்தாது கடன் சுமந்த நாடுகளில் அவ் இறை தவிர்க்கவும் ஆணை யிட்டருளினான்.

'அரசர் முறை செயின் அல்லது பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' என்னும் உண்மையைக் கண்ணகி சோழனைக் கொண்டு விளக்கினாள்; 'செங்கோல் வளையுமாயின் அரசர் உயிர் வாழார்' என்னும் உண்மையைப் பாண்டி யனைக் கொண்டு விளக்கினாள்; 'தாம் கொண்ட சபதம் நிறைவேறினாலல்லது அரசர் தம் சினம் தணியார்' என்பதை ஆரிய அரசர் அறியும்படி சேரனைக் கொண்டு விளக்கினாள்; மதுரை மாநகரம் எரிந்து அழியும்படி கொடிய அழலை விளைவித்தாள்.

இவ்வண்ணம் அருஞ் செயல்களைப் புரிந்து, சேர நாட்டை அடைந்து, வேங்கை மர நிழலில் தங்கிய பத்தினியின் பொருட்டு அழகுபெற வகுத்த கோயிலிலே இமயத்திலிருந்து கொண்டுவந்த சிலையில், கைத்தொழில் திறமை முற்றிய பத்தினிக் கடவுளின் வடிவத்திற்கு அருச்சனைகள் புரிந்து, கடவுள் மங்கலமாகிய பத்தினிச்

சிலை நிலைநாட்டு விழாவை நிகழ்த்தும்படி ஆகமம் வல்ல அறிஞர்க்குச் சேரன் செங்குட்டுவன் கட்டளையிட் டருளினான்.

சேரன் கட்டளைப்படிப் பத்தினிக் கடவுளின் சிலை நிலைநாட்டு விழா நிகழ்ந்தது. அப்பொழுது அரசர் பலர் தத்தம் திறைகளைக் கொண்டுவந்து செலுத்திச் சேரனை வணங்கிச் சென்றனர். பிறகு கோவலன் கொலையுண்டது முதலியவற்றை மாடலன் கூறக் கேட்டோர்களுள் தேவந் தியும், கண்ணகியின் செவிலித்தாயும், அவள் அடித் தோழியும் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து மதுரைமா நகருக்கு வந்தனர். அங்கே அவர்கள் கண்ணகியைக் காணாமல் மாதரி மகள் ஐயையைக் கண்டனர்; பின்னர் அவளோடும் மலை நாட்டை அடைந்து, கண்ணகியின் கோயிலிற் புகுந்து, அங்கிருந்த செங்குட்டுவனுக்குத் தம்மை இன்னாரென அறிவித்துக் கண்ணகியின் பிரிவாற் றாமையால் மிக வருந்தி அரற்றினர். அப்பொழுது கண்ணகி தெய்வ வடிவத்தோடு வெளிப்பட்டுச் செங் குட்டுவனுக்குக் காட்சி கொடுத்து வாழ்த்தினாள்.

# III. மணிமேகலை

## 1. மாதவியின் உள்ளம்

பண்டைக் காலத்தில் ஒவ்வோர் ஆண்டும் நாட்டின் நலன் கருதிக் காவிரிப்பூம்பட்டினத்தில் இருபத்தெட்டு நாட்கள் இந்திர விழா நடைபெற்று வந்தது. அப்பொழுது அங்கு வீதிகளிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புது மணலைப் பரப்புவர். வீதிகளில் பூரண கும்பங்களும் பொற்பாலிகைகளும் பாவை விளக்குகளும் பரப்பி வைக்கப்பெறும். பந்தரிலும் அம்பலங்களிலும் அறிஞர்கள் அறச் சொற்பொழிவு ஆற்றுவர். மணிமேகலையுடன் கூடி மாதவி பாடும் பாடல்களையும் ஆடும் ஆடல்களையும் கண்ணாரக் கண்டும், காதாரக் கேட்டும் களிக்கத் தேவர்களும் தம் இருப்பிடத்தை விட்டுக் காவிரிப்பூம்பட்டினத்திற்கு வருவர்.

கோவலன் இறந்த பின்னர், மாதவி எல்லாவற்றையும் துறந்து, பௌத்த துறவியாகி, மணிமேகலையுடன் பௌத்த மடத்தில் இருந்து வந்தமையால், அவ்வாண்டு மாதவி தன் மகள் மணிமேகலையொடு இந்திர விழாவில் கலந்து, மக்களை ஆடல் பாடல்களால் மகிழ்விக்க முடியவில்லை. இதையுணர்ந்த தேவர்களும் பிறரும் பெரிதும் ஏமாற்றம் அடைந்தனர்.

மாதவியின் தாயாகிய சித்திராபதி யென்பவள் தன் மகள் இந்திர விழாவில் கலந்துகொள்ளாமையை அறிந்து, மிக வருந்தி, தன் மகளின் தோழியாகிய வயந்தமாலையை அழைத்து, 'பெண்ணே, மாதவியிடம் சென்று, கணி

கையர் குலத்தில் பிறந்துள்ள மகளிர்க்குரிய இயல்பை நன்கு தெரிவி. பாண்மகன் இறந்தபின், மற்றொருவன் கையகத்தமர்ந்து இன்பமளிக்கும் யாழைப்போலும் நம் இயல்பு; தேனையும் மகரந்தப் பொடியையும் உண்டு, பசையற்ற வறும் பூவைத் துறந்து செல்லும் வண்டின் இயல்பே நம் இயல்பு. அங்ஙனமிருக்க, கோவலன் இறந்தான் என்று மாதவி துறவினை மேற்கொண் டுள்ளதை அறிந்துள்ள நம் இனத்தார் என்னையும் என் மகளையும் பழித்துப் பேசுகின்றனர் என்பதை மாதவிக்கு எடுத்துக் கூறி, அவளையும் அவள் மகள் மணிமேகலையையும் திருவிழாவில் கலந்துகொள்ளும்படி சொல்' என்றாள்.

சித்திராபதியின் கட்டளையை ஏற்ற வயந்தமாலை, மணிமேகலையோடு மாதவியிருந்த அணிமலர் மண்டபம் சென்று, 'கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கையே, நீ தவ நிலையை மேற்கொண்டது நாணுடைத்து என்று உன் தாயும் ஆன்றோர்களும் மற்றும் பலரும் பழித்துப் பேசுகின்றனர்' என்றாள்.

வயந்தமாலை கூறியவற்றை யெல்லாம் அமைதியுடன் கேட்டுக்கொண்டிருந்த மாதவி, தன் தோழியை நோக்கி, ''நங்காய், என் காதலனாகிய கோவலன் உற்ற கடுந்துயர் கேட்டபொழுதே என் உயிர் என் உடலைவிட்டு நீங்கி யிருக்கவேண்டும். அங்ஙனம் நீங்காமையால் புகழுரை யையும், நாணம் என்னும் நல்லணியையும் இழந்து உளம் குன்றியுள்ளேன். காதலர் இறப்பின், உடனே பெருமூச் செறிந்து, இன்னுயிர் விடும் மகளிரும் உண்டு. அங்ஙனம் உயிர் நீங்கப் பெறாதவர், நன்னீர்ப் பொய்கையில் இறங்கு வதுபோல் தீ மூட்டி, அதில் குளிப்பர். அவ்வண்ணமும் செய்யாதோர் காதலரோடு உடனுறை வாழ்க்கைக்காகக்

கைம்மை நோன்பை மேற்கொண்டிருப்பர். இம் மூவகை களும் பத்தினிப் பெண்டிரின் செயல்களாகும். ஆனுல் கற்பிற் சிறந்த காரிகையாகிய என் கண்ணகியோ, மேலே குறித்த மூவகைப் பத்தினிப் பெண்டிருள் சேராது, மிகச் சிறந்து, தனித்து நிற்கும் தன்மை பெரிதும் பாராட்டற் பாலதே. 'மணிமேகலையாவது விழாவிற்கு வரலாமே' என்று நீ நினைக்கலாம். அவள் என் மகள் அல்லள்' காவலன் பேரூர் கனை யெரி மூட்டிய மாபெரும் பத்தினி யாகிய கண்ணகியின் மகள். ஆகையால் அவளும் பரத் தைமைத் தொழிலில் பொருந்தாள்.

இன்னும் கேளாய். கோவலன் இறந்த பின்னர், ஈங்கு இம்மாதவர் உறைவிடம் புகுந்து, அறவண அடிகள் அடிமிசை வீழ்ந்து, என் காதலன் உற்ற கடுந்துயர் கூறினேன். அப்பொழுது அப்பெரியார், 'பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்' என்றும், 'பிறவார் உறுவது பெரும் பேரின்பம்' என்றும், 'துன்பத்திற்குக் காரணம் பற்று' என்றும், 'இன்பத்திற்குக் காரணம் பற்றறுதல்' என்றும், நால்வகை வாய்மைகளையும், 'காமம், கொலை, கள், பொய், களவு என்னும் இவ்வைந்தையும் முற்றத் துறத்தலே ஐவகைச் சீலம்' என்றும் அருளினன். இவற்றையெல்லாம் கேட்டு, இன்புற்று, நன்னிலையில் இருக்கும் நாங்கள் அங்கு வந்து விழாவிற் கலந்து கொள்ளுதல் இயலாத செயல் என என்னைப் பெற் றெடுத்த சித்திராபதிக்கும் மைத்தடங் கண்ணர் மற்றை யோர்க்கும் தெரிவித்துவிடு'' எனக் கூறினுள்.

மாதவியின் மணிமொழிகளைக் கேட்ட வயந்தமாலை, பெறற்கரிய மாமணியைப் பெருங்கடலில் எறிந்தவர் போல் செயலற்றுச் சித்திராபதியிடம் சென்ருள்.

## 2. மணிமேகலை மலர்வனம் புகுதல்

மாதவி வயந்தமாலைக்குச் சொன்ன சொற்களை யெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த மணிமேகலை, தந்தை யாகிய கோவலனும், தாயாகிய கண்ணகியும் அனுப வித்த வெந்துயரை நினைக்குந்தோறும் கண்ணீர் பெருக, அந்நீர், அவள் புத்தபிரானுக்குத் தொடுத்துக் கொண் டிருந்த மாலையை நனைத்தது. அதனைக் கண்ணுற்ற மாதவி, மணிமேகலையின் துயரை மாற்ற நினைத்து, 'தாமரை தண்மதி சேர்ந்ததுபோலக் காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றி', ''உன் கையிலுள்ள தூய மாலை உன் கண்ணீரால் தூய்மை யிழந்துவிட்டது. ஆகையால் வேறு மாலை தொடுப்பதற்கு நீ மலர்வனம் சென்று, புதுமலர் பறித்து வா'' என்றாள்.

மாதவி கூறிய சொற்களைக் கேட்ட சுதமதி, அவளது திருமுகம் நோக்கி, ''தாயே, மணிமேகலை தனித்து அலர் கொய்யச் செல்வது நன்றன்று. அவளோடு மாமலர் கொய்ய யானும் போகிறேன். ஆனால், எச்சோலைக்குப் போகவேண்டும் என்பதை முதற்கண் தெளிதல்வேண்டும்.

இலவந்திகை யென்னும் யந்திர வாவியின் மதிற் புறம் போதல் கூடாது. உய்யானம் என்னும் சோலையில் உணர்ந்தோர் செல்லார். சம்பாதி வனத்தும் கவேர வனத்தும் தாக்கணங்கு உறைதலின் அறிந்தோர் எய்தார். அருளும், அன்பும், ஆருயிர் ஓம்பும் இயல்புமுடைய புத்த பகவானது கட்டளையால் பன்மரம் பூக்கும் உவவனம் என்பது ஒன்றுண்டு. அதனுள் ஓசையை வெளிப்படுத் தாமல் தன்னைச் சார்ந்த பொருளை மட்டும் புறத்தே காட்டும் பளிங்கு மண்டபம் ஒன்றுண்டு. அதனுள்

சுடரொளி விரிக்கும் தாமரைப் பீடிகை யொன்றுண்டு. அதில் அரும்பினை யிடின், அது மலரும்; மலரை யிடின், அது வாடாது. பல்லாண்டு கழியினும், அங்கு இடப் பெற்ற மலர்களில் வண்டினம் மொய்க்கா. ஒரு தெய் வத்தை மனத்தில் நினைத்து, 'அதன் திருவடியில் இம்மலர் சேர்க' என அப் பீடிகையில் மலரிடின், அம்மலர், குறித்த தெய்வத்தின் திருவடியைச் சாரும். மக்கள் ஒன்றையும் நினையாது அப் புத்த பீடிகையில் மலர்களை யிடின், அவை எங்கும் செல்லாமல் இட்டவிடத்திலேயே இருக்கும். இதன் காரணத்தைக் கூறுகிறேன் கேளாய்:

'மனம் சாராதிருப்பினும் அறமும் பாவமும் உள வாகும்' என்று சொல்லுவோர் வருந்தவும், 'மனத்தொடு சாராதபொழுது அறமும் பாவமும் சிறிதும் உளவாகா' என்போர்க்கு எடுத்துக்காட்டாகவும், மயன் என்னும் தெய்வத் தச்சனால் அப் பீடம் செய்யப்பட்டதாகும். அவ்வனம்தான் நின் மகள் செல்லுதற்குரியது'' என்றாள்.

சுதமதி கூறியவற்றைக் கேட்ட மாதவி, புது மலர் கொய்து வர மணிமேகலையோடு சுதமதி செல்வதற்கு ஒருப்பட்டாள். பின்பு மணிமேகலை சுதமதியுடன் மணித் தேர் வீதியில் சென்றாள். அவள் சென்றுகொண்டிருந்த பொழுது சமணத் துறவி யொருவனும் சென்றுகொண் டிருந்தான்.

அத்துறவி, உறியிலே வைக்கப்பெற்ற கமண்டலத்தை யுடையவனாய், நுண்ணிதாகத் திரண்ட பிரம்பையுடைய வனாய், கெடாத சிறப்பினையுடைய அருகத்தானத்தில் உள்ளவனாகக் காட்சி யளித்தான். அப் பெரியோன் நாணத்தையும் உடையையும் துறந்து, காணா வுயிர்க ளிடத்தும் பேரன்புடையவனாய், உண்ணா நோன்பினை மேற் கொண்டு, வருந்துதலையுடைய ஒரு யானையைப்போல்

கழுவாத மேனியோடு விளங்கினன். அவனுடைய தோற்றத்தைக் கண்ட கட்குடியன் ஒருவன் அவன்பால் அணுகி, 'அடிகளே, நும் மலரடி தொழுகின்றேன். எம் உரையைச் சிறிது கேட்டருள்க. அழுக்குடைய யாக்கையில் புகுந்துள்ள நும் உயிர், புழுக்கறைப்பட்டோர் போன்று உளம் வருந்ாது, இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும், இறுதியில் பேரின்பத்தையும் தரும் பொருள் ஒன்றுண்டு. அதன் சிறப்பினை என் தலைமகன் எனக்கு உரைத்துள்ளான். அதுதான் கொழுமடல் தெங்கின் விளை பூந்தேறல். மெய்த்தவத்தீரே, அடிகள் அதனை யுண்டு தெளிந்து, யோகத்து உறுபயன் கண்ட பின்னர் எம்மையும் துறந்து செல்லலாம். தயை கூர்ந்து நான் கொடுக்கும் இதனை உண்ணும்' என இரந்து நின்ருன்.

இவ்வண்ணம் சமணத் துறவியைக் கண்டு எள்ளி நகையாடிய களிமகனைக் கண்ட மக்கள் ஒருபுறம் திரண்டு நின்றனர்.

மணிமேகலை மலர்வனம் சென்றுகொண்டிருந்த வழியில் ஒரு பித்தனும் சென்றுகொண்டிருந்தான். அவன் செயலைக் கண்டு பலர் அவனைச் சூழ்ந்து நின்றனர். மன மயக்கம் கொண்ட அம்மகன் அலரிமாலையையும் எருக்கமாலையையும் அணிந்திருந்தான்; கிழிந்த துணியும் உடைந்த சிறுசுள்ளிகளும் அவனுக்கு ஆடையாக அமைந்திருந்தன. அவனது உடம்பெல்லாம் வெண்ணீறும் சந்தனமும் பூசப்பெற்றிருந்தன. அவன் தன்னைச் சூழ்ந்து கொண்டிருந்த பலரையும் பன்முறை நோக்கிப் பொருத்தமில்லாத இழிந்த சொற்களைப் பேசிக்கொண்டிருந்தான். அப் பித்தன் திடீரென அழுவான்; திடீரெனக் கீழே விழுவான்; அரற்றுவான்; கூவுவான்; உடனே பக்கத்தில் உள்ளோரைக் கண்டு தொழுவான்; எழுவான்;

சுழன்று நிற்பான்; சிறிது தூரம் ஓடுவான்; பின்னர் ஒரு புறம் ஒதுங்கி நிற்பான். இவ்வண்ணம் மையலுற்ற மகன் பின் வருந்தி நின்றனர் பலர்.

மணிமேகலை செல்லும் வீதியின் மற்றொரு புறத்தில் ஒரு கண்கவர் காட்சி.

சுரிந்த தாடியும், இருண்ட கூந்தலும், பவளச் செவ்வாயும், ஒளிவீசும் வெண்ணிறப் பற்களும், ஒளியும் செவ்வரியும் வாய்ந்த நெடுங்கண்ணும், கருங்கொடிப் புருவமும், பிறை நுதலும், முழந்தாள் அளவாக வுடுக்கும் உடையும் வாய்ந்து, முன்னொரு காலத்தில் வாணன் பேரூரில் விளங்கிய ஒரு தெருவில் காமன் ஆடிய பேடிக் கூத்தினை ஒருவன் ஆடினான். அக்கூத்தினை மக்களிற் பலர் கண்டு களித்து நின்றனர்.

மணிமேகலை சென்ற தெருவின் இருபுறத்துமுள்ள மாட மாளிகைகளில் எழுதப்பெற்றிருந்த சித்திரங்களைக் கண்டு சிலர் வியந்து நின்றனர்.

சிறு தேரின்மேல் செய்து வைக்கப்பட்டிருந்த யானையின்மேல் சிறுவர்களை யேற்றி, 'ஆலமர் செல்வன் மகன் விழாக் காண்மின்' என்று சிலர் சொல்ல, அக்காட்சியைச் சிலர் கண்டு நின்றனர். இவ்வண்ணம் பலபல காட்சிகளைக் கண்டு நின்ற மக்கள் எல்லோரும், முன்னம் விராட நகரத்தில் பேடி வடிவங்கொண்டு சென்ற அருச்சுனனைக் கண்டு வியந்து, அவனைச் சூழ்ந்துகொண்டவர்களைப் போல் மணிமேகலையைச் சூழ்ந்துகொண்டனர்.

அவர்களுள் சிலர், 'இவ்வழகியை அரிய தவ நெறியில் செலுத்திய தாயோ கொடியள்; பெருந்தன்மை யற்றவள். இப்பெண்மணி மாமலர் கொய்ய மலர்வனம் புகின், ஆங்குள இள அன்னம், மடந்தைதன் நடைக்கு

நாணுது அங்கிருக்க வல்லுந கொல்லோ? ஆங்குள மாமயில் இவளது சாயல் கற்பன கொலோ? அச்சோலையில் உறையும் பைங்கிளிகள் இவளது இனிய சொற்களுக்குத் தோல்வியுறுமே யொழிய ஒப்பனவல்ல' என்று இத்தகைய மொழிகளைக் கூறி, மணிமேகலையின் பேரழகைப் பெரிதும் பாராட்டி வருந்தி நின்றனர்.

அப்பொழுது சுதமதி மணிமேகலைக்கு மலர் வனத்தைக் காட்டினாள். அச்சோலை, தன்கண் விளங்கிய குரவமும், மரவமும், குருந்தும், கொன்றையும், திலகமும், வகுளமும், செங்கால் வெட்சியும், நரந்தமும், நாகமும், புன்னையும், பிடவமும், தளவமும், தாழையும், குடசமும், வேதிரமும், கொழுங்கால் அசோகமும், செருந்தியும் வெங்கையும், பெருஞ் சண்பகமும் தம் விரிந்த மலர்களைப் பரப்ப,

"வித்தகர் இயற்றிய விளங்கிய கைவினைச்
சித்திரச் செய்கைப் படாம்போர்த் ததுவே"

ஒப்பத் தோன்றிற்று. மணிமேகலை தன் செந்தளிர்ச் சேவடியால் நிலம் வடுவுறுவண்ணம் மலர்களைக் கொய்யச் சுதமதியோடு அம் மலர்வனம் புகுந்தாள்.

# 3. சுதமதி கூறிய அறிவுரை

உவவனம் என்னும் பூம்பொழிலில் சுதமதி மணிமேகலைக்குப் பலபல இயற்கைக் காட்சிகளைக் காட்டி நின்றாள். அக்காட்சிகளை நாமும் கண்டு களிப்போம்:

ஒருபுறம் குழலின் இன்னிசையைத் தும்பிகள் பொருத்திக் காட்டின; யாழின் இன்னிசையை மழலை வண்டினம் மீட்டின; அரங்கில் மயில்கள் ஆடின; மந்திகள் இவற்றை யெல்லாம் கண்டு களித்தன.

மற்றொருபுறம், மாசறத் தெளிந்த மணிநீர்ப் பொய்கையில், பன்மலரிடை நின்று ஒரு தனியோங்கிய விரைமலர்த் தாமரையில் அரச அன்னம் வீற்றிருந்தது; கரைநின்று ஒரு மயில் களிநடம் புரிந்தது; மரக் கொம்பரில் கருங்குயில்கள் பாடின.

வேறொருபுறத்தே, இயங்கு தேர்வீதியில் எழு துகள் சேர்தலால் வயங்கொளி மழுங்கிய மணிமேகலையின் முகம் போல், கரைநின்று ஓங்கிய தாழையின் கொழுமடல் அவிழ்ந்தது; அதனால் வெண்சுண்ணம் ஆடிய தாமரையின் காட்சியைச் சுதமதி காட்ட, மணிமேகலை கண்டு களித்து நின்றாள்.

இவ்வண்ணம் சுதமதியும் மணிமேகலையும் மலர்வனக் காட்சிகளைக் கண்டு இன்புற்றிருந்தனர்.

அப்பொழுது மன்னவன் மகனாகிய உதயகுமரன், மதவெறி கொண்டு தெருக்களில் மக்களை வருத்தித் திரிந்த காலவேகம் என்னும் யானையின் மதத்தை யடக்கித் தேரில் வந்துகொண்டிருந்தான்; வழியில் தன் நண்பனான வணிக மகன் ஒருவனைச் சந்தித்து, மணி

மேகலை மலர்வனம் சென்ற செய்தியை அவன் வாயிலாக அறிந்தான்.

பல நாட்களாக மணிமேகலைபால் காதல் கொண்டிருந்த உதயகுமரன், நண்பன் சொற்களைக் கேட்டவுடனே மிக மகிழ்ந்து, 'அவளை என் தேரில் ஏற்றிக் கொண்டு வருவேன்' என்று அந்நண்பனிடம் சொல்லி விட்டுத் தன் தேரைச் செலுத்தி, மலர்வனத்தின் வாயிலை அடைந்தான்.

மணிமேகலை உதயகுமரனது தேரொலியைக் கேட்டுச் சுதமதியை நோக்கி, 'ஆயிழையே, உதயகுமரன் என்பால் காதல் உள்ளத்தன் என ஒருநாள் வயந்தமாலை மாதவிக்கு உரைத்ததைக் கேட்டுளேன். இப்போது நம் காதில் வந்து ஒலிக்கும் ஒலி அவனது தேரொலி போலும். என் செய்வேன்!' என்று கலங்கினாள். அதனைக் கேட்ட சுதமதி, துன்பத்தால் தளர்ந்த மயில்போல் தவித்து, அச் சோலையில் விளங்கிய பளிக்கறை மண்டபத்துள் மணிமேகலையைப் புகுவித்து, தாளிட்டு அவ்வறைக்கு ஐந்து விற்கிடை தூரத்தே நின்று, உதயகுமரன் வருகையை நோக்கிய வண்ணமாக இருந்தாள்.

அப்பொழுது உதயகுமரன் விரைந்து வருகின்ற தேரை நிறுத்தி, பன்மலர்ப் பூம்பொழிற்கண் பகலவன் தோன்றியதுபோல் தோன்றி, பூமரச் சோலையையும், பொலிந்து விளங்கிய செய்குன்றுகளையும் தன் தாமரைச் செங்கண்களால் பார்த்துக்கொண்டு வந்தவன் சுதமதியைக் கண்டான். உடனே அவ்வரசிளங்குமரன், அவளை நோக்கி, 'மணிமேகலை எங்குற்றனள்?' என்று கேட்டான்.

சுதமதி, அரச குமரனை நோக்கி, ''இளமை நாணி, முதுமை யெய்தி, தம்முள் பகைமைகொண்டு வந்தார் இருவருடைய சொல்லையும் ஆராய்ந்து, முடிவை அவர்கள் உள்ளம் உவக்க விளக்கிக் கூறிய அறிவுடையோனாகிய

கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழன் வழித் தோன்றலாகிய வுனக்கு, அறிவும், சால்பும், அரசியல் வழக்கும் மகளிர் செப்பலும் உண்டோ? எனினும், யான் ஒன்று சொல்லுவேன்; விறலோய், கேளாய் :

நீ காதலிக்கும் உடலானது, இருவினையின் பயனாக வந்துள்ளது. மீண்டும் இருவினைகளாகிய பயிர்கள் விளைவதற்கு நிலமாயுள்ளது; நறுமணமுடைய சந்தனம், மலர் முதலியவற்றால் புனையாது விடின், புலால் நாற்றத்தைப் புறத்தே வீசும் தன்மையது; முதுமையையும் சாதலையும் உடையது; தீய பிணிகளுக்கெல்லாம் இவ்வுடலே இருப் பீடம்; பற்றுக்கள் எல்லாம் பற்றியிருத்தற்குரிய இடம்; குற்றங்களையெல்லாம் தன்னகத்தே கொண்டுள்ள ஒரு பாத்திரம்; பாம்பு அடங்கியுள்ள புற்றைப்போல் சினம் தங்கும் இடம்; அவலம், கவலை, கையாறு, அழுங்கல் நீங்காத உள்ளத்தினைத் தன்பால் உடையது. மக்கள் யாக்கை இத்தன்மையது என்று உணர்ந்து, மிக்கோய், இவ்வுடலைப் பையைப்போல் திருப்பிப் பாராய்:''

''வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலம் கவலை கையாறு அழுங்கல்
தவலா வுள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இதுவென வுணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்''

என யாக்கையின் இழிவை எடுத்து நன்கு விளக்கி நல்லறிவு கொளுத்தினாள்.

சுதமதி எடுத்துரைத்த அறிவுரை, உதயகுமரனது உள்ளம் சேரா முன்னர், மணிமேகலை, பவளப் பாவை போல் உதயகுமரனுக்குக் காட்சியளித்தாள்.

# 4. சுதமதியின் வரலாறு

மணிமேகலையைப் பளிக்கறையில் கண்ட உதய குமரன், அப்பளிக்கறைக்குள் செல்ல நினைந்து, வாயிலைக் காணுமையால் கையினுல் அவ்வறையைச் சிறிது நேரம் தடவிக்கொண்டேயிருந்தான். பின்னர், அவ் அரசிளங் குமரன், அங்கு நின்றுகொண்டிருந்த சுதமதியின் முகத்தை நோக்கி, 'நின் இளங்கொடி எந்நிலையள்?' என்று வினவினுன். அப்பொழுது சுதமதி அரசனை நோக்கி, 'ஐய, அவள் ஐம்புலன்களையும் அடக்கும் ஆற்றல் வாய்ந்த பெரியோர்களைப்போல் துறவறத்தில் நின்று, புத்த தேவனைப் பணிகின்ற தன்மையள்; எல்லோரிடத்தும் பேரன்பு பூண்டு, மிகச் சிறந்து விளங்குகின்ருள்' என்ருள்.

மணிமேகலையின் நிலையைச் சுதமதியால் அறிந்த உதயகுமரன், சுதமதியை நோக்கி, 'நீ மணிமேகலையொடு கூண்டு வருவதற்குரிய காரணம் யாது?' என்ருன்.

உதயகுமரன் கேட்ட கேள்விக்கு விடையளிக்கும் சுதமதி,

> "வார்கழல் வேந்தே, வாழ்கநின் கண்ணி!
> தீநெறிப் படரா நெஞ்சினை யாகுமதி !"

என முதற்கண் இளவரசனை வாழ்த்திப் பின்னர்ப் பேசத் தொடங்கினுள் :

'வீங்கு நீர் ஞாலம் ஆள்வோய், கேட்டருள். கற்பிற் சிறந்து விளங்கிய என் அன்னையை நான் இழந்துவிட்

டமையால், என் தந்தையார் என்பால் கொண்டிருந்த பேரன்பால் வீடுதோறும் சென்று இரந்து, என்னை உண்பித்துத் தானும் உண்டு, நாட்களைக் கழித்து வந்தார்.

ஒரு நாள் என் அருமைத் தந்தையார் இரத்தற்குச் சென்றுகொண்டிருந்தபொழுது இளங்கன்றையுடைய ஒரு பசு அவரை முட்டி, அவரது வயிற்றைக் கிழித்து விட்டது. உடனே அவர், தம் சரிந்த குடலைக் கையில் ஏந்திக்கொண்டு, நானிருந்த சமணப் பள்ளியிற் புகுந்து, 'அன்பையும் அருளையும் ஆளும் முனிவர்களே, யான் உங்கள் அடைக்கலம்; என்னைக் காத்தருள் புரிக' என்று முறையிட்டனர்.

என் தந்தையாரின் வேண்டுகோளைச் சிறிதும் பொருட்படுத்தாத சமணத் துறவிகள் சினந்து, 'உங்களை இந் நிலையில் ஏற்றுக்கொள்வது இவ்விடத்திற்குரிய தன்மையன்று' என்று கூறி, எங்களைப் புறத்தே தள்ளி விட்டனர். அப்பொழுது நாங்கள் இருவரும் மிக வருந்திப் புறவீதியிற் சென்று, 'எம்மைப் பாதுகாக்கும் அறவோர் யாரேனும் உண்டோ?' எனக் கண்ணீர் விட்டுக் கதறினோம்.

அப்பொழுது மனைதொறும் சென்று, ஐயமெடுக்கும் பாத்திரத்தைக் கையில் உடையவனும், முழுமதிபோன்ற முகமுடையவனும், பொன்போல் திகழும் பொலம்பூ ஆடையனுமாகிய சங்க தருமன் என்னும் முனிவன் விரைந்து வந்து, எங்களை அருளுடன் நோக்கி, அன்புடன் கலந்த அருள் மொழிகளால் எங்கள் செவியகம் நிறைத்து, நெஞ்சகம் குளிர்ப்பித்து, தம் கைப்பாத்திரம் என் கையில் தந்து, என் தந்தையின் துன்பம் நீங்க அவரைத் தழுவி யெடுத்துக்கொண்டு சென்று, பௌத்த

சங்கத்தார் இருப்பிடத்தைக் காட்டி, என் தந்தையின் மரணத் துன்பத்தையும் நீக்கினன். அம்முனிவன் எனக்குச் சொல்லியருளிய புத்த பகவான் பாதங்களை என்னுடைய நா பாராட்டுமே யல்லாமல் வேறொன்றையும் சொல்ல அறியாது. அன்று முதல் பௌத்த சங்கத்தைச் சார்ந்துள்ள மாதவியிடம் இருந்து வருகிறேன்'' என்று சுதமதி தன் வரலாற்றைக் கூறி முடித்தாள்.

உதயகுமரன் சுதமதி கூறியவற்றை யெல்லாம் கேட்ட பின்னர், 'அஞ்சொல் ஆயிழையே, உன் வரலாற்றினை அறிந்தேன். வஞ்சி நுண்ணிடை மணிமேகலை தனைச் சித்திராபதியின் துணையால் சேர்தல் உறுதி' என்று கூறிவிட்டு அச்சோலையினின்று அகன்றான்.

# IV. கம்ப ராமாயணம்

## 1. கன்னிப் போர்

கம்ப ராமாயணத்தை இராமபிரானது வரலாற்றைத் தெரிவிக்கும் நூல் என்றும், சிறையிருந்த சீதாபிராட்டியின் ஏற்றத்தைத் தெரிவிக்கும் திருநூல் என்றும் கூறுவர். சிலர் இதனை வீர காவியம் என்பர். பல சுவைகளும் இந்நூலுள் பரந்து காணப்படினும், வீரச்சுவையே பல காண்டங்களில் வீறு பெற்று விளங்குவதைக் காணலாம்.

> "கல்வி தறுகண் இசைமை கொடையெனச்
> சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

என்பது ஒல்காப் புலமைத் தொல்காப்பியரது சூத்திரம். இதற்கு, 'கல்வியும் தறுகண்மையும் இசையும் கொடையும் என்னும் நான்கும் பற்றி வீரம் பிறக்கும்' என்பது பேராசிரியரது உரை. ஈண்டுத் தறுகண்மைபற்றிப் பிறக்கும் வீரத்தைக் காணலாம்:

இராமபிரான் பாலை நிலத்தைப் பார்த்து, 'என் தந்தையாரது நாட்டின் ஒரு பகுதி இவ்வண்ணம் அழிந்திருப்பதற்குக் காரணம் யாது?' என விசுவாமித்திரனை நோக்கிக் கேட்க, அம்முனிவன், தாடகையால் அப்பகுதி அழிந்த காரணத்தைக் கூறி, 'இவ்வரையிருப்பவள் அவள்' என்று சொல்லி முடிக்கு முன், அக்கொடிய அரக்கி, 'மைவரை நெருப்பெரிய வந்ததென வந்தாள்.' பின்னர் அப்பாதகி, நெருப்பெழ விழித்து, 'இக்காட்டில்

உள்ள யாவற்றையும் நான் அழித்துள்ளமையால், இனி எனக்கு உண்ண உணவில்லையே என்ற கருணையுடன் வந்தீர்களோ ? அல்லது விதி பிடர் பிடித்துத் தள்ள வந்தீர்களோ?' என்று இராமனை நோக்கிச் சூலத்தை எறியத் தொடங்கினள். தாடகையைக் . கொல்ல வேண்டும் என்பது முனிவன் கருத்தென்பதை இராம பிரான் குறிப்பால் அறிந்தும், 'பெண் கொலை பாவம்' என்றெண்ணி ஒன்றும் செய்யாமல் இருந்தான். அப் பொழுது, விசுவாமித்திர முனிவன்,

''தீதென் றுள்ளவை யாவையும் செய்தமைக்
கோதென் றுண்டிலள் இத்தனை யேகுறை
யாதென் றெண்ணுவ திக்கொடி யாளையும்
மாதென் றெண்ணுவ தோமணிப் பூணினய்''

என்று மற்றும் பலபல கூறினன்.

முனிவன் கூறியதைக் கேட்ட இராமபிரான், ''மெய்யின் வடிவாய் விளங்கும் மேலோய், அறத்திற்கு மாறான வினைகளேனும், 'இது செய்க' என்று தாங்கள் ஏவினல், உமது வாக்கை வேத வாக்கெனக் கொண்டு செய்தலன்றோ அறம் செய்யும் முறை'' என்றான். அவ் வளவில், தாடகை, சூலம் முதலியவற்றை யெறிந்து, போர் தொடங்க, இராமனும் அக் கொடியாளை எதிர்த்துக் கடும்போர் புரிந்தான். அப்போரில் இராமன் தாடகையின்மேல் விட்ட சுடு சரம், அவளது நெஞ்சிற் பாய்ந்து, மிக விரைந்து சென்ற விதத்தைக் கவிச் சக்கர வர்த்தியின் கவின்மிகு பாடலால் அறிந்து மகிழலாம்:

'' சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம் கரிய செம்மல்
அல்லொக்கும் நிறத்தி னாள்மேல் விடுதலும் வயிரக் குன்றக்
கல்லொக்கும் நெஞ்சில் தங்காது அப்புறம் கழன்று கல்லாப்
புல்லர்க்கு நல்லோர் சொன்ன பொருளெனப் போயிற்
றன்றே.''

இராமனது கைவண்ணத்தைக் குலமுறை கிளத்து படலத்தில் கூறப் புகுந்த விசுவாமித்திர முனிவன்,

"உலையுருவக் கனலுமிழ்கண் தாடகைதன் உரம்உருவி
மலையுருவி மரமுருவி மண்ணுருவிற்று ஒருவாளி"

எனக் கூறியுள்ளதுகொண்டு இராமபிரானது வீரக் கணையின் பேராற்றலை அறியலாம்.

இராமனது அம்பாகிய ஊழிக்காற்று மோத, கல் நெடு மாரி பெய்யக் கடையுகத்து எழுந்த மேகம், மின்னொடும் இடியொடும் நிலமிசை வீழ்வதுபோலத் தாடகை மடிந்து வீழ்ந்தாள்:

"பொடியுடைக் கானமெங்கும் குருதிநீர் பொங்க வீழ்ந்த
தடியுடை எயிற்றுப் பேழ்வாய்த் தாடகை தலைகள் தோறும்
முடியுடை அரக்கற்கு அந்நாள் முந்தியுற் பாதமாகப்
படியிடை யற்று வீழந்த வெற்றியம் பதாகை யொத்தாள்"

என்ற பாடலிலிருந்து, 'நிலமிசை குருதிநீர் பொங்க வீழ்ந்த தாடகையின் தோற்றம், இராவணனுக்கு இனி நிகழும் தீங்கைத் தெரிவிக்க, அவனது வெற்றிக் கொடி அற்று வீழ்ந்ததை யொத்தது' என்ற கம்பரின் கற்பனை சக்தி பெரிதும் போற்றற்பாலது.

# 2. சடாயுவின் வீரப்போர்

மாய வேடம் பூண்டு வந்த இராவணன், சீதையின் சுடுமொழியால் அவ்வேடத்தின் நீங்கி, அப் பெண்ணரசியைக் கையால் தீண்டாமல், அவள் இருந்த தரையோடு பேர்த்தெடுத்துத் தேர்மேல் வைத்துச் சென்றான்.

அப்பொழுது சீதை, அஃறிணைப் பொருள்களையெல்லாம் பார்த்து, 'மலையே, மரமே, மயிலே, குயிலே, நிலையா வுயிரே, நீங்கள் என் நிலையை, அழியாத வலிமையையுடைய என் நாயகனிடம் சென்று சொல்லுங்கள். அவர் வந்து அம்பெய்து, என்னை மண்ணோடு பேர்த்தெடுத்த மாபாவியின் இருபது கைகளையும் பத்துத் தலைகளையும் அறுத்தெறிய, அவை சிதறி விழுவதைக் கண்டு சிரியுங்கள்' என்றாள்.

இவ்வண்ணம் மிக்க வருத்தத்தோடு சினந்து கூறிய சீதையின் மொழிகளைக் கேட்ட இராவணன், 'பெண்ணே, நீ குறிக்கும் அம்மானிடர், போரில் என்னைக் கொன்று உன்னை மீட்பரோ? வல்லவராயின் அம்மானிடர் உன்னைக் கொள்க' என்று தன் கைகளை அறைந்து பெருஞ் சிரிப்புச் சிரித்தான்.

அப்பொழுது சீதை, இராவணனை நோக்கி, 'வஞ்சகனே, மாயையால் ஒரு பொய்ம்மானை உண்டாக்கி, உன் உயிரைக் கவரும் ஆற்றல் வாய்ந்த என் நாயகரை இவ்விடத்தைவிட்டுப் போகும்படி செய்தாய். அவ்வாறு செய்து, அவரில்லாத சமயத்தில் இங்கு வந்து, கள்ளனைப் போல் என்னைக் கவர்ந்து செல்கின்றாய். அவரோடு போர் புரிந்து, உன்னைக் காத்துக்கொள்ளும் வகையை அறிவா

யானால், உனது தேரைச் செலுத்தாதே. நீ வீரனானால், உன் கூட்டத்தார்களாகிய இராக்கதர்களை விரைந்து கொன்று, உன் தங்கையின் மூக்கை அறுத்தவர்களாகிய மானிடர் காட்டில் இருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்வியுற்றும், அவர்களை யெதிர்த்துப் போர் புரிந்து பழி தீர்க்க முயலாமல் இம்மாயச் செயலைச் செய்தது, உனக்கு அவர்களிடத்திலுள்ள அச்சத்தின் மிகுதியை நன்கு அறிவிக்கின்றது' என்றாள்.

சீதையின் சொற்களைக் கேட்ட இராவணன், 'நங்காய் வலிமையற்ற உடலையுடைய இழிந்த மனிதர்களுடனே, யான் எதிர்த்துப் போர் செய்யின், அச்செயல் நெருப்புக் கண் பொருந்திய நெற்றியையுடைய சிவபிரானது வெள்ளி மலையைப் பெயர்த்தெடுத்த மிக வலிய என் தோள்களுக்குப் பழியைத் தருமன்றோ? அவ்வாறு போரை யேற்றுப் பழியைப் பெறுவதைக் காட்டிலும் வஞ்சனைச் செயலே பயன் தரும்' என்றான்.

இராவணன் பேசிய அசட்டு மொழிகளைக் கேட்ட சீதாபிராட்டி, "இரக்கமற்ற பாவிகளாகிய அரக்கர்களுக்குத் தமது குலப் பகைவர்கள்பால் போருக்குச் செல்வது குற்றமும், அவர்களுடனே வாட்போர் புரிவது நாணமும் போலும். தீவினையே புரிந்து பழகிய அரக்கர்கள், 'இது குற்றம்' என்றும், 'இது பழி' யென்றும் எண்ணுதலும் உண்டோ?" என இகழ்ந்து பேசினாள்.

இவ்வண்ணம் சீதையும் இராவணனும் ஒருவரை யொருவர் இகழ்ந்து உரையாடிக்கொண்டிருந்ததைக் கண்ட கழுகரசனான சடாயு, நெருப்பினைப் பரப்புகின்ற கண்களையும், மின்னென விளங்கும் மூக்கையும் கொண்டு, பொன்னெடுங் குன்றம் வானிலிருந்து வருவதுபோல்

பறந்து வந்து, இராவணனை எதிர்த்து, 'எங்கடா போகின்றாய்? நில்லு, நில்லு' என்று அதட்டினான். பின்பு, அவன் சீதையை நோக்கி, 'பயப்படாதே, நான் உன்னைக் காக்கின்றேன்'' என்றான்.

பிறகு கழுகரசன் இராவணனை நோக்கி, 'முட்டாள், என் செய்திட்டாய்! உன் வாழ்வைச் சுட்டாய்; கிளையொடு கெட்டாய்; இவளை விட்டால் பிழைப்பாய். இல்லையேல் இறப்பாய். பேதாய், நீ செய்த தீய செயல், இம்மையில் உன்னை உன் உறவினரோடு ஒழிக்கும்; மறுமையில் நரகத்தில் அழுத்தும். இராமபிரான் ஆயிரக் கணக்கான உன் கூட்டத்தாரைக் கொன்று குவித்ததை அறியாயோ? கொல்ல வந்த யானைமீது கல்லெறிந்து கோபமூட்டினாய். இராமன் முன் மும்மூர்த்திகளும் புலியைக் கண்ட மான்போல் நடுங்கி ஒடுங்குவர். அவ் வீரன் வருமுன் இப்பெண்ணரசியை விட்டுப் போய்விடு. இவளை நான் இராமனிடம் சேர்ப்பேன். அவ்வுத்தமன் வந்து உன்னைக் காணில், நீ சாவது தப்பாது. அவ்வீரனைத் தடுக்க ஒருவராலும் ஆகாது' என்றான்.

சடாயு கூறியவற்றைக் கேட்ட இராவணன், கண்கள் சிவக்க, வாய் மடித்து, 'என் அம்பினால் உன் மார்பு முழுதும் துளை பட்டுப் பெரிய புண்ணாகி விரிந்து போகா வண்ணம் அப்பால் போவாயாக. காய்ந்த இரும்பு உட்கொண்ட நீர் ஒருகால் வெளிப்படுமாயினும், என் வயப்பட்ட இவளை எவராலும் விடுவிக்க முடியாது' என்றான்.

இராவணன் சொன்ன சொற்களைக் கேட்ட அன்னம் போன்ற சீதாபிராட்டி, முன்னினும் இருமடங்கு அச்சங் கொண்டு வருந்துகின்றதை சடாயு நோக்கி, 'தாயே, இவ்வரக்கனது உடம்பு இப்பொழுதே என்னால் பல

துண்டுகளாகும். இராமன் வில்லேந்தி விடுவிக்க வர வில்லையேயென்று வருந்தற்க. இவன் பத்துத் தலைகளை யும் கொத்திப் பறித்தெறிந்து, இவன் வென்ற பத்துத் திக்கிலும் திக்குக்கு ஒன்ருகப் பலியிடுவேன்' என்று கூறி, அவ்வாறே செய்யத் தொடங்கி, இராவணனது தலை வரிசையைக் கீழே தள்ளி, அவற்றைத் தன் மூக்கினுல் கடிப்பதற்காக, இடி முழக்கம்போல் பேரொலி யுண்டாகும்படி தன் பெரிய சிறகுகளை வீசிக்கொண்டு விரைந்து வந்த சடாயு, முதலில் வீணைக்கொடியைக் கடித்து ஒடித்து வீழ்த்தினுன். கழுகரசனுன சடாயுவின் வீரச் செயலைக் கண்ட வானவர் வாயார வாழ்த்துக்கள் கூறிப் பேரொலி செய்தனர்.

இதுவரை இவ்வாறு ஈடழியாத இராவணன், கண்கள் சிவக்க, புருவ வில் வளைய, கைவில்லை வளைத்துக் கணைகள் எய்தான். அவைகளைச் சடாயு மூக்காலும் காலாலும் சிறகாலும் ஒடித்தெறிந்து, இராவணனுடைய குண்டலங் களைப் பறித்தான்.

உடனே இராவணன் பேரொலி செய்து, பதினுன்கு கணைகளை யெடுத்து, சடாயுவின் பரந்த மார்பிலே பதிந்து நின்றுவிடாமல் துளைத்து ஊடுருவி அப்பாற் செல்லும்படி விட்டு, மறுபடியும் ஒளியுள்ள பல அம்பு களைக் கழுகரசன்மேல் சொரிந்தான். அதனுல் வீரச் சடாயு விழுந்திட்டான் என்று கருதி விண்ணவர் அச்ச மடைந்து வெய்துயிர்த்தனர்.

இராவணன் சடாயுவின்மேல் அதிக வன்மையுடைய அம்புகளைச் செலுத்திக் குருதி வடியும்படி செய்தான். அதனுல் சிறிது சோர்ந்து பின்னர்த் தெளிந்த சடாயு, திரும்பவும் இராவணனை எதிர்த்து, அவனுடைய இருபது தோள்கள்மேல் பாய்ந்து, மூக்கினுல் கொத்தியும்,

கால் நகங்களினுல் குடைந்தும், சிறகுகளினுல் அடித்தும், முத்து மாலையை அணிந்த மார்பில் தரித்துள்ள கவசத்தை அறுத்தான்.

கவசத்தின் மூட்டறுத்த சடாயுவின் பரந்த மார்பிலே இராவணன் நூறு கணைகள் பதியச் செய்தான். அந்த அம்புகளினுல் சடாயுவுக்கு என்ன நேருமோ என்று தேவர்கள் அஞ்சித் திகைத்தார்கள். உடனே பறவை களுக்கரசனுகிய சடாயு, தேவர்கள் ஆரவாரிக்கும் வண்ணம் இராவணனது வில்லைப் பற்களினுல் கடித்துப் பிடுங்கினுன்.

வெள்ளைக் கயிலை மலையைத் தன் தோள்களால் எடுத்த இராவணனது வில்லைச் சடாயு தன் வாயினுல் பறித்துக் கௌவிக்கொண்டு, இந்திரவில்லைத் தோற்று வித்துக்கொண்டு, வானத்தில் எழுந்த பெரிய மேகம் போல் விளங்கினுன். அச் சடாயுவினது தோள் வலியைச் சொற்களைக்கொண்டு சொல்ல வல்லார் யார் உளர்?

இராவணன் தனது ஆற்றலுக்கு ஏற்ற சிறந்த வில் ஒழியவே, மிக வெகுண்டு, விடத்தையுண்ட கண்டத்தை யுடைய சிவபிரான் திரிபுரத்தை அழித்த ஒப்பற்றதோர் அம்பைப்போன்ற சூலாயுதத்தை எடுத்துச் சடாயுவின் மேல் சுழற்றி எறிந்தான்.

அப்பொழுது கழுகுகளுக்கு அரசனுன சடாயு, 'இராவணு, என் வன்மையைப் பார்' என்று சொல்லி, மூன்று தலைகளையுடைய அச் சூலாயுதத்தைத் தன் மார்பில் ஏற்று இறுமாந்து நின்ருன். அப்பொழுது சடாயுவின் வீரச் செயலைக் கண்ட தேவர்கள் களிப்பால் தங்கள் தோள்களைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.

இராவணன் எறிந்த அந்தச் சூலாயுதம், பொருளையே கருதும் விலைமாதர்களுடைய ஐம்புல இன்பத்தை

அடையக் கருதிய வறியவர், பொருளைக் கொடுக்க மாட்டாமையால் அம் மகளிரால் ஏற்றுக்கொள்ளப் படாமல் திரும்புதல் போலவும், விருந்தினர் வரக் கண்ட போது உண்டாகிய மன மகிழ்ச்சியை வெளியுறச் செய்யும் முகமலர்ச்சியோடு கூடிய இனிய பார்வையையுடைய மகளிர் இல்லாத வீட்டினிடத்தே உற்ற உத்தம விருந்தினர் அவ் வீட்டினுள்ளே செல்லாமல் திரும்பிவிடுதல் போலவும், தன் ஆன்மாவை அறியக் கருதி, யோகாப்பியாசம் செய்து உள்முகமாக நோக்கிய யோகிகளை மோகிகளாக்கும்படி அடைந்த மாதர் காமக் குறிப்போடு பார்க்கும் பார்வை, அவ் யோகியர் மனத்துள்ளே செல்ல மாட்டாமல் திரும்புதல் போலவும், சடாயுவின் மார்பினுள் புகமாட்டாமல் திரும்பிவிட்டது.

" பொன்னேக்கியர் தம்புலன் நோக்கிய புன்கணேரும்
இன்னேக்கியர் இல்வழி யெய்திய நல்வி ருந்தும்
தன்னேக்கிய நெஞ்சுடை யோகியர் தம்மைச் சார்ந்த
மென்னேக்கியர் நோக்கமும் ஆமென மீண்ட தவ்வேல்."

சடாயு, இராவணனை வேறு படை எடுக்க விடாமல் தேர்ப்பாகன் தலையைப் பறித்து, இராவணன் வருந்தும்படி, அவன் முகத்தின்மேல் அத்தலையை வீசியெறிந்தான். அதனல் வெகுண்ட இராவணன் சடாயுவைத் தண்டாயுதத்தால் தாக்கித் தரைமேல் சாய்த்தான்.

சடாயு அவ்வண்ணம் தரைமேல் சாயவே, சாரதியில்லாத் தேரை இராவணன் தானே செலுத்திக் கொண்டு விரைந்து சென்றுகொண்டிருந்தான். அப்பொழுது சீதை துன்பத்தின்மேல் துன்பமுற்றுத் துடித்துப் புரண்டாள். இளந் தளிரையொத்த சீதையின் நிலையைக் கண்ட சடாயு, தன் வருத்தத்தைப் பொருட்படுத்தமால் அவளை நோக்கி, 'அன்னமே, துன்பத்தில் மூழ்கி அஞ்சற்க,

என்று தேறுதல் கூறிவிட்டு, 'அடே, இனி நீ தப்பிப் போவது எங்கு?' என்று இராவணனை நோக்கிக் கூறி, அவனுடைய தேரின்மேல் பாய்ந்தான். அக்காட்சியைக் கண்ட தேவர்கள் மகிழ்ச்சியால் பேரொலி செய்தனர்.

அவ்வண்ணம் இராவணன் தேரின்மேல் பாய்ந்த சடாயு, தன்னை முன் தாக்கிய தண்டாயுதத்தை இனித் தாக்காதபடி பற்றிப் பறித்தெறிந்து, இராவணன், மேலே செல்வதற்கு இடையூறாகக் குதிரைகளைக் கொன்றதோடு நின்று விடாமல் தேரையும் சிதைத்து, அம்மட்டில் அமையாமல் அவன் தலைமேல் பாய்ந்து, தலைகளிலும் மார்பிலும் தோள்களிலும் சிறகால் அடித்து, அலகால் கடித்தான். இராவணன் மூச்சற்று, முடிசாய்ந்து இருந்தான். மெலிந்துவிட்டவனை மேற்கொண்டு தாக்குதல் வீரமன்று என்று எண்ணிய சடாயு, தாக்குதலைத் தவிர்த்து, 'இராவணா, இவ்வளவுதானா உன் வலி?' என்று இகழ்ந்து கூறினான்.

இராவணன் வெகுண்டு, அச் சடாயுவின்மேல் விடுதற்கு ஏற்ற படை வேறு காணாதவனாய், 'இப்பொழுதே இவனது இனிய உயிரைக் கவர்வேன்' என்று கருதி, பகைவரைக் கொல்லுதலில் தவறாத நீண்ட சந்திரகாசமென்னும் தன் வாளாயுதத்தை உறையிலிருந்து எடுத்து ஓங்கி ஓச்சினான்.

அத் தெய்வ வாளை யார்மீது வீசினாலும், அது அவர் ஆவியை உண்ணாமல் அவமாதல் இல்லையாகையாலும், சடாயுவின் ஆயுள் இறுதிக்காலம் அடுத்ததாலும், அக் கழுகரசன், சிறகு அறுப்புண்டு ஒரு மலைபோல விழுந்தான்.

ஆதாரமாயிருந்த கொழுகொம்பு முறிந்து விழ, விழுகின்ற கொடிபோல, சடாயு சாய்ந்து விழக்கண்ட சீதை

தரையில் விழுந்து புரண்டாள். ''எனக்கு அபயம் அளித்துக் காக்க வந்த இத்தூயோன் தோற்பதோ? இந்தத் தீயோன் வெல்வதோ? நன்று! நன்று! 'அறம் வெல்லும், பாவம் தோற்கும்' என்னும் முது மொழியும் பொய்த்ததே!'' என்று மிக வருந்தினாள்.

இராவணன், 'இனி நம்மைத் தடுப்பவர் இல்லை' யென்று சீதையை அவள் கிடந்த தரையோடும் தூக்கி யெடுத்துத் தோள்மேல் வைத்து, விண்வழியே விரைந்து சென்றான். அவன் போகும் வேகத்தால் உண்டாகிய அதிர்ச்சியால் உடல் வருந்த, முன்னமே துன்பத்தின்மேல் துன்பமுற்றும், உள்ளம் சோர்ந்திருந்த சீதை அப்போது உடலும் சோர்ந்து உணர்வு நீங்கிக் கிடந்தாள்.

## 3. அனுமனது வீரப் போர்

பஞ்ச சேனுபதிகள் படையொடு பட்டதை இராவணன் கேட்டு, மிக வெகுண்டு, தானே அனுமனை எதிர்க்கத் துணிந்து எழுந்தான். எழுந்த இராவணனை, அவன் மகன் அட்சகுமரன் தடுத்து, 'ஐயா, அக்குரங்கைப் பிடித்துக் கொணர அடியேனுக்கு அனுமதி அருள்வாய். எளிய குரங்கை எதிர்த்தல் உன் பெருமைக்கு ஒவ்வாது. அச்செயலை எனக்குக் கட்டளையிட்டு, நீ இங்கேயே இருந்தருள்க. முன்னொருகால், யான் இருக்கவும், இந்திரனைப் பிடித்துக் கொடுக்க என் அண்ணனை ஏவினுய். அதனுல் என் ஆற்றலைக் காட்டுதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. இந்த இலங்கைக்கு இழிவையுண்டாக்க ஈசனே இக்குரங்கின் வடிவில் வந்திருப்பினும், இதனை அரை நொடியில் பிடித்துக் கொடுப்பேன். தவறுவேனேல் தண்டனைக்குள்ளாவேன்' என்ருன்.

மகனது வீர மொழியைக் கேட்ட இராவணன் மிக மகிழ்ந்து, அட்ச குமரனை நோக்கி, 'தேரேறிச் சேனையோடு செல்லுதி' என்ருன்.

அட்சனோடு சென்ற சேனை, கடல்போல அளவற்றதாய் விளங்கிற்று. அட்சன் தோழர் பன்னீராயிரவரும், மந்திரிகள், தந்திரிகள் முதலானோரும் அவனுக்குத் துணையாகச் சென்றனர்.

இவ்வண்ணம் பெரும்படையுடன் வந்த அட்ச குமரனை அனுமன் நோக்கி, 'இவன் இராவணனே! இந்திரசித்தோ!' என்று ஐயுற்று, இருவரும் அல்லர் என்று முடிவு செய்தான். அட்சன் அனுமனை நோக்கி நகைத்து, 'இந்தக் குரங்கா இராக்கதர் கூட்டத்தைக்

கொன்றது!' என வியந்து கூறினான். அப்போது அட்சனுடைய சாரதி, 'இக்குரங்கை அலட்சியமாக எண்ணலாகாது. மன்னனோடு பொருத வாலி குரங்கன்றோ?' என்றான்.

சாரதி கூறியதைக் கேட்ட அட்சன், 'அசோக வனத்தை அழித்ததோடு அமையாமல், அளவற்ற அரக்கரை அழித்து, நமக்கு மானபங்கத்தைச் செய்த குரங்கைக் கொல்லுதலோடு நில்லாமல், உலகெங்கும் சென்று, குரங்கு என்ற பேரே இல்லாமற் போகக் குரங்குக் குலத்தைக் கருவறுத்து நிர்மூலமாக்குவேன்' என்று, வெஞ்சினத்தோடு வஞ்சினம் கூறினான்.

அரக்கர் சேனை அறக்காய்ந்துலர்ந்த புற்காடாக, அனுமன் எரியென விளங்கி, அந்தச் சேனையை அழிக்கத் தொடங்கினான். அப்பொழுது அப்போர்க் களம் தாழியாகக் காட்சியளிக்க, சேனை தயிராகவும், அனுமன் மத்தாகவும், அவனால் தாக்குண்ட சேனை, மத்தெறி தயிர் போல் உடைந்து பல பக்கங்களில் சிதறியது. அனுமன் வெங்கதிரோனாகவும், அவன் பொருதல் வெயில் எரித்தலாகவும் விளங்க, அரக்கர் சேனை வெயிலில் அகப்பட்ட புழுப்போல் துடிதுடித்து மாண்டது.

அரக்கர் சேனை அனைத்தும் அழியக் கண்ட அட்சகுமரன் மிக வெகுண்டு, தீப்போலக் கண்கள் சிவக்கச் சென்று, அனுமன்மேல் ஈரேழ் அம்புகள் எய்தான். அனுமான் அந்த அம்புகளை இருப்புத் தடியால் அடித்துத் தரையில் வீழ்த்தினான்; அம்புகளால் அந்தத் தடியைப் பொடியாக்கினான் அரக்கன்; வேறு ஆயுதம் இன்மையால், அனுமன் கையே ஆயுதமாகக்கொண்டு, அட்சன் தேர்மீது தாவி, பாகனையும் குதிரைகளையும் கொன்றான். அப்பொழுது அட்சன் எய்த அம்புகள் அனுமன் மார்பிலும் தோள்களிலும் அழுந்த, அனுமன் அட்சன்

வில்லை ஒரு கையினால் பற்ற, அவன் அதனைப் பிடித்த கையோடு அடுத்த கையாலும் பற்றி யிழுக்க, அவ்வில் முறிந்தது. அது முறியவே, அட்சன் வாளை யுருவிக் குத்த, அனுமன் அதை ஒடித்தெறிந்தான். வாட்போரில் தோல்வியுற்ற அட்சன் தோட்போர் செய்யத் துணிந்து, அனுமனைக் கட்ட, இவன் அவனைத் தப்பவொட்டாமல் வாலினால் சுற்றிக் கீழே தள்ளி மேலே ஏறி, வாயிலிருந்து பற்களும், குண்டலங்களிலிருந்து கற்களும் உதிரக் கன்னங்களிலே இடித்துப் பிடர் பிடித்துக் குடர் பிதுங்கக் குத்தினான்; பின்னர், போர்க்களம் அம்மியாக, அவன் சதை, அரைக்கும் அரிசியாக, இரத்தம், அரிசியை அரைத் தற்கு உதவும் நீராக, சதை யொழிந்த எலும்புப் பகுதி அம்மிக்.குழவியாக அரைத்தான். அதனால் குற்றுயிராக் கிடந்த அவன் முற்றுயிரும் இழந்தான்.

"நீத்தாய் ஓடின உதிரப் பெருநதி
நீரா கச்சிலை பாராகப்
போய்த்தாழ் செறிதசை அரிசிந் தினபடி
பொங்கப் பொருமுயிர் போகாமுன்
மீத்தா நிமிர்சுடர் வயிரக் கைகொடு
பிடியா விண்ணொடு மண்காணத்
தேய்த்தான் ஊழியின் உலகேழ் தேயினும்
ஒருதன் புகழிறை தேயாதான்."

அட்ச குமரன் மாண்டபொழுது, மாளாது எஞ்சி யிருந்த அரக்கரில் சிலர் இரத்த வெள்ளத்துள் மூழ்கியும், சிலர் பிணக் குவியல்களுள் நுழைந்தும் மறைந்துகொண் டார்கள். சிலர் செல்லுந் திசை தெரியாமல் திண்டாடித் திரிந்து வலியழிந்தார்கள். சிலர் எங்கும் போகாமல் நின்ற இடத்தே நின்றார்கள். சிலர் கண்ட கண்ட திசை களிலே நாறுமாறாக ஓடினார்கள்.

* * *

ஆண் தகையாகிய இந்திரசித்து, அட்ச குமரன் அனுமானல் கொல்லப்பட்டதைக் கேள்வியுற்று, விழிக்ளிலிருந்து நெருப்புப் பொறி சிந்த வெகுண்டு, வீர வாதம் கூறித் தேரின்மீது ஏறினன்.

தேரில் ஏறிய இந்திரசித்து, தம்பியிறந்த செய்தியை எண்ணுந்தோறும் தாரை தாரையாக வடிகின்ற கண்ணீர் பொங்கும் கண்ணினனகி, 'என் கையில் இந்த வில் இருந்தும் பயனில்லை. என் தம்பியின் இன்னுயிரை இது காவாது போயிற்றே!' என்று உதட்டை மடித்துக் கடித்துக்கொண்டு, தன் வில்லை நோக்கி, வீர நகை நகைத்து, 'மரக்கொம்புகளில் வாழும் அற்பக் குரங்கினல் தேய்க்கப்பட்டு என் தம்பியோ தேய்ந்தான்? இல்லை, இல்லை. என் தந்தையின் புகழே தேய்ந்தது' என்று தனக்குள்ளே பல பல எண்ணிப் பதைத்தான்:

"தம்பியை யுன்னுந் தோறும் தாரை நீர்
ததும்பும் கண்ணன்
வம்பியல் நிலையை நோக்கி வாய்மடித்து
உருத்து நக்கான்
கொம்பியல் மாய வாழ்க்கைக் குரங்கினல்
குரங்கா ஆற்றல்
எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழன்றே
தேய்ந்தது என்ருன்."

பிறகு இந்திரசித்து இராவணனை அடைந்து, அவன் தாளில் விழுந்து, தம்பி யிறந்ததற்காக விம்மி விம்மி யழுதான். இராவணன் இந்திரசித்தை வாரி யெடுத்து, மார்பில் அணைத்துத் தானும் அழுதான். பின்பு இந்திரசித்து, தந்தையை நோக்கி, 'அந்தக் குரங்கு, கடலைக் கடந்து, அசோக வனத்தை யழித்த பேராற்ற லுடையதென அறிந்திருந்தும், நீள நினையாது, அக்

குரங்கைக் கொல்ல எண்ணற்ற அரக்கர்களைக் கூட்டம் கூட்டமாக அனுப்பினாய். ஆதலால் நீயே யன்றோ கொன்றனை அரக்கர்தம் குழுவை. கிங்கரர், சம்புமாலி, பஞ்ச சேனாபதிகள் என்பவர்களோடு சென்ற வீரரெல் லாம் மாண்டாரே யன்றி மீண்டார் இல்லையென்றால், அந்தக் குரங்கை என்னென்பது! திரிமூர்த்திகளில் ஒருவர் என்றன்றோ மதிக்க வேண்டும். ஆயினும் நீ கவலையின்றி யிங்கே இருக்கலாம். யான் சென்று அவ்வரிய குரங்கை எளிதில் பிடித்துக்கொண்டு வந்து உன் முன் நிறுத்து கிறேன்' என்று வீர மொழிகளைக் கூறிவிட்டுப் புறப் பட்டான்.

பெரிய வீரனாகிய இந்திரசித்து மிக வெகுண்டு போருக்குப் புறப்பட்டதைக் கண்ட அரக்கர் சேனை, அகலிடம் போதாதென்று சொல்லும் வண்ணம் வந்து அவ்வீரனைச் சூழ்ந்துகொண்டது.

சேனையின் நடுவே, வீரர் எல்லாரினும் உயர்ந் தோனாகி இந்திரசித்து நின்ற தோற்றம், பூமி முழு வதையும் கவர்ந்து மூடிய பிரளயப் பெருங்கடல் மத்தியில் மகாமேரு நிற்கும் காட்சி போன்றது. அவன் சேனையுடன் அனுமான் நின்ற இடத்துக்குச் சென்றுகொண்டிருந்த போது, யுத்த களத்தை நோக்கினான்; 'அது பிணக் குவியல்களான மலைகளையும், இரத்த வெள்ளமான ஆறு களையும், ஆயுதக் கூட்டமான காட்டையும் பெற்று, வேறோர் உலகம் போல விளங்கியது' என்றெண்ணி வியப் புற்றான். 'எண்ணிறந்த வீரர்கள் இறந்து கிடக்கின் றார்கள். இவர்கள் எல்லாரையும் கொன்ற குரங்கு ஒன்றே! எப்படைகொண்டு வெல்வது இராமன் வந்து எதிர்க்கின்!' என்றெண்ணி, கண்ணன்னார், உயிரே யன்னார் கணக்கற்ற வீரர் மாண்டு கிடப்பதைக் கண்டு,

புண்ணுள்ளே கோல் கொண்டு குத்தினாற்போல மானத்தினால் வருந்தி மனம் புழுங்கினான்.

'என் அத்தை சூர்ப்பநகைக்கு உற்ற அங்கபங்கமும், என் சிறிய தந்தை கரனுக்கும், தம்பி அட்சனுக்கும் நேர்ந்த மரணமும், மற்றைய வரம்பற்ற அரக்கர் வதமும் மானுடர் இருவராலும், வானரம் ஒன்றினாலும் ஏற்பட்டிருக்கின்றனவென்றால், என் வீரம் மிக நன்று!' என்றெண்ணி இந்திரசித்து மிக வெட்கினான். இவ்வண்ணம் பலவாறு எண்ணிக்கொண்டே சென்றவன் தேய்ப்புண்ட தம்பியின் உடலை, கையினின்று வில்லும் கண்ணினின்று நீரும் சோரக் கண்டான். தம்பியின் உடலைக் கண்ணாரக் கண்ட வீரத் தமயன், 'ஐயா, உன் தந்தையின் வீரத்துக்கு அஞ்சி எமனும் உனது உயிரைக் கவர அஞ்சுவானே! எமலோகத்தாரன்றி எவ்வுலகத்தாரும் உன்னை மறைத்து வைக்க மனம் துணியாரே! அவ்வண்ணமிருக்க, நீ எவ்வுலகில் இருக்கின்றாய்?' என்று புலம்பி அடைந்த சோகமானது, தம்பியைக் கொன்றவனைக் கொல்ல எழுந்த கோபத்தால் உள்ளடங்கிவிட்டது.

அப்பொழுது அனுமான் எதிரே வந்த இந்திரசித்தை நோக்கி, 'யான் எண்ணிறந்த அரக்கரை எமலோகத்துக்கு அனுப்பிய செயல் இவ்வீரனை இங்கே கொண்டுவந்திருக்கிறது. இவன் இந்திரசித்தே. யான் இதுவரை செய்தது போராட்டன்று, விளையாட்டே. இவ்வீரனோடு பொருதலே போராம். இதுவரை வெற்றியைப்பற்றிய ஐயம் எனக்கில்லாதிருந்தது. இப்போதுதான் அது உண்டாயிருக்கிறது. இவ்வீரனை வெல்வது இராவணனையே வெல்வது போலாம்' என்று எண்ணினான்.

அப்பொழுது இந்திரசித்தின் சேனை போர் தொடங்க, அனுமான் ஒரு மராமரத்தை எடுத்துக் கொண்டான்.

அரக்கர் அனுமான் மேல் எய்த அம்புகள், பழுக்கக் காய்ச்சிய இரும்பு, பட்டடையைச் சுடாததுபோல, அவனுக்குத் துன்பத்தை விளைவிக்கவில்லை. அனுமானல் அரக்கர் படை முழுவதும் அழிவதைப் பார்த்த இந்திர சித்து, அனுமனை அணுகி, வில்லின் நாணியை விரலினல் தெறித்து, மிகுந்த ஒலியை உண்டாக்கினன். அவ்வொலிக்குக் காரணமான அந்த நாணியானது அற்றுப் போகும்படி அனுமன் தோள் கொட்டி எதிரொலி யெழுப்பினன். இந்திரசித்து அனுமன் தலையிலும் மார்பிலும் தைக்கும்படி பல கணைகளைத் தொடுத்து விடுத்தான். அப்பொழுது அனுமன் தனது மிகப் பெரிய இயற்கை வடிவத்தை யெடுத்தான். இந்திரசித்து அவ்வடிவை முடியக் காண முடியாது, ஒரு பகுதியையே பார்த்து வியந்து கொண்டிருந்தபொழுது, அனுமன் இந்திரசித்தின் தேரையும் பாகனையும் குதிரைகளையும் அறைந்து அழித்தான்.

இந்திரசித்து வேறொரு தேர் ஏறி, அனுமன் உடல் முழுதும் மறைய அம்பு மழை பொழிந்தான். அனுமன் அத்தேர் மேலும் பாய்ந்து, இந்திரசித்தின் வில்லைப் பறித்து முறித்தான். அந்த வில் முறிந்த ஓசை அடங்கு முன் அவ்வரக்கன் வேறொரு வில்லை வளைத்துப் பல கணைகளைத் தொடுக்க, அனுமன் சற்று அயர்ந்தான். அயர்ச்சி அகன்றவுடன் மேருவெனும்படி ஓங்கி வளர்ந் திருந்த மரம் ஒன்றைப் பிடுங்கிச் சுழற்றி, அவ்வரக்கன் விடுத்த கணைகளையெல்லாம் முறித்து, அவன் தலைமேல் அறைந்தான். அப்பொழுது மலையிலிருந்து அருவி நீர் வடிதல்போல இந்திரசித்தின் தலையிலிருந்து செந்நீர் வழிய, அவ்வீரன் சோர்ந்தான்; சோர்வு தீர்ந்தவுடனே மீண்டும் அம்பு மழை பொழிந்தான். அனுமன் அவ்வீரனைத் தேரோடு மேலே எறிந்தான். அவன் நெடுந்தூரம்

மேலே சென்று திரும்பிக் கீழே விழுந்தான்; விழுந்த வுடனே எழுந்து விரைந்து விண்மிசை ஏகினுன். அப்பொழுது அனுமன் இந்திரசித்தின் தேர்களையெல்லாம் சிதைத்தான்.

இந்திரசித்து, பேராற்றல் வரய்ந்த அனுமனுடன் பெரும்போர் புரிந்தும் வெற்றி காணுது, ஏறிப் போர் புரியத் தேருமின்றி, எதிர்வலியுமின்றிப் பிரமாத்திரத்தை விடுத்தான். அது பெரிய பாம்பின் வடிவத்தைக்கொண்டு, அனுமனைக் கயிறுபோல் இறுகக் கட்டிவிட்டது. அப்பொழுது அனுமன் செயலற்றுச் சாய்ந்தான். உடனே அங்கு ஒதுங்கிப் பதுங்கி ஒளிந்திருந்த அரக்கர் பலர் ஓடி வந்து, அனுமனைச் சூழ்ந்து, அவனைச் சுற்றியிருந்த நாகத்தைப் பற்றி யிழுத்தார்கள்.

குரங்கினது 'வன்மை குறைந்ததெனஎண்ணிக் களிப் புற்று, வெற்றிக்கு அறிகுறியாக ஆர்த்து, அரக்கரால் ஆரவாரம் செய்யப்பெற்ற இலங்கை மாநரம் திருப்பாற் கடலை யொத்தது. அனுமனது உடலின் எல்லாப் பக்கங் களையும் சுற்றித் தன்னுள் அடக்கிய பிரமாத்திரமாகிய பெரும்பாம்பு, அமுதம் உண்டார்கத் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் கடை கயிருக, மந்தரமலையாகிய மத்தைச் சுற்றிய வாசுகி யென்னும் பாம்பை யொத்தது. பிரமாத்திரப் பாம்பைப் பற்றிய அரக்கர், வாசுகி யென்னும் பாம்பைப் பற்றிய தேவரை யொத்தனர். இலங்கை மாநகரைக் கலங்கச் செய்த அனுமான், திருப்பாற் கடலைக் கலங்கச் செய்த மந்தர மலையை யொத்தான்.

# 4. முதற்போர்

தூது போய் வந்த அங்கதன், இராவணனுக்கு ஆவி நீங்கினாலன்றி ஆசை நீங்காதென்று இராமபிரானிடம் சொன்னபோது, போரன்றி வேறொன்றும் புரிதற்கில்லை என்பது துணியப்பட்டது.

சேனைத் தலைவன் ஆணைப்படி, வள்ளுவர்கள் வானரப் படை வீடு முழுவதும் திரிந்து, 'படை வீரர்களே, மலைகளைக் கொண்டும் மரங்களைக் கொண்டும் அகழியைத் தூர்த்திடுங்கள். இராக்கதர் செல்லும் வழிகள் எல்லாவற்றிலும் மரங்களைப் போட்டு அவர்களது போக்கு வரவினைத் தடைபடச் செய்யுங்கள். அவர்களைப் போர்க் களையுங்கள்' என்று பறையறைந்தார்கள்.

நீர் நிரம்பியிருந்த அகழி, வானரர் செயலால், நீர் ஒழிந்து வேறு நிலமானது, செல்வம் நிறைந்திருந்த குடும்பம் விதியின் செயலால் செல்வம் நீங்கி வறுமையானது போன்றது. அகழியைத் தூர்த்த வானரர், மதிலின்மேல் ஏறி நிமிர்ந்து நின்றபோது, அந்த மதில் மீது நாட்டிய வெண்துகிற்கொடிகள் போன்றனர்.

அரக்கர்கள் வானரரை எதிர்த்து, வில்லும் வேலும் கொண்டு போர் செய்ய, வானரர், மரமும் மலையுங் கொண்டு பொருதனர். வானரர், இராக்கதரைக் கையால் அடித்தும், காலால் உதைத்தும், நகத்தால் கிழித்தும் கொன்றனர். இராக்கதர், தோமரம் எறிந்தும், அம்பெய்தும், தண்டு கொண்டு தாக்கியும், வேலால் குத்தியும் வானரரை மாய்த்தனர். வானரர் தளர்வுற்று, மதிலினின்று இறங்கி ஓடலுற்றனர். அரக்கர் வீர

ஆரவாரம் செய்து, மதில் வாயில் வழியாக வெளியேறி நெருங்கித் துரத்தக் குரங்குச் சேனை நிலைகுலைந்து சுக்கிரீவன் நின்ற இடத்தில் போய்ச் சேர்ந்தது.

தோல்வியுற்று ஓடிவந்த குரங்குச் சேனையின் நிலையைக் கண்ட சுக்கிரீவன் ஒரு பெரிய மராமரத்தினைக் கையிற் கொண்டு, துணை வேண்டாது, தான் ஒருவனே தனியனாய்த் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை, காலாட்படையாகிய நால்வகைப் படை முன்னும் தோன்றி, ஒவ்வொரு படையையும் ஒவ்வொரு சுக்கிரீவன் எதிர்த்தான் என்னும்படி மிக விரைந்து எதிர்த்து, தேர்கள் உருள, யானைகளும் குதிரைகளும் கால்கள் ஒடிய, தன் கையிலிருந்த மராமரத்தால் அடித்துத் தாக்கினான். அதனைக் கண்ட வானர வீரர் ஊக்கம்கொண்டு போர் புரிய, அப்போரில் எண்ணிறந்த அரக்கரும் மாண்டனர். வானரரினும் அரக்கர் மிகுதியாக இறந்தனர்.

நான்கு திசைகளிலும் சென்றிருந்த ஒற்றர் திரும்பி வந்து, எல்லாத் திசைகளிலும் இராக்கதர் தோற்ற செய்தியை இராவணனுக்கு இரகசியமாகக் காதில் ஓதினார்கள். எதிரிகளை அழிக்கக் கோபத்தீ மூண்டுகொண்டிருந்த இராவணன் நெஞ்சுள்ளே, ஒற்றர் உரைத்த வார்த்தைகள் காது வழியாக நெய்போலப் புகுந்தவுடனே, அந்தக் கோபத்தீ குதித்தெழுந்து கொழுந்துவிட்டெரிந்து, விழிகள் வழியாக வெளியாக, மூக்கினின்று பெருமூச்சுக் காற்று வீசியது. அவன், 'பெருவீரனான பிரகத்தனை யார் கொன்றது?' என, ஒற்றர், 'நீலன் கொன்றான்' என்றார். 'அமரர்கோன் வாழ்வை அடியோடழித்த மலைபோன்ற பெரிய அரக்கன் எலி போன்ற சிறிய குரங்கினால் இறந்தான் என்ற வார்த்தை என் காதைச் சுட்டது, கருத்தையும் சுட்டது. தீயையும்

பகையையும் சிறிதென இகழுதல் அறிவுடைமையன்று' என்று சொல்லி, நீர் ததும்பிய கண்கள் நெருப்புப்போலச் சிவக்க, போருக்குப் புறப்படுவானாகி, ஆயிரம் குதிரை பூண்டதும், அமரர்கோன் திறையாக அளித்ததுமான தேரிலே ஏறி, மார்பிலே கவசம் தரித்துக் கையில் விற் பிடித்து, தோளில் அம்புப் புட்டில் தூக்கித் தும்பைப் பூச்சூடினான் இராவணன். வெண்சாமரம் வீசப்பெற்ற அவன், வெண்ணுரைத் திரை பரந்த கருங்கடல் போன்றான். வெண்கொற்றக் குடைமேலே விளங்க அவன் வீற்றிருந்த தோற்றம், வெள்ளிய சந்திரனுக்குக் கீழ் விளங்கும் கரிய மேகக் காட்சியை ஒத்தது. அலை யொலித்தல்போல முரசு முழங்கும் சேனைக் கடல் நடுவே தேர்மீதிருந்த அவன், ஊழிக்காலத்துக் கடல் நடுவே தோன்றும் மேருவொத்து விளங்கினான். வீணை வடிவம் எழுதப்பட்ட அவனுடைய கொடிச் சீலை படபடத்து ஆடுதல், உகாந்த காலத்திலே உயிர்களையெல்லாம் வாயில் இடுவதற்கு உலகு முழுவதையும் வளைத்துச் சுழல் கின்ற எமனுடைய நாவினை ஒத்தது.

இராவணன் போர்க்களம் புகுந்ததை வானரர் இராம பிரானுக்கு அறிவித்தனர். உடனே சீதையின் பிரிவால் மெலிந்திருந்த இராமன் தோள்கள் பூரித்தன. அரையில் மரவுரியை இறுகச் சுற்றி, அதன்மேல் உடை வாளைக் கட்டி, காலில் வீரக்கழல் பூட்டி, மார்பில் கவச மணிந்து, கையில் வில்லேந்திக் கவிஞர் நாவிலே இடை யீடின்றி மேன்மேல் வரும் சொற்கள்போல் எடுக்க எடுக்கத் தொலையாத அம்புகள் அடங்கிய தூணியைத் தோளில் தொங்கவிட்டுத் தும்பை மலர் சூடி நின்றான் இராமன்.

இவ்வண்ணம் நின்ற இராமன், சேனையின் பின்னணி யில் நின்ற இலக்குமணனைச் சேர்ந்தான். அப்பொழுது

இரு பக்கத்துப் படைகளும் போர் புரிய, வானரப் பிணங்கள் வெள்ளிமலை போலவும், இராக்கதப் பிணங்கள் கருமலை போலவுங் குவிந்தன. அரக்கர் அழிவு வானரர் அழிவினும் அதிகமாயிற்று. அந்நிலையைக் கண்ட இராவணன் மிக வெகுண்டு, தன் வில்லின் நாணைத் தெறிக்க, அதன் ஒலியைக் கேட்ட வானரங்கள் இடி யோசை கேட்ட பாம்புகள் போல நடுங்கின.

வானரர்கள் நடுங்கி ஓடுவதைக் கண்ட சுக்கிரீவன் இராவணனை எதிர்த்து, இந்திரனது வச்சிராயுதம் என்று சொல்லத்தக்க ஒரு பெரிய மலையை அவன்மேல் எறிந்தான். அதை அவன் ஓர் அம்பால் தூளாக்கினான். உடனே சுக்கிரீவன் ஒரு பெரிய மரத்தைப் பிடுங்கினான். இராவணன் பல அம்புகளை யெய்து அம்மரத்தைப் பல துண்டங்களாக்கினான். அக்கணமே அவன் வேறொரு வலிய கொடிய அம்பைச் சுக்கிரீவன் மார்பில் அழுந்தி மறையும்படி எய்தான். இந்நிகழ்ச்சியை மேலை வாயிலில் நின்றுகொண்டிருந்த அனுமன் அறிந்து, விரைந்தோடி வந்து சுக்கிரீவன் முன் நின்றான்.

அனுமான் இராவணனை நோக்கி, 'சுக்கிரீவன் சோர் வொழிந்து போர் தொடங்கும்வரை பொழுது போக்காக என்னுடன் பலவகைப் போர் புரிவாயோ?' என, இரா வணன், 'நீ என்னுடன் போர் புரிய வரின், வருக' என்றான். உடனே அனுமன் ஒரு மலையைப் பிடுங்கி இரா வணன்மேல் எறிந்தான். அவன் அம்மலையைப் பத்து அம்புகள் எய்து ஆயிரம் துண்டங்களாக்கினான். அனுமன் வேறொரு மலையை யெறிய, அது அவன் தோள் வளையைத் தாக்கித் தூளாக்கித் தானும் தூளாய்விட்டது. உடனே இராவணன் அனுமனது கையிலும் மார்பிலும் நுழைந்து மறைந்திடும்படி பத்தம்புகள் எய்தான். அனுமன் அவை

களை ஏற்று இறுமாந்து நின்றான். அவனது வீரத்தையும் ஆற்றலையும் கண்ட விண்ணோர், 'இவ்வண்ணம் இராவணன் விட்ட அம்புகளைத் தாங்கிச் சமாளிக்க வேறு யாரால் ஆகும்!' என்று வியந்து பாராட்டினார்கள். அப்பொழுது அனுமன் ஒரு பெரிய மராமரத்தை வேரோடு பிடுங்கிச் சுழற்றி எறிந்தான். அம்மரம் இராவணனுடைய தேர்ப்பாகனது தலையைத் தரையில் வீழ்த்தி, வேறு பல அரக்கரையும் மடியும்படி செய்தொழிந்தது. அதனைக் கண்டு வெகுண்ட இராவணன் எய்த நூறு பாணங்கள் அனுமனது உடலில் பாய, ஆறுபோல் இரத்தம் பெறுகிற்று. அனுமனும் சோர்வடைந்தான்.

அனுமன் சோர்ந்துவிட்டதைக் கண்ட இராவணன் வானர வீரரை நோக்கி, 'அற்பக் குரங்குகளாகிய உங்களைப் பொருட்படுத்திப் பொருவது எனது பேராண்மைக்குத் தீரா வசையாமென்று எண்ணினேன். உங்களைக் கொல்ல நான் வில்லை யெடுப்பின், உங்களுள் ஒருவனாவது உய்வானா?' என்று கூறிக்கொண்டே பல்லாயிர அம்புகளை யெய்தான். அப்பொழுது காற்றால் தாக்கப்பட்ட கடல் போல, வானரச் சேனைக் கடல் பல திக்குகளில் சிதறி விட்டது.

வானர சேனை சிதறியதைக் கண்ட இலக்குமணன், 'என் அம்புக்கு இராவணனே குறி' என்று சொல்லிக் கொண்டே பொன்மலை வில்லேந்தி வந்தாற்போலப் போர்க்களத்திற் புகுந்து, தன் வில்லின் நாணை யெறிந்தான். அதன் ஒலியைக் கேட்ட அரக்கர்கள், சிங்க முழக்கம் கேட்ட யானைகள் போலத் திடுக்கிட்டார்கள். இலக்குமணனது வில்லொலி கேட்ட இராவணன் மிக வியந்து தலையசைத்தான். இலக்குமணனுடைய அம்புகள்

இராவணனது நால்வகைப் படையையும் அழிக்க, குருதி வெள்ளம் எங்கும் பரந்தது. அதனைக் கண்ணுற்ற அரக்கர்களில் சில வீரர், 'இவன் நம் இறைவனை அணுகும் படி நாம் பார்த்துக்கொண்டிருப்போமானால், நம் வீரம் என்னும்!' என்று இலக்குமணனை எதிர்த்து, படைக் கலங்களை ஏவினார்கள். இலக்குமணன் தன் அம்புகளால் அரக்கர்கள் எய்த அம்புகளையும் பிற படைக்கலங்களையும் கண்ட துண்டங்களாக்கி அவர்களையும் கொன்றான்.

இலக்குமணன் மிக விரைந்து அம்பெய்தமையால், அவ்வீரன் அம்புகளை எடுப்பதையும் தொடுப்பதையும் விடுப்பதையும் இமையோர் காண முடியவில்லை; அவ்வம்பு கள் கொன்று குவித்த பிணக் குவியல்களையே கண்டனர். இலக்குமணனைக் குறி வைத்து அரக்கர் விட்ட வேல், சூலம், அம்பு முதலிய படைக்கலங்கள் எல்லாம் அற்றுப் போயின.

வெறிகொண்ட எமன்போலத் தன் சேனை முழுவதை யும் கொல்லும் இலக்குமணன் எதிரே இராவணன் தன் தேரைச் செலுத்தித் தீப்பொறி பறக்க, இலக்குமணனை நோக்கிச் சீறி நின்றான். அப்பொழுது இலக்குமணன் இராவணனை நோக்கி, 'சீதையைக் காத்து நின்ற என் காவல் வலிமையை வஞ்சகத்தினால் தொலைத்த கள்வனே, இனி உனக்குப் போக்கில்லை' யென்று புகன்று அம்புகளைத் தொடுத்து விடுத்தான். இராவணன் அவைகளைத் தன் அம்புகளால் அறுத்துத் தள்ளினான். இலக்குமணன் மீண்டும் சரமாரி சொரிந்தான். இராவணன் அந்த அம்பு களைத் தன் அம்புகளால் விலக்கி, மேலும் அம்புகளை எடுக்க முடியாதபடி இலக்குமணனது அம்பறாத் தூணியை அறுத்துத் தள்ளினான். அப்பொழுது இராவணன் அம்பால் சோர்வுற்றிருந்த அனுமான் தெளிந்தான்.

தெளிந்த அனுமான் இராவணன் தேர் எதிரே சென்று நின்று, 'இலக்குமணனுடன் செய்யும் இந்த விற்போரை விடு. என்னுடன் மற்போர் தொடு. முன் மூன்று உலகங்களையும் வென்ருய் என்ருலும், இன்று நீ அழிவது நிச்சயம்' என்று கூறி, வாமனன் திரிவிக்கிரமனுக வளர்ந்ததுபோலத் தன் சிறிய உருவம் அப்பெருமான் போலப் பெரிய உருவமாக வளர, 'என்னைப் பார். நான் சொல்வதைக் கேள். நான் உன்னைக் குத்துகிறேன். அக்குத்தால் நீ யிறவாவிடில், என்னைக் குத்து. உன் குத்தால் யான் இறவாவிடில், என்றும் உன்னோடு நான் போர் செய்வதில்லை' என்ருன்.

இராவணன் அனுமனை நோக்கி, 'நீ வீரர் கூறத் தக்கதைக் கூறிஞய். என்னை வெல்லாய் ஆயினும், எவரும் நேர் நிற்க மாட்டாத என்னோடு பொருதாய் என்ற புகழ், பூமியுள்ளவரையும் நிலையாய் உள்ளதாம். திக்குவிசயம் செய்து, மூன்றுலகங்களையும் வென்ற யான் உன்னோடு பொருதேன் என்ருல் என் புகழுக்குக் குறைவே. ஆயினும் தனியனுய்ப் படைக்கலமின்றி, இரு கையே உடையவனுக உள்ள நீ, நால்வகைப் படைகளோடு இருபது கைகளையும் உடையவனுக வுள்ள என்னோடு குத்துச் சண்டைக்குத் துணிந்து நின்றதனுல், நிகரற்று விளங்கும் உன்னோடு போர் புரியத் துணி கின்றேன். தாமதம் செய்யாது குத்துவாயாக' என்ருன்.

உடனே அனுமன் இராவணன் தேரில் ஏறித் தன் முழுவலிகொண்டு குத்திஞன். அக்குத்தால், இராவணன் செய்த திக்குவிசய காலத்தில் திசை யானைத் தந்தங்கள் அவன் மார்பில் பாய்ந்து முறிந்திருந்தவை, முதுகு வழியாக உருவி, அவன் புகழ் சிந்திஞற்போல உதிர்ந்தன. அது கண்ட வானோர் ஆர்த்து, மலர்மழை பொழிந்தனர்.

அரக்கர் வேர்த்தனர். வானரர் மகிழ்ந்து கூத்தாடினர். அனுமன் குத்திய குத்தால் இராவணன் மூர்ச்சை யடைந்தான்.

சிறிது நேரம் சென்றபின் மூர்ச்சை தெளிந்த இராவணன், அனுமனை வியந்து நோக்கி, 'ஆண்மை யென்று பாராட்டப்படுவதொன்று உன்னிடத்தேதான் உளது. உன்னை நோக்கப் பிற வீரர்கள் பேடிகளே. உலகேழையும் வென்றவனானாய். பிரமனுக்கும் சலியா தவன் ஆனாய். என்றும் வலிமை யென்பதையே அறிந்த யான், இன்று உன்னால் மெலிவென்பதை யறிந்தேன். அதனால் வீரனாகிய நீ என்னை வென்றாய். இனி உனக்கு உரைக்க வேண்டியது ஒன்றுண்டு. அதனைக் கேள். மலைமேல் இடி விழுந்தாற்போல என் குத்து உன் மார்பில் விழுந்த பின் நீ உயிர் நிலைத்திருக்கப் பெறுவாயெனில், இன்றுபோல் என்றும் நிலைத்திருப்பாய், உனக்குப் பகை, என்றும் யாதும் இல்லை' என்றான்.

இராவணன் வியந்துரைத்த மொழிகளைக் கேட்ட அனுமன், அவ்வரக்கர் தலைவனை நோக்கி, 'நீ என் குத்தால் இறவாது உரையாடியதனால் நீ என்னை வென்றாய்' என்று பெரிதும் பாராட்டி, 'யான் குத்துதற்கு மார்பு கொடுத்த உன் கடனைத் திரும்பப் பெற்றுக்கொள்' என்று கூறி, இராவணன் குத்துவதற்குத் தன் மார்பைக் கொடுத்தான். இராவணன், வாயை மடித்துப் பற்களைக் கடித்துக் கண்களில் நெருப்புப் பொறி பறக்க விழித்து, இருபது கைகளையும் இறுக்கிக் குவித்து அனுமன் மார்பில் குத்தினான். இராவணன் கைகளால் முன் கைலாயமலை சலித்தாற்போல், அப்போது அனுமன் சலித்தான். அவன் சலித்தபோது எல்லா வுலகங்களும் சலித்தன. நான்கு வேதங்களும் சலித்தன. அவனை நிலைக்கள

மாகக் கொண்டிருந்த நீதியும், நேர்மையும், அறமும், மெய்ம்மையும், அருளும், தவமும், பிற நலங்களும் சலித்தன.

அனுமான் சலித்தது கண்ட வானர சேனைத் தலைவர் அனைவரும் ஒன்று சேர்ந்து, ஒவ்வொருவரும் ஒரு மலையைப் பிடுங்கி இராவணன்மேல் எறிந்தார்கள். அம் மலைகள் மேகப் படலம் போன்று, உலக முழுவதும் இருள் அடையும்படி சூரியனை மறைத்தன. ஒன்றோடொன்று மோதி யுண்டான தீயும் ஓசையும், மின்னலும் இடியும் ஒத்தன. அரக்கர் சேனை நிலைகெட்டு ஓடலுற்றது. இராவணன் தன்னை நோக்கி வந்த மலைகளை அளவிறந்த அம்புகளால் அறுத்துத் தள்ளினான். அங்ஙனம் அறுத் தவன், 'இக்கணமே குரங்குக் கூட்டம் முழுவதையும் கொல்வேன். இப்போதே இரு மனிதரையும் வெல்வேன்' என்று கூறிப் பத்து இடக்கைகளால் பத்து விற்களைப் பற்றிப் பத்து வலக்கைகளால் கணக்கற்ற அம்புகளை எய்து, மண்ணும் விண்ணும் அம்பு மயமாக்கினான். கணக்கற்ற வானரங்கள் மடிந்தொழிந்தன.

இராவணன் அம்புகளால் மாண்டவர்களும், ஊறு பட்டுக் கிடந்தவர்களுமல்லாத வானரர் ஓடினர். அது கண்ட இலக்குமணன், இராவணனை எதிர்த்து, அவன் எய்த அளவற்ற அம்புகளைத் தன் அம்புகளால் அறுத்து, அவன் பிடித்திருந்த பத்து விற்களையும் அறுத் தொழித்தான். இராவணன் இலக்குமணனது வில் வித்தையை வியந்து, 'உன்னை யொப்பார் இல்லை. கரன் படையைத் தொலைத்த உன் அண்ணனும், இந்திரனை வென்ற என் மகனும், யானுமன்றி யார் உனக்கு நேர்?' என்று கூறி, 'வில்லினால் இவன் வெல்லப் படான். இவனைக் கொல்லும் நாளும் இன்றே' என்று மனத்துள்

நினைத்துப் பல்லிஞல் உதட்டைக் கடித்துத் தனக்குப் பிரமன் கொடுத்த வேலை எடுத்து, இலக்குமணன் மேல் எறிந்தான்.

இராவணன் எறிந்த வேல், இலக்குமணன் எய்த அம்புகள் எல்லாவற்றையும் எரித்து, அவன் மார்பில் செல்ல, அவன் மூர்ச்சித்தான். அதனைக் கண்ட வானரர் நிலைகெட்டு ஓடினர். வானவர் வருந்தினர். அரக்கர் ஆரவாரித்தனர். இராவணன், 'நான் எறிந்த வேலுக்கு இலக்குமணன் அஞ்சிலன், இறந்திலன், சோர்ந்தனன். இந்நிலையில் இவனை எடுத்துக்கொண்டு போவேன்' என்று தன் மனத்தோடு கூறி, முன் வெள்ளிமலையை யெடுத்தது வெட்கத்துக்கு இடமானது என்றெண்ணிப் பொன்மலையை யெடுக்கப் புகுந்தாற்போல், இலக் குமணன் உடலை, இருபது கைகளாலும் பற்றித் தூக்க, அசைய இயலாதவன் ஆனுனேயன்றி, அறிவொழியாத வனுயிருந்த இலகுமணன், தான் திருமாலின் அமிச மென்று சிந்தித்து, அட்ட சித்திகளில் ஒன்ருகிய கரிமா விஞல், யோகிகள் உடலை அசைக்க முடியாதபடி கனமாக் குதல் போலக் கனமாக்கித் தூக்க முடியாதவனுனுன். கரிய பெரிய உடலையுடைய இராவணன் கடல்போல் காட்சி யளிக்க, இலக்குமணனை எடுக்க முயன்று அசையும் இருபது கரங்கள் அலைகள்போல் காட்சியளிக்க, அந்தக் கைகளின் மீது தோன்றும் இலக்குமணன், கடலின் அலைமீது சந்திரன் போன்ருன். அன்பரை ஆபத்து அணுகும் அமையத்தில், அதனை அகற்றி, அவரைக் காக்கும் அனுமன் திடீரென எந்த மூலையிலேயோ இருந்து வந்து இலக்குமணனை வெடுக்கென எடுத்துத் தடுக்க முடியாத விசையோடு மிக்க தொலைவில் சென்ருன். பகைமை யுடைய இராவணனுக்கு எடுக்க முடியாத இலக்குமணன், அன்புடைய அனுமனுக்கு எளிதாகத் தூக்கப்படுபவனுக,

அவனைத் தூக்கிக்கொண்டு செல்லும் அனுமன் குட்டியைக் கிளைக்குக் கொண்டுபோகும் தாய்க்குரங்கு போன்றான். இராவணன் எறிந்த வேலால் விளைந்த சோர்வு சிறிது நேரத்தில் தீர்ந்த இலக்குமணனை அனுமன் இராமன் இருந்த இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தான்.

யானை மேற் செல்லும் சிங்கம்போல, இராவணனை நோக்கி இராமன் செல்ல, அவனும் இராமன் இருந்த இடத்துக்குத் தன் தேரைச் செலுத்தினான். இராவணனைத் தேர்மேலும், இராமனைப் பார்மேலும் கண்ட அனுமான் இராமனைப் பரிந்து நோக்கி, 'இராவணன் தேரிலிருந்து போர் செய்ய, நீ நிலத்தில் நின்று போர் புரிவது, நீ எளியன் என்பதை எடுத்துக்காட்டும். ஆகையால் என் தோள் மேல் ஏறிப் போர் புரிந்தருள்க' என வேண்ட, இராமனும் அனுமனது வேண்டுகோளுக்கு இணங்கி, மலைமேல் ஏறும் சிங்கம்போல அனுமன் தோள் மேல் ஏறி அமர்ந்தான். அந்நிலையில் வெண்ணிறமுடைய அனுமான் திருப்பாற் கடலை யொத்தான். அவன்மேல் அமர்ந்திருந்த கரிய இராமன், திருப்பாற் கடல் நாதனை கரிய திருமாலை யொத்தான் என்று கூறின், இவ்வுவமை பொருந்தாது. வேறு எந்த உவமை பொருந்தும் எனின், அனுமான் வேதத்தை யொத்தான்; இராமன் அவ்வேத முடியில் ஞானவடிவாய் ஒளிரும் பரம்பொருளை யொத்தான் என்று கூறும் உவமையே சாலப் பொருந்தும்.

இராமன் அனுமன் தோள்மேல் ஏறி, இராவணனை எதிர்க்கப் புறப்பட்டபோது, அருந்தவ முனிவர்கள் ஆசி வழங்கினர். அறக்கடவுள் ஆனந்தத்தாண்டவம் ஆடிற்று. பிரமன் முதலிய தேவர்கள் போரைப் பார்க்க அந்தரத்தில் வந்து அமர்ந்தனர். போர் தொடங்கும் குறியாக

இராமன் கோதண்டத்தில் நாணெறிந்தான். அந்த நாண் ஒலி, ஊழி முடிவில் உலகை யழிக்குமுன் உருத்திர மூர்த்தி செய்யும் ஒலியை யொத்தது.

இராவணன் ஏழம்புகளை யெய்தான். இராமன் ஏழம்புகள் எய்து, அந்த ஏழம்புகளையும் எவ்வேழு துண்டுகளாகச் செய்து, வேறு ஐந்தம்புகளை யெய்தான். அவைகளை இராவணன் ஐந்தம்புகளால் மாற்றிப் பின்னும் பத்தம்புகள் விடுக்க, அவற்றை இராமன் அத்தொகை கொண்ட அம்புகளால் அறுத்தான்; பிறகு, வேறு பல அம்புகளால் இராவணன் அம்புகளும் ஏனை இராக்கத வீரர் அம்புகளும் வானரர்மீது படாதபடி காத்து, அரக்கர் தலைகளை வீழ்த்தி மலைகளாகக் குவித்தான். தன்மேல் நின்ற இராமன் அம்புக்கும் மனத்துக்கும் முன்னாக விரைந்து செல்லும் அனுமன் மண்ணிடத்துள்ளான் என்று சொல்லுமுன் விண்ணிடத்தான் ஆவான்; இமைக்குமுன் இராவணன் முகங்கள் ஒவ்வொன்றுக்கும் எதிராவான்; அளவற்ற அரக்கர் ஒவ்வொருவர் பார்வையூடும் உலாவுவானானான்.

அந்தப் போர்க்களத்தில் தலையற்ற உடம்புகள் ஆடின. பாடுதற்கு வாயில்லாத அந்தக் கவந்தங்களோடு வாயுடைய பேய்கள் ஆடலோடு பாடலும் புரிந்தன. இறந்த யானைகள், குதிரைகள், காலாட்களின் பிணங்களை வாரிக்கொண்டு இரத்த ஆறுகள் ஓடின. இராக்கத சேனைத் தலைவர்கள் தங்களுடைய தேர்களையும் யானைகளையும் குதிரைகளையும் காலாட்களையும் இழந்து, இறுதியாகத் தங்கள் தலைகளையும் இழந்தார்கள்.

இராவணன் ஒருவனும், அவன் இருந்த தேர் ஒன்றுமே மிஞ்ச, அவனுடைய சேனைகள் எல்லாவற்றை

யும் இராம பாணங்கள் தொலைத்தன. தன் நால்வகைப் படைகளும் ஒரு சிறிதுமின்றி யொழிந்ததை உணர்ந்த இராவணன் பெருங்கோபம் கொண்டு, மரகத மலைகளை நிறத்தாலும் பெருமையாலும் நேர்ந்து திரண்ட இராமன் தோள்கள் இரண்டிலும் அழுந்தும்படி இரண்டு அம்புகளை யெய்தான். அப்பொழுது இராமன் புன்னகை புரிந்து, அந்த இரண்டம்புகளை யெய்த இராவணன் வில்லை ஓரம்பால் இரு துண்டங்களாக்கினன்; அவன் மாற்று வில்லை வளைத்து நாணேற்றுமுன், தன் அம்புகளால் அதனை அறுத்துத் தேர் குதிரைகளின் சிரங்களையும் அரிந்தான்; வேறு சில அம்புகளை யெய்து, அவன் எறியத் தொடங்கிய எல்லாப் படைக்கலங்களையும் இடையிலேஅற்று விழும்படி செய்து, அவன் வெண்கொற்றக் குடையும் கவசமும் தேரும் அழியும்படி செய்தான். மாற்றுத் தேர்கள் வந்தன. வந்த எல்லாவற்றையும் இராமன் அம்புகளால் அழித்தான்; பின்னும் சில அம்புகள் எய்து, இராவணனுடைய மகுடங்கள் கடலிற் போய் விழும்படி செய்தான். இதுவரை போர் புரிய நேர்ந்தபோதெல்லாம் வெற்றியன்றித் தோல்வியை யறியாத கரிய இராவணன், மகுடத்தை யிழந்ததனால், சூரியன் இல்லாத பகலையும், சந்திரன் இல்லாத இரவையும் ஒத்தான். இராமன் அம்பால் தன் மகுடங்கள் எல்லாவற்றையும் இழந்த இராவணன், தன் வாக்கினால் யாரையும் வாழ்விக்கவும் தாழ்விக்கவும் வல்ல வரகவி ஒருவனுடைய வசைப்பாட்டால் தான் அடைந்திருந்த அரிய புகழ் அனைத்தையும் இழந்த ஒருவனை யொத்தான்; போர் புரிதற்குரிய சாதனங்கள் எல்லாம் இழந்து செயலற்றதனால், செருக்குத் தீர்ந்து, நிமிர்ந்த பார்வை நீங்கி, கீழ் நோக்கியவனாய், ஒளியிழந்த முகத்தினனாய்க் கவிழ்ந்த தலையினனாய்ப் பல விழுதுடைய ஆலமரம் போலத் தாழ்ந்து தொங்கிய கரத்தினனாய்,

இயல்பாகக் கறுத்த நிறம் அதிகமாகக் கரிந்திட, மாதர் போல நாணங்கொண்டு, கால் விரல்களால் நிலத்தைக் கீறிக்கொண்டு நின்றான். அந்நிலையில் அவன், 'அறநெறி தவறியவர் முடிவு இதுவாம்' என்று உலகுக்கெல்லாம் உணர்த்துவான் ஒத்தான் :

"அறம்க டந்தவர் செயலிதென் றுலகெலாம் ஆர்ப்ப
நிறம்க ரிந்திட நிலம்விரல் கிளைத்திட நின்றான்
இறங்கு கண்ணினன் எல்லழி முகத்தினன் தலையன்
வெறுங்கை நாற்றினன் விழுதுடை யாலன்ன மெய்யன்."

இராமன் இராவணனுடைய இரங்கத்தக்க நிலையைக் கண்டு, வெறுங்கையனாய் நிற்கின்றான் என்பதை யுட் கொண்டு, கொல்லுதல் குறியாதவனாய், அவனை நோக்கி, 'உனது தீமை செய்யும் திறமை இன்று தீர்ந்ததுபோலும்! நான் கூறுவதைக் கேள். தருமத்தினாலன்றி, அதருமத் தினால் வெற்றியடைதல் அமரர்க்கும் அரிதென்பதை உன் மனத்தில் உறுதியாகக் கொள்க. இப்போது என் கையால் இறந்திருப்பாய். நீ எல்லாம் இழந்து தனியனாய் நிற்பது கண்டு இரங்கி, உன்னைக் கொல்வதை நினைக்கிலன். உன் உறவினரோடு உய்யும்படி உன் ஊருக்கு ஓடிப் போ. நீ சிறையில் வைத்தவளை விட்டு, நீ பறித்த பதவியினைத் தேவருக்குத் திரும்பக் கொடுத்து, அவர்களை முன் வாழ்ந்த முறைப்படி வாழ விடு. என்றால் இராக்கதர்க்கு இறைவனாக்கப் பெற்றிருக்கின்ற உன் தம்பி ஏவிய ஏவல் களைச் செய்யும் சேவகனாக வாழ்வாயானால், உன் சிரங்களை என் சரங்களால் அரிந்து தள்ளாதிருப்பேன். நான் கூறிய வாறு செய்வாயல்லையானால், உனக்குள்ள ஆள்வலி, படை வலியெல்லாம் கொண்டுவந்து எதிர்த்துப் பொருது இறப்பாயாக. இனிப் பிழைப்புண்டென் றெண்ணி வீண் ஆசை வையாதே' என்றான்.

பின்னும், மிக இளமையான கமுக மரங்களின்மீது வாளை மீன்கள் துள்ளிப் பாயும் கோசல நாட்டையுடைய வள்ளல் இராமன், இராவணனை நோக்கி, 'ஆளுதற்கு யாவை உனக்கு அமைந்தனவோ, அவை காற்றினால் மோதப்பட்ட பூளைப் பஞ்சுபோலப் பறக்கடிக்கப்பட்டன வாயின. இன்று நின் ஊருக்குப் போய், தேர்ப்படை முதலிய நாற்படையும், வில், அம்பு முதலிய எல்லாப் படைகளையும் கொண்டு, போர்க்கு நாளை வா' என்று கூறி யருளினான் :

"ஆள யாவுனக் கமைந்தன மாருதம் அறைந்த
பூளை யாயின கண்டனை யின்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்."

## 5. கும்பகருணனது வீரப் போர்

இராவணன் கட்டளைப்படி பல வீரர் சென்று கும்ப கருணனை எழுப்பினர். உறக்கம் தீர்ந்த கும்பகருணன், பசியும் தாகமும் தீர்ந்த பின்னர், பணியாளர் அவ்வரக் கனை நோக்கி, 'உன் தமயன் உன்னை அழைக்கின்றான்' என்று கூற, அவன் இராவணனிடம் சென்று மலை கீழே விழுவதுபோல் அவன் அடியில் விழுந்து வணங்கினான்.

இராவணன், கும்பகருணனைத் தழுவி யெடுத்து, மாமிசமும் இரத்தமும் கள்ளும் சிற்றுண்டியாக உட் கொள்ளச் செய்து, அவனுக்கு வெண்பட்டாடை யுடுத்து, தெய்வமணம் கமழும் செஞ்சந்தனக் குழம்பைத் தேகத்தின்மீது பூசித் தவமியற்றிச் சிவனிடத்துப் பெற்றிருந்த கவசத்தையும் பூட்டினான்.

கும்பகருணன் இராவணனை நோக்கி, 'அண்ணா, ஏன் எனக்கு இந்தக் கோலம் புனைந்தாய்?' என்று கேட்டான். அப்பொழுது இராவணன், 'மானுடர் இருவர் வானர சேனையோடு நமது நகரை முற்றுகை செய்திருக்கிறார்கள். நீ அவர்கள் உயிரை உண்ணப் போவாயாக' என்று கட்டளையிட்டான். அப்பொழுது கும்பகருணன்,

"ஆனதோ வெஞ்சமம் அலகில் கற்புடைச்
சானகி துயரினம் தவிர்ந்த தில்லையோ
வானமும் வையமும் வளர்ந்த வான்புகழ்
போனதோ புகுந்ததோ பொன்றும் காலமே"

என்று ஏக்கத்தோடு கூறினான்; இன்னும் பல பல கூறிய பின், இறுதியாக அண்ணனை நோக்கி, 'நான் உனக்கு உணர்த்தவேண்டியது ஒன்று உளது. அதனை யுணர்ந்து

ஏற்றுக்கொள்வாயானல் நன்மையுண்டாம். மறுப்பாயானல் மாள்வாய். அதனைக் கூறுகிறேன், கேள்: சீதாதேவியை விட்டு, இராமனை வணங்கி, உன் தம்பி விபீடணனுடன் உறவு பூணுதல் உனக்குப் பிழைக்கும் வழியாம். இது உனக்கு ஏற்காதெனில், செய்யத்தக்கது வேறென்றிருக்கிறது. அதையும் சொல்கிறேன். பகுதி பகுதியாகப் படைகளை அனுப்பி, அவைகள் ஒன்றன்பின் ஒன்ருக ஒழியக் கண்டு, வருந்தியிருந்து வாடுதல் அறிவாளிகள் செயலன்று. நம் படை வலி முழுவதையும் பகைவர்மீது ஒருசேரச் செலுத்துவதே செய்யத்தக்கது' என்ருன்.

கும்பகருணன் கூறியவற்றைக் கேட்டு வெகுண்ட இராவணன், தம்பியை நோக்கி, 'நான் உன்னை அழைத்தது, இனி யாது நேருமென்று தெரிந்துகொள்வதற்காக அன்று, நீ காலக்கணிதன் அல்லை; எனக்கு யோசனை கூறுதற்கு மந்திரியுமல்லை. நீ போருக்கு அஞ்சினய். உன் வீரம் பாழ்பட்டது. யுத்தத்துக் குரிய வலிமை ஒழிந்தாய். மதுவும் மாமிசமும் வயிறு நிறைய உண்டாய். இனி உனக்கு வேண்டுவதொன்றே. அது உறக்கமே. இனி இரவும் பகலும் உறங்கப் போ' என்று அவன் மனம் வருந்தும்படி கூறிப் பின்னும் கூறுகின்ருன்:

" மானுடர் இருவரை வணங்கி மற்றுமக்
கூனுடைக் குரங்கையும் கும்பிட் டுய்தொழில்
ஊனுடை யும்பிக்கும் உனக்கு மேகடன்
யானது புரிகிலேன் எழுக போகென்ருன்."

இராவணன் இவ்வாறு கூறிவிட்டுப் பக்கத்தில் நின்ற பணியாளரை நோக்கி, "என் தேரையும் படைகளையும் கொணர்க. 'எங்குமுள்ள இராக்கதர் எல்லாரும் ஒன்று சேர்ந்து எதிரிகளோடு பொருதற்கு வருக' என்று என்

கட்டளையாக எல்லோருக்கும் தெரியும்படி பறை சாற்றுக'' என்று சொல்லிப் போருக்குப் புறப்பட்டான். அதைக் கண்ட கும்பகருணன் இராவணன் அடிகளில் வீழ்ந்து பணிந்து, மன்னிப்பு வேண்டிப் போருக்கு உடன் பட்டுச் .சூலாயுதத்தை வலக்கையில் ஏந்தி, 'நான் போருக்குப் போகிறேன். அதன்முன் ஒரு வார்த்தை சொல்லவேண்டியிருக்கிறது' என்று சொல்லத் தொடங்கி.

'' வென்றிவண் வருவனென் றுரைக்கி லேன்விதி
ஒன்றது பிடர்பிடித் துந்து கின்றது
பொன்றுவன் பொன்றினுல் பொலன்கொள் தோளியை
நன்றென நாயக விடுதி நன்றரோ.''

'யான் பிறந்த நாள்முதல் இந்நாள்வரை ஏதேனும் குற்றம் செய்திருந்தால் பொறுத்தருள்க. இனி உன் முகத்தில் விழிப்பதற்கில்லை. விடை பெற்றுக்கொள் கிறேன். போருக்குப் போகிறேன்' என்று கூறிவிட்டுப் புறப்பட்டான்.

கும்பகருணன் தன்னுயிரினும் அண்ணன்பால் அன் புடையவன் என்பதை யுணர்ந்த இராவணன், என்பும் உருகும் அன்புடையவனுகி, தன் தம்பிக்கு ஒருகால் சாவு நேருமோ என்று எண்ணி, தன் இருபது கண்களிலும் கண்ணீரோடு செந்நீரும் சுரந்து ததும்பலுற்றான்.

போருக்குப் புறப்பட்ட கும்பகருணன் நகரவாயிலை யடைந்தான். 'அவனேடு போர்ப்பறை முழக்கிக் கொண்டு பெரும்படை செல்க' என இராவணன் இட்ட கட்டளைப்படி வந்த நால்வகைப் படைகளும் நடந்த தனுல் உண்டாகிய தூளிகள் எழுந்து படர்ந்து விண் முகட்டைத் தூர்த்தன. அவ்வாறு தூர்த்த தூளிகளைத் துடைப்பனபோல், தேர்கள்மீது கட்டப்பட்டும்,

யானைகள்மீது பிடிக்கப்பெற்றும் விளங்கிய கொடிகளின் சீலைகள் ஆடலாயின. ஆயிரம் சிங்கங்களும், ஆயிரம் யானைகளும், ஆயிரம் பூதங்களும் பூட்டிய இரத்தினங்கள் இழைத்த இரதத்தின்மீது கும்பகருணன் ஏறிச் சென்றான். அவனை இராமன் கண்டான்.

இராமன் வீடணனை நோக்கி, பெருந்தேர்மீது மேரு மலைபோல் வீற்றிருக்கும் இவ்வீரன் யார்?' என்று வினவினான். அப்பொழுது வீடணன், ''இவன் இராவண னுக்குத் தம்பி; எனக்குத் தமயன்; இவன் பெயர் கும்பகருணன். திருமால்போல் நெடுநாள் உறங்குபவன். அப்பெருமான் விழித்தெழுந்தால் அசுரர் அனைவரும் இறந்திடுவர். இவன் விழித்தெழுந்தால் இமையவர் எல்லோரும் இறப்பர். இவன் காலனுக்குக் காலன்; காற்றினும் கடுமையுடையவன். 'பிறன் மனைவியை விரும்புதல் அறமன்று' என்று இராவணனுக்குப் பல முறை கூறி மன்றாடிய மாவீரன்; தன் வேண்டுகோள் பயன்படாது போகவே, வெறுப்புக்கொண்டு, காலன் முன் உயிர் வருவதுபோல் உன் எதிரே வருகிறான்'' என்றான்.

அப்போது சுக்கிரீவன் இராமனை நோக்கி, 'இவனை நாம் கொல்வதால் பயனில்லை. கூடுமானால் இவ்வீரனை நம் பக்கம் சேர்த்துக்கொள்ளலாம். இப்படிச் செய்வதனால் நமக்கு அனுகூலம் உண்டாவதன்றி, விபீடணனுடைய துன்பமும் நீங்கும்' என்று சொன்னான். இராமன், 'இது நல்லதே. ஆனால் கும்பகருணனிடம் போதற்குரியவர் யார்?' என, விபீடணன், 'அடியேன் சென்று, என் அறிவாற்றலால் அவனைத் தெளிவித்து, அவன் நம்மோடு சேர உடன்பட்டால், இங்கே அழைத்து வந்து சேர்க்கிறேன்' என்று கூறி, இராமனிடம் விடை பெற்றுச் சென்றான்.

கும்பகருணனிடம் சென்ற விபீடணன் தன்னால் ஆன வரை அழுதும், தொழுதும், அறிவாற்றலால் பலபல பேசியும் அவனது கொள்கையை மாற்ற முடியாமல் இராமனிடம் வந்து, இராமனை வணங்கி, 'ஐய, தீங்கி னின்று தப்பிப் பிழைக்கும் தன்மையுடையவர்க்கன்றோ அறநெறியில் உள்ளம் செல்லும். என் சொல்லாற்றலை யெல்லாம் பயன்படுத்திப் பேசினேன். அவன் மனத்தை மாற்ற முடியவில்லை. தன் குலத்தாரான இராக்கதரை விட்டுப் பிரியக் கூடாதென்னும் குலாபிமானம் தீர்ந்திலன் சிறிதும்' என்றான்.

விபீடணன் கூறியவற்றைக் கேட்ட இராமன், அவ் அறிஞனை நோக்கி, "உன் எதிரே உன் தமையனை அம் பெய்து துண்டித்து வீழ்த்தல் இனிதன்று என்றெண்ணி, 'அந்நல்லோனை நம்பக்கம் சேர்க்கக் கூடுமானால், சேர்ப் பாயாக' என்று சொன்னேன். இனி நாம் செய்யும் வகை போரன்றி வேறில்லை. விதியை யாரே விலக்க வல்லார்!" என்று கூறினான்.

இவ்வண்ணம் இராமபிரான் சொல்லிக்கொண் டிருந்தபோதே, அரக்கர் சேனை வானர சேனையை வளைந்து போர் செய்யப் புகுந்தது. அந்தப் போரில் அரக்கர்கள் அம்பெய்தார்கள். வானரர்கள் கல்லெறிந் தார்கள். அரக்கர் மூளையும் சதையும் இரத்தமும் கலந்து குழம்பாயின. அவர்களது இரத்த வெள்ளத்தில் வானரர் அழுந்தினார்கள். தேர்கள் ஓடின. யானைகள் ஓடின. குதிரைகள் ஓடின. படைஞர் ஓடினர். இரத்த ஆறுகள் ஓடின. தரையிலே கவந்தங்களும் பேய்களும் ஆடின. வானத்திலே கொடிச் சீலைகளும் பறவைகளும் பறந்தன. கும்பகருணன் தேரைச் செலுத்திப் போரை நடத்து வானாகி, வானரர்களை மலைகொண்டெறிந்தும், மேலே

குதித்தும், மிதித்தும், உதைத்தும், ஒரு குரங்கைக் கொண்டு மற்றொரு குரங்கை மோதியும், பல, குரங்குகளை வாரி வாயிலிட்டுத் தின்றும், மென்று உமிழ்ந்தும், தலைகளைத் திருகியும், உடல்களைத் தேய்த்துப் பிசைந்து தன் உடலின்மேல் பூசியும், விண்ணில் வீசியும், மண்மீதும் மலைமீதும் மரத்தூர்மீதும் தேர்மீதும மோதியும், திசைகளெங்கும் சிதறியும் வானர சேனையைச் சின்ன பின்னம் செய்தான்.

சேனாதிபதி நீலன், தன் சேனை சின்ன பின்னமானதைக் கண்டு, ஒரு பெரு மலையைப் பேர்த்தெடுத்துச் சுழற்றியெறிந்தான். அதனைச் சூலாயுதத்தால் தூளாக்கிக் கும்பகருணன் குறுஞ்சிரிப்புக் கொண்டான். பின்னர் நீலன் கும்பகருணன் தேரை நோக்கி ஓடி, இடியோசையும் பின்னிடப் பேரோசை யுண்டாக்கி, அவனைப் பலமுறை கைகளாற் குத்திக் கால்களால் எற்றினான். அப்போது கும்பகருணன் நீலனது உயிர் பதைக்கும்படி இடக்கையாற் புடைத்தான். நிராயுதன்மீது ஆயுதம் செலுத்துவது நியாயமன்றென்று நினைந்த கும்பகருணன் நீலன் மீது முத்தலைச் சூலத்தைப் பாய்ச்சாது விட்டான்.

அப்பொழுது அங்கதன், 'இப்போது நாம் குறுக்கிடாவிடில், கும்பகருணன் நீலனைக் கொன்றுவிடுவான்' என்றெண்ணி, ஒரு பெருமலையைப் பேர்த்தெடுத்துக் கும்பகருணனைக் குறித்து எறிந்தான். அவன் அம்மலையைத் தன் தோள் ஒன்றின் மேல் ஏற்றான். அதனைக் கண்ட அங்கதன் மிக வெகுண்டு, முன் வைத்த காலைப் பின்வைக்காமல் நின்றான். கும்பகருணன் வயிரத் தண்டு ஒன்றையெடுத்து, 'என்முன் நிற்போனின் உயிரை அழிப்பாயாக' என்று கூறி எறிந்தான். அங்கதன் அதனைக் கையாற் பிடித்துக்கொண்டான். அது கண்ட அமரர்கள் பெரிதும் வியந்து, அவனை வாயார வாழ்த்தினார்கள். அவன் தன்

கையிற் பிடித்த தண்டைச் சுழற்றி, இந்தத் தண்டு கொண்டடித்த அவனுயிர் குடிப்பேன்' -என்று கூறிக் கும்பகருணன் தேர் முன்னே குதித்து எதிர்த்து நின்றான்.

அவ்வாறு நின்ற அங்கதனைக் கும்பகருணன் கோபித்துப் பார்த்து, 'நீ சுக்கிரீவனோ? அங்கதனோ? அனுமானோ? யாரோ? சொல்' என்றான். அப்பொழுது அங்கதன், 'உன் தமையனை வாலினால் சுற்றியபடியே நான்கு திக்கும் சென்று, ஈசனைப் பூசனை செய்த வாலியின் மகன் நான். உன்னை வாலிற் கட்டிச் சென்று, இராமன் பாதங்களில் வைத்து வணங்குவேன்' என்றான்.

அங்கதன் கூறியதைக் கேட்ட அவன், 'மறைந்து நின்று, அம்பெய்து, உன் தந்தையின் ஆருயிர் கொண்டு, சுக்கிரீவனுக்குப் பேருதவி செய்தவனுக்கு, நீ அவன் பகையை அழித்து மாறுதவி செய்யாயானால் உலகோர் உன்னை நிந்திப்பார்கள். பகைவனது பகையை அழித்த லாகிய நல்ல காரியம் செய்யக் கருதினாய். இச் செயலைக் கண்டு வீரராயுள்ளார் உன்னை வந்திப்பார்கள்' என்று வஞ்சப் புகழ்ச்சியாக இகழ்ந்ததோடு அமையாது, பின் னும் சில சொல்லத் தொடங்கி, 'நீ இப்பொழுது இங்கே வந்தது, என்னை வாலிற் கட்டி, இராமனிடம் சேர்த்தற் கன்று; என் முத்தலைச் சூலம் உன் மார்பிற் பாய்ந்து முதுகின் வழியாய் வெளியாக, உயிரிழந்து, வால்போலக் கால்களும் கைகளும் தொங்கிக் கிடத்தற்காம்' என்றான்.

உடனே அங்கதன் கோபித்து, மலைமேல் இடி விழுவதுபோல் கும்பகருணன் தோள்மீது, தன் கையி லிருந்த வயிரத் தண்டு கொண்டு ஓங்கியடித்தான். அத் தண்டு நூறு கூறாய் நொறுங்கிவிட்டது. உடனே அங் கதன், கைகளை உயர்த்திக் கும்பகருணனைக் குத்திக்

கொல்லக் குனிந்தபோது, அங்கதன் கும்பகருணனைக் குத்துமுன், கும்பகருணன் அங்கதனைக் குத்த, அவன் கீழே விழுந்தான்.

முன் கும்பகருணனால் நீலன் ஆபத்துக்குள்ளான போது, அங்கதன் குறுக்கிட்டு உதவியதுபோல, இப் போது கீழே விழுந்து கிடந்த அங்கதன்மேல் கும்ப கருணன் சூலாயுதத்தை எறியத் தொடங்கியபோது, அனுமான் கும்பகருணன் நெற்றி முற்றும் பொத்தித் தாக்கும்படி ஒரு மலையை எறிந்து, 'இராமன் வாழ்க!' என்று வீர ஆரவாரம் செய்தான்.

மலைபோன்ற கும்பகருணன் தலையைத் தாக்கி, அவ னுக்குத் தலை இரண்டு என்னும்படி வேறொரு தலை போலிருந்த அந்த மலையைக் கையால் எடுத்து, உலைக் கூடத்தின்மீது சம்மட்டியால் அடிப்பதுபோல், அந்த மலையை அனுமான் மார்புமீது தாக்கும்படி வீசியெறிந்து, கும்பகருணன் தோள் கொட்டி வீர முழக்கம் செய்தான். அப்போது வானர வீரர் மூர்ச்சித்துக் கிடந்த அங்கதனைத் தூக்கிக்கொண்டு போனார்கள்.

அனுமான் மிகப் பெரிய மலை ஒன்றைப் பேர்த் தெடுத்துப் பிடித்துக்கொண்டு, 'கும்பகருண, உன்மேல் இதனை எறியப் போகிறேன். இதனால் உன் வலிமை இமைப் பொழுதில் ஒழிந்துவிடும். உன் வலி ஒழியாமல் நீ இதனை ஒழித்திடுவாயானால், உன் வல்லமை உலகப் பிரசித்தமானதாம். பெரும்புகழ் பெறுவாய். யான் உன்னோடு இனி என்றும் போர் செய்யேன்' என்றான்.

அப்பொழுது கும்பகருணன் மலைக் குகை திறந்தாற் போல வாய் திறக்கச் சிரித்து, இந்த மலையை யான் எதிரேற்ற காலத்தில் ஒரு சிறிது சோர்வுற்றேன் என்றாலும் உனக்குத் தோற்றவனாவேன். உன்னை வலியன்

என்றும், என்னை மெலியன் என்றும் ஒப்புக்கொள்வேன்' என்றான்.

உடனே அனுமான், 'இதனைத் தாங்க வல்லையாகில் நில்; வல்லையல்லையாகில் செல்' என்று கூறி யெறிந்த மலையைக் கும்பகருணன் எந்த ஆயுதம் கொண்டும் தடுக்காமல், தன் தோள்மேல் ஏற்றான். அம் மலை பல சுக்கலாய்ச் சிதறிவிட்டது. கும்பகருணன் சிறிதும் தளராது நின்ற தன்மையை அனுமன் கண்டு, 'இவன் வல்லமை சொல்லும் தரமன்று. இவன் தோள்களைப் பிளக்கவல்லது யாதேனும் இருந்தால், அது இராம பாணமே' என்று கருதி அப்பாற் சென்றான்.

'இறந்தவை போக, எஞ்சிய வானரப் படையெல்லாம் இன்றே கும்பகருணன் சூலப்படையால் இறந்தொழியும்' என்று கூறி, இமையவர்கள் ஏங்கினார்கள். கும்பகருணன் போர்க்களத்தில் ஒரு குரங்குமில்லாதபடி ஓட்டிவிட்டு, 'எல்லாக் குரங்குகளையும் தொலைத்துவிட்டேன். இனித் தொலைக்க வேண்டியவர்கள் இராம இலக்குமணரே. அவர்கள் எங்கே? எங்கே?' என்று கூக்குரலிட்டுக் கூவித் தோள் கொட்டிக் கொக்கரித்தான்.

ஒரு நாட்போரில் வானர சேனை பாதிக்கும் அதிகமாக அழிந்ததென்று தூதர் இலக்குமணனிடம் கூறினர். அதனை யுணர்ந்த அவ்வீரன் அரக்கர் சேனைகளை அழித்தொழிப்பதற்கு முன்வந்தான்.

அங்ஙனம் வந்த இலக்குமணன் தன் வில்லில் நாணைத் தெறித்தான். அதனால் உண்டான ஓசையால் திசைகள் செவிடுபட்டன. 'இலக்குமணனது வில்லினின்று புறப்படும் அம்புகளால் அரக்கர் எண்ணிறந்தவர் இறந்திடுவர். அவர்கள் மாமிசத்தைநாம் நிரம்ப உண்ணலாம்'

என்னும் மகிழ்ச்சியால் பேய்கள் கைகளை முடக்கி, உயர்த்தி விலாவில் அடித்துக்கொண்டு அசைந்தாடும் துணங்கைக் கூத்தாடின.

நாணொலி எழுப்பிய இலக்குமணன், அரக்கர் சேனையைக் குறித்து அம்புகளைத் தொடுத்து விடுத்தான். அந்த அம்புகளால் யானைப் படை, குதிரைப் படை, காலாட் படைகளெல்லாம் அழிந்தொழிந்தன.

'அறக் கடவுளின் ஆருயிர்போன்ற இலக்குமணன் கணைகளுக்கு எதிர்நின்றால் நாம் இறந்தே போய் விடுவோம்' என்றெண்ணிய அரக்கர்கள், அந்தப் போர்க் களத்தினின்று ஓடிய இரத்த ஆறுபோல ஓடினார்கள்.

அதனைக் கண்ட கும்பகருணன், போரில் இறந்தவர் களது மிகுதிப்பாட்டையும், இலக்குமணனது விற்றொழி லின் தகுதிப்பாட்டையும் நோக்கி வியந்து, 'ஒப்பற்ற வில்லாளர், திரிபுரம் எரித்த சிவனும் இவனுமேயாவர்' என்று ஒரு முறையன்று, பன்முறை பாராட்டிக் கூறி, இலக்குமணன் இருந்த இடத்தை நோக்கித் தன் தேரைச் செலுத்தினன். கும்பகருணன் தேர்மேலும், இலக்குமணன் பார்மேலும் இருந்து போர் புரிதல் பொருத்தமன்று என்று எண்ணிய அனுமான் இலக்குமணனைத் தன் தோள்மீது ஏறிக்கொள்ளும்படி வேண்ட, அவ்வீரனும் அவ்வண்ணமே இசைந்து ஏறினன். அங்ஙனம் ஏறியபோது தோன்றிய காட்சி வெள்ளிமலை மீது பொன்மலை விளங்கினாற்போன்ற தோற்றத்தை ஒத்தது.

கும்பகருணன், இலக்குமணனை நோக்கி, 'நீ இராமன் தம்பி; நான் இராவணன் தம்பி. இருவேமும் பொருவோம் ஆனேம். நமது போரைக் காண வானவர்களும் வந்துள் ளார்கள். போர் முறைப்படி நாம் இருவரும் நமது

வலிமைக்குரியவற்றைக் கூறிப் போர் புரிவோம்' என்று பின்னும் சில சொல்லத் தொடங்கினன்:

'எங்கள் முன்னோர் செய்த தவத்தினால் ஒரு பெண் எங்களோடு பிறந்தாள். அவள் ஒரு குற்றமும் செய்யாதவள். அவளது மூக்கை வெஞ்சினத்தால் கொய்த வெற்றியாளனே, நான் கூறுவதைக் கேள். அவளது கூந்தலைத் தொட்டு இழுத்த உன் கையை அறுத்துத் தரைமேல் கிடத்தப் போகிறேன். உன்னால் தடுக்க முடியுமானால் தடுத்துக்கொள்' என்றான்.

"பெய்த வத்தினோர் பெண்கொடி யெம்முடன் பிறந்தாள்
செய்த குற்றமொன் றில்லவள் நாசிவெஞ் சினத்தால்
கொய்த கொற்றவ மற்றவள் கூந்தல்தொட் டீர்த்த
கைத லத்திடைக் கிடத்துவன் காக்குதி யென்றான்."

கும்பகருணன் கூறியதைக் கேட்ட இலக்குமணன், 'மானுடரான நாங்கள் அரக்கரான உங்களிடம் பேசின், அப்பேச்சு வில்லினால் பேசினால் பேசலாமேயன்றிச் சொல்லினால் பேசினால் வீரக்கடவுள் வெட்கமடையும். அவ்வண்ணம் வீரத்தெய்வம் வெட்கும்படி பேசுவதை யாங்கள் கற்கவில்லை' என்றான்:

"அல்லி னுல்செய்த நிறத்தவன் அனையது பகர
மல்லி னுல்செய்த தோளினன் மாற்றங்கள் நும்பால்
வில்லி னற்சொலின் அல்லது வெந்திறல் வெள்கச்
சொல்லி னற்சொலக் கற்றிலம் யாமெனச் சொன்னான்."

அப்பொழுது மண்ணும் விண்ணும் இரண்டு கூறுகள் ஆகும்படி, பெரிய மலைகள் பிளக்கும்படி கும்பகருணன் ஒரு தொடுப்பில் பன்னெட்டுப் பாணங்களைத் தொடுத்து விடுத்தான். இலக்குமணன் அந்த அம்புகளை நான்கு கணைகளால் அறுத்தான். பின்னர், கும்பகருணன்

பிரமதேவனுல் கொடுக்கப்பெற்றதும், அமரரை அடக்கியதும், ஆயிர வடிவுடையதுமான கணையை எடுத்து, 'இதனை விலக்க வல்லையேல் விலக்குவாயாக' என்று கூறி, வில்லில் தொடுத்து விடுத்தான். இலக்குமணன் அதற்கு எதிராக ஒரு தெய்விக அம்பைச் செலுத்தி அதை அறுத்தான். கும்பகருணன் பன்னிரண்டு கணைகளை அனுமான்மேல் அழுந்தச் செய்து, இரண்டு கணைகளை இலக்குமணன் மேற் செலுத்தி, நூற்றைம்பது அம்புகளால் ஆகாயமும் திசைகளும் மறையச் செய்தான். இலக்குமணன், மறைந்த அம்புகளை மாற்றம்புகளால் மாற்றி, வேற்றம்புகளால் கும்பகருணன் தேரில் பூட்டியிருந்த சிங்கங்கள், யானைகள், குதிரைகள், பூதங்கள் இவைகளைத் தொலைத்துத் தேரையும் சிதைத்தான். மேலும் வெங்கணைகள் விடுத்துத் தேர்ப்பாகனையும், கும்பகருணன் வில்லையும் துண்டித்தான். தேர் முதலியவை சிதைக்கப்பட்டதை நோக்கிய தேவர்கள், இச்சிதைவு கைச்சாபத்தாலோ அல்லது வாய்ச் சாபத்தலோ ஆகியது என்று திகைத்தார்கள்.

தேரும் வில்லும் அற்ற கும்பகருணன், மூன்றுலகையும் வென்றதற்கு அடையாளமாக மூன்று தலைகளையுடையதாயிருந்த சூலமாகிய காலனைக் கையிற் கொண்டான். கும்பகருணன் தேரிழந்து பாரில் நின்றது கண்ட இலக்குமணன், அனுமான் மேலிருந்து அவனேடு பொருதல் அறம் அன்று என்று எண்ணித் தானும் தரையில் நின்முன். அப்போது இராவணன் கும்பகருணனுக்கு உதவியாக அனுப்பிய பெரும் படை வந்து, இலக்குமணனைச் சூழ்ந்து நின்று போர் முழக்கம் புரிந்தது. இலக்குமணன் அந்த இராக்கதப் படையை எதிர்த்து, அம்புகள் எய்து, யானையின் கைகளும், குதிரையின் கால்களும், தேர்ச் சக்கரங்களும், அரக்கர் தலைகளும்

அறுபடச் செய்ய, அறுப்புண்ட உறுப்புக்களினின்று ஒழுகும் இரத்த வெள்ளம், பிணப் பெருங்குவியல்களான கரைகளைக் கடக்கமாட்டாமல் தடைப்பட்டது. இராக்கதர் எரிந்த வாள்கள், இருப்புலக்கைகள், தண்டுகள், வேல்கள் முதலியவைகளை இலக்குமணன் அம்புகளால் அறுக்க, அவைகள் அங்கங்கே துண்டு துண்டுகளாக விழுந்தன.

உதவிக்கு வந்த அரக்கர் சேனை, இலக்குமணனால் அழிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது கும்பகருணன் வேறோரிடத்தில் நின்றான். அங்கே அவனுக்கும் சுக்கிரீவனுக்கும் போர் மூண்டது. சுக்கிரீவன் ஒரு பெரிய மலையைப் பிடுங்கிக் கும்பகருணன் மேல் எறிந்தான். அதனைக் கண்டவர் கும்பகருணன் தோள் ஒடிந்தேபோம் என்று எண்ணினார்கள். அம்மலையைக் கும்பகருணன் ஒரு கையால் ஏற்றுப் பிசைந்து தூளாக்கித் தூற்றினான். சுக்கிரீவன் வேறொரு மலையைத் தெரிந்தெடுத்து எறிய எண்ணிக்கொண்டிருந்தபோது அவன்மீது கும்பகருணன் ஒரு சூலத்தை யெறிந்தான். அதனைக் கண்டவர், சுக்கிரீவன் செத்தான் என்று கதற, அந்தச் சூலாயுதம் ஆகாயத்திற் செல்வதைக் கண்ட அனுமன், அதனை எட்டிப் பிடித்து ஒடித்து எறிந்தான். அனுமன் சூலத்தை ஒடித்த ஓசை, இராமன் மிதிலையில் வில்லை முறித்த ஓசையை ஒத்தது. கும்பகருணன் வியந்து, அனுமனை நோக்கி, 'உன் கைவலி உரைத்தற்கு அரியது. நினைத்தற்கும் அரிது. செயற்கரிய செயல்களைச் செய்து முடித்தற்கு உலக முழுவதிலும் ஒரு தனியனா யுள்ளாய்; உன்னோடு பொருவதே போர். நீ முன் என்னோடு செய்த போரை இடையில் நிறுத்திவிட்டாய். இன்னமும் என்னோடு பொருவாயானால், நீ நியமிக்கும் போர்முறைப் படியே பொருவேன்' என்றான். அப்பொழுது, 'இனி

உன்னோடு போர் புரியேன் என்று முன்னே முடிவு செய்துள்ளேன். ஆதலால் இப்போது பொருதல் தவறும்' என்று கூறிவிட்டு அனுமான் அகன்று போனான்.

சூலம் முறிந்தபின், படையின்றி நின்ற கும்ப கருணன்மீது சுக்கிரீவன் பாய்ந்து அடித்துக் குத்தினான். கும்பகருணன், சுக்கிரீவனை நோக்கி, 'உன் ஆண்மை சிறந்ததே. ஆயினும் அது இன்றோடு முடிந்திடும்' என்று கூறினான். இருவரும் பொருபவராய், ஒருவரையொருவர் பற்ற முயல, இருவரும் இடம் கொடாராய், மிக வேகமாக இடசாரி வலசாரியாகத் திரிந்தார்கள். போர் காண்போர், எவன் கும்பகருணன். எவன் சுக்கிரீவன் என்று தெரியாது திகைத்தனர். முடிவில் கும்பகருணன் சுக்கிரீவனைப் பிடித்திழுத்துப் பொறுக்க முடியாதபடி இறுக்க, அவன் அறிவு நீங்கினான்.

அப்பொழுது கும்பகருணன், 'இன்றோடு போர் முடிந்திடும். அரசன் இல்லாத படை சிதறியொழியும். இவனை நம் ஊர்க்குக் கொண்டுபோய்விடுவோம். செயற்குரிய சிறந்த செயல் இதுவே' என்று எண்ணிச் சுக்கிரீவனைத் தூக்கிக்கொண்டு இலங்கைக்கு ஏகினான். தாய்ப் பறவையை வல்லூறு பற்றிச் செல்லக் கண்ட குஞ்சுக் கூட்டம் கூக்குரல் இடுதல்போல, குரங்குப் படை அலறியது. படைத் தலைவர்கள் வாய் புலர்ந்து, கண் இடுங்கிக் கருத்தொடுங்கி வியந்து நின்றார்கள். வெண்ணிறமுள்ள சுக்கிரீவனைப் பற்றிய கரு நிறமுடைய கும்பகருணன், வெண்மதியைப் பற்றிய கரிய இராகுவை யொத்தான். தான் செய்த சபதத்தால் கும்பகருணனோடு போர் செய்ய முடியாத அனுமான், செய்வது இன்னதென்று தெரியாது திகைத்துக் கைகளைப் பிசைந்து கொண்டு பின் சென்றான்.

அப்பொழுது வானரர், இராமன் காலில் விழுந்து கதறி, 'சுக்கிரீவனைக் கும்பகருணன் தூக்கிக்கொண்டு போகின்றான். இனி எங்களுக்கு நாயகர் யார்?' என்று ஓலமிட்டனர்.

இராமன் அப்பொழுது மிக வெகுண்டு, வில்லும் அம்பும் ஏந்தி, இலங்கை வாயிலை நோக்கிச் சென்றான். உயிர் போலும் துணைவன் ஊருக்குள்ளே கொண்டு போகப்பட்டால், பெருங்கேடு நேரும் என்று கருதி, 'அம்பு மழையால் ஆகாய வழி அனைத்தும் அடைப்பேன்' என்று சரக்கூடம் கட்டினான். சுக்கிரீவனைக் கொண்டு வான்வழியே போன கும்பகருணன், அம்பு மதிலைக் கிட்டி, இது நீக்குதற்கரிது என்று நினைத்துத் திரும்பி,

"கண்டனன் வதனம்வாய் கண்கை காலெனப்
புண்டரி கத்தடம் பூத்துப் பொற்சிலை
மண்டலம் தொடர்ந்துமண் வயங்க வந்ததோர்
கொண்டலிற் பொலிதரு கோலத் தான்றனை."

குளிர்ச்சியளிக்கும் மேகம் போன்று யாரையும் மனம் குளிரச் செய்யும் இராமன் வடிவம், கும்பகருணன் உள்ளத்தைக் கொதிக்கச் செய்து கொடுங்கோபம் உண்டாக்கிற்று. அதனால் அவன், வாய் மடிக்க, இதழ்கள் துடிக்க, புருவங்கள் நெரிக்க, கண்கள் தீப்பொடிக்க அதட்டி, ஆரவாரித்து, இராமனை நோக்கி, 'நான் நீ கொன்ற விராதன், வாலி முதலியோர் போல்வேன் என்று கருதி, என்னைத் தாக்கிச் சுக்கிரீவனை மீட்க வந்தாய். நான் உன் தம்பியையோ, அனுமனையோ, இந்தச் சுக்கிரீவனையோ பொருட்படுத்திக் கோபிக்க வில்லை. இவர்களைக் கோபிப்பது எனக்குப் புகழ்ச்சி யாகாது. இகழ்ச்சியேயாம். உன் படை ஓடிவிட்டது. உன் தம்பி ஒரு பக்கம் ஒதுங்கிப் போனான். அனுமன்

ஆற்றலற்று, அமர் செய்தற்கு அஞ்சி அகன்றொழிந்தான். உன்னைத் தேடினேன்; நீ கிடைக்கவில்லை. என்னை எதிர்த்துப் பொருது வலியொடுங்கிய இவனை எளிதாக எடுத்துக்கொண்டு ஓடுகின்றேன். இவனைக் காக்க வந்த உன்னை யான் கண்டது எனக்குக் கிடைத்துள்ள பெரும் பேறே. இனி என் போர்த் திறமையெல்லாம் காட்டி, உன்னை வென்று, என் தமையன் இராவணன் மனத் துன்பத்தை மாற்றுவேன். இந்தக் குரங்கை நான் பிடித்திருக்கின்ற பிடியிலிருந்து உன் வில் வித்தையினால் விடுவிப்பாயானால், சீதையைச் சிறையிலிருந்து விடுதலை செய்தாயாவாய்' என்றான்.

அப்பொழுது இராமன், 'என் தோழன் சுக்கிரீவனைத் தூக்கிய தோள்களைத் துண்டியேனானால், உனக்கு நான் தோற்றவன் ஆவேன். பிறகு நான் வில்லைப் பிடிப்பதில்லை' என்று சூளுரைத்தான்.

இராமன் கட்டிய அம்பு மதிலை அகற்றும்பொருட்டுக் கும்பகருணன் முயன்றபொழுது, அவனது நெற்றியில் இரண்டு கணைகளை இராமன் எய்தான். அம்புகள் துளைத்த புண்களிலிருந்துபெருகிய இரத்தம் சுக்கிரீவனது முகத்தை நனைக்க, அவன் மூர்ச்சை தெளிந்து, கும்பகருணன் நெற்றியில் காணப்பட்ட கணை இராம பாணம் எனத் தெரிந்து, மகிழ்ந்து, இவ்வம்புகளை எய்த இராமபிரான் எங்குள்ளான் எனச் சுற்றிப் பார்த்துக் கண்ணுறக் கண்டு வணங்கினான். பின் தான் பகைவன வசமாயிருந்ததை எண்ணி, வெட்கமடைந்து, கும்பகருணனது மூக்கைக் கடித்தும், காதைக் கிள்ளியும் பறித்துக்கொண்டு, வானர சேனையிருந்த இடம் போய்ச் சேர்ந்தான். அதனைக் கண்ணுற்று வானரரும் வானவரும் மகிழ்ந்து களிமுழக்கம் செய்தனர்; சீதை சிறையிலிருந்து திரும்பினாற்போலப் பெருமகிழ்ச்சியடைந்தான் இராமன்.

இராமனது அம்பு பட்டுக் கும்பகருணன் அசைவற்றிருந்த வாய்ப்புக் கிடைத்திராவிட்டால், அவ் வீரனது காதையும் மூக்கையும் கவர்தல் எவராலும் இயலாத செயலே. மூர்ச்சை தெளிந்த கும்பகருணன், அறிவு திரும்ப வந்தபோது, சுக்கிரீவன் தப்பி ஓடிஞன் என்பதையும், மூக்கும் காதும் பறிபோனதையும் அறிந்து அளக்கலாகாத் துன்பக்கடலுள் ஆழ்ந்தான்; 'இராவணன் எண்ணிப் பாராது ஒரு பெண்ணைக் கவர்ந்ததனுல் நேர்ந்த போரில் மூக்கும் காதும் இழக்கும்படி நேர்ந்ததே!' என்று மனம் புழுங்கி, 'இராமன் என் மூக்கிழந்த முகத்தைக் காணுமுன் நான் அவனைக் காண்பேன்' என்று கூறி, கத்தியையும் கேடகத்தையும் கைக்கொண்டான். அவன் கேடகத்தை வீசியதனுல் உண்டாகிய காற்றின் வேகம் குரங்குகளைப் பல திசைகளிலும் சிதற எறிந்தது. அந்தக் கேடகத்தை இராமன் அம்பால் அறுத்துத் தள்ளிஞன். அவ்வண்ணம் அறுக்கவே, கும்பகருணன் வேருெரு கேடகத்தைக் கைக்கொண்டு, அதனுலும் தன் காலாலும் தாக்க, வானர சேனைகள் சிதறியொழிந்தன. அப்பொழுது சாம்பவான் இராமனை அணுகி, 'இந்தக் கும்பகருணனை நீ பொருட்படுத்தாது புறக்கணித்தால், வானர சேனைகளை மாய்வித்து, அரக்கரை வாழ்வித்தாய் ஆவாய்' என்று கூறி, விரைந்து போர் புரியுமாறு தூண்டிஞன்.

உடனே இராமன் பதின்மூன்று கணைகளைக் கும்பகருணன்மேல் எய்தான். அவைகளை அவ்வீரன் வாளால் தூளாக்கிஞன். அவன் வேறு பல கணைகளை விடுத்தான். இவன் அவைகளைக் கேடகத்திஞல் கெடுத்தான். அவன் மற்ருெரு சரம் தொடுத்து இவன் வாளை அறுத்தான். இவன் வேருெரு வாளை யெடுத்து, 'இதனுல் எல்லாரையும் முடித்துவிட்டேன்' என்று கூறிக்கொண்டு,

அவன் முன் வந்து நின்ருன். அவன் அந்த வாளையும் துண்டித்து, கேடகத்தையும் கீழே விழச் செய்து, கவசத்தைத் தாக்கும்படி பல கணைகளைச் செலுத்தி, இவனைக் கொல்லுவதற்கு இதுவே ஏற்ற சமயம் என்று எண்ணினபொழுது இராவணன் அனுப்பிய சேனை கும்பகருணனுக்குத் துணையாக வந்து சேர்ந்தது.

வந்த சேனை கும்பகருணனைச் சூழ்ந்து காத்து நின்றது. இராமன் அந்தச் சேனையை நோக்கி, 'வருக, பொருக' என்று அறைகூவி எதிர்த்து நின்ருன். கும்ப கருணன் கொடிய சூலம் ஒன்றை ஏந்தி இராமன் எதிரே தோன்றினுன். அவனுக்குத் துணையாக வந்த நால்வகைச் சேனை வீரர்கள் செலுத்திய அம்பு முதலியவற்றையும், அவ்வீரர்களையும், தேர், யானை, குதிரைகளையும் இராம பாணங்கள் அழித்துவிட்டன.

போர்க்களம் பார்க்க வந்த தேவர்கள் அரக்கர் எவரையும் கண்டிலர். அவர்களுடைய உடல்களைத் தேடும் அவர்கள் மனைவிமாரையே கண்டனர். எல்லாச் சேனைகளையும் இழந்து கும்பகருணன் தனிப்பட்டு நின்ருன்.

அப்பொழுது இராமன், கும்பகருணனை நோக்கி, 'நான் சொல்வதைக் கேள். கைகளில் படையில்லாத என் வானரப் படைபோலன்றி, ஆயுதங்களோடு கூடி எதிர்க் கும் உன் படையையும் இழந்தாய். என் எதிரே தன்னந் தனியனுய் நின்ருய். நீ நீதிமானுன விபீடணனுடன் பிறந் துள்ளமையால் உன் உயிரை உனக்குத் தருகிறேன். நான் தரும் உயிர் கொண்டு உன் ஊருக்குப் போகின்ருயா? போய் அங்கேயே இருந்துவிடுகிருயா? அல்லது சிறிது தங்கிப் பின்பு போர்க்கு வருகின்ருயா? அமைதியாக ஆராய்ந்து உனக்குப் பொருந்தியதைக் கூறு' என்ருன்:

"ஏதி யோடெதிர் பெருந்துணை யிழந்தனை
எதிரொரு தனிநின்றாய்
நீதி யோனுடன் பிறந்தனை யாதலின்
நின்னுயிர் நினக்கீவன்
போதி யோபின்றை வருதியோ அன்றெனில்
போர்புரிந் திப்போதே
சாதி யோவுனக் குறுவது சொல்லுதி
சமைவுறத் தெரிந்தம்மா."

'நீ முன் செய்த தீவினைப் பயனை அனுபவிக்க வேண்டிய குறையிருக்கிறது. அதனால் நான் உன் தம்பியை அனுப்பி உன்னையழைத்தபோது நீ வரவில்லை. இயமன் ஆணைவழி நின்றாய். என்னிடம் வந்திருந்தாயானால், உன் கைக்கு வருவதாயிருந்த உயர் செல்வம் உன் கையை விட்டுத் தவறிவிட்டது. இந்த நிலையில் உனக்கு விருப்பமானதை உரைப்பாயாக' என்றான் இராமன்.

அப்பொழுது கும்பகருணன் இராமனை நோக்கி, "என்னை உயிரோடு விட்டு விடும்படி உன்னை யான் வேண்டும்படி தூண்டுகின்றாய். மானம், வீரநெறி தவறாது பெற்ற வெற்றி, நீதி, குடிப்பிறப்பு முதலிய சிறப்புக்களுக்கு இருப்பிடமெனப் பெற்ற உங்களால் மூக்கும் காதும் அறுக்கப்பட்ட எங்கள் தங்கைபோல, மூக்கறை, காதறையாய் முண்டமான முகத்தைக் காட்டிக்கொண்டு உயிரோடிருத்தல் என்னால் பொறுக்க முடியாதது. 'பிறர் மனைவியைக் கவர்தல் பெரும்பிழை; சீதையை விட்டுவிடு' என்று என் தமையனிடம் யான் கூறியதை அவன் கேளாமையால், தக்கோர் முன் பேச முடியாதவனாய் வாக்கிழந்து வருந்திக்கொண்டிருந்த யான், செவியோடு மூக்கும் இழந்த பின் ஊருக்குத் திரும்புவது ஒருகாலும் முடியாது. உங்கள் தோள்களையும் தலைகளையும் வாள் கொண்டு துண்டமாக்கி என் தமையன் மகிழும் வண்ணம்

சீதையை அவனுக்கே உரியவளாக்கக் கருதிப் போர் புரிய வந்த யான், அந்தத் தமையன் எதிரே, மூக்கும் காதும் அறுபட்ட முகத்துடன், 'ஐயோ! விதியே' என்று கையைத் தலைமேல் வைத்துக்கொண்டு, கண்ணீர் சொரிந்து கதறியழுது, காலடியில் விழுந்த என் தங்கை போல வீழ்வேனோ? இந்த இழிசெயல் செய்வதற்கு என் மானமும் வீரமும் இடம் கொடா. என்னைப்போல மானமும் வீரமும் உடைய நீ, 'ஊருக்குப் போக விரும்பின் போ' என்று எவ்வாறு கூறினாய்?'' என்றான்.

பின்னர், கும்பகருணன், வலக்கையிலிருந்த சூலத்தை இடக்கையில் உறும்படி மாற்றி, அந்த வலக்கையினால் ஒரு மலையைப் பெயர்த்து, இராமன் தலையைக் குறித்து, 'வெற்றி பெறுக' என்று கூறி, விசைத்து வீசினான். இராமன் அம்பெய்து, அந்த மலையைத் தூளாக்கிச் சூலத்தைத் துண்டுபடுத்தினான். கடலை வறட்டவும், இடியைச் சுடவும், மேருவை உருவவும், விண்ணைக் கடக்கவும் வல்ல இராம பாணங்கள், கும்பகருணன் உடலைத் தாக்கும்படி எய்யப்பட்டவைகள், அவன் கவசத்தைத் துளைக்க மாட்டாதனவாயின. அது கும்பகருணனுக்குச் சிவபிரான் அளித்த சிவகவசமாதலால் சேதிக்கப்படவில்லையென் பதை யறிந்த இராமன், சங்கரனை அதி தேவதையாக வுடைய அம்பைக் கும்பகருணனைக் குறித்து விடுத்தான். அதனால் அந்தக் கவசம் சிதைந்து கீழே விழுந்தது. விழவே, கும்பகருணன் ஓர் உறுதியான தண்டாயுதத்தைக் கையிற் கொண்டு, அதனால் வானரப் படையைச் சாந்தா கும்படி தரையோடு அரைத்தான். அப்பொழுது இராமன் கும்பகருணனைத் தாக்கும் வண்ணம் கணக்கற்ற அம்புகளை மழை போலப் பொழிவதை அவன் பொருட்படுத்தாமல் பெருஞ்சாரி திரிந்தான். இராமன் ஒரே தொடையில்

பத்து அம்புகளை எய்து, அவ்வீரன் கையிற் கொண்டிருந்த தண்டாயுதத்தைத் துண்டித்தான்.

உடனே கும்பகருணன் வாளை யெடுத்தான். அதனைக் கண்ட வானரர் கலங்கினர். வாள் வைத்திருந்த கும்ப கருணன் கையை இராமன் ஓர் அம்பினால் வெட்டி வீழ்த் தினான். அற்ற கையை அறாத கையால் எடுத்து ஆரவாரித்து, பல் இளித்துக்கொண்டு பல திசைகளிலும் ஓடும்படி கும்பகருணன் வானரங்களைச் சாடினான்; கையறு பட்டும் முன்னைவிட மும்மடங்கு அதிகமாக வானர சேனையை மாள்வித்தான். 'இவன் வீரம் இவனுக்கே உரிய சுத்த வீரம். மற்றவர் வீரம் இவனிடம் இரந்து பெற்ற பிச்சை வீரம். இன்றோடு வானரப் படையெல் லாம் மாண்டிடும்' என்று வானவர் கூறிக் கும்பகருணனது உடலை நீங்காத கையைக் காட்டிலும் நீங்கின கையைக் கண்டு அஞ்சினார்கள். மலையிலிருந்து அருவி ஒழுகுவது போல, அற்ற தோளிலிருந்து இரத்தம் பெருகக் கும்ப கருணன் இராமனை நோக்கி ஓடினான். இராமன் அவனது அறாத கையை அம்பால் அறுத்துக் கடலில் வீழச் செய்தான்.

கைகளற்ற கும்பகருணன் வானர சேனைக் கடலைத் தோல், சதை, எலும்பு, இரத்தம் எல்லாம் ஒன்றாகக் குழம்பும்படி கால்களால் துகைத்து உழக்கினான். அவ் வீரன் காலால் சேனையை அழித்தலை இராமன் கண்டு, அவனது வலக்காலை இலக்காகக் கொண்டு, ஓர் அம்பு எய்து அதனை அகற்றினான். பற்கள் விண் மீன்களாக, கோரப்பல் பிறைமதியாக, இரத்தப் பெருக்குச் செவ்வான மாக, அந்திப் பொழுது வந்தாற்போன்று பெருவாயை விரிவாகப் பிளந்த வண்ணமாய், ஒற்றைக் கால்கொண்டு தத்திப் போய்ப் பக்கத்தில் உள்ளவைகளை யெல்லாம்

கடித்துச் சுழல் காற்றுப்போல் வட்டமிட்டுக்கொண்டு, தொடர்ந்து கொலை செய்யும் கும்பகருணனது மற்ருெரு காலும் அற்று விழும்படி இராமன் வேருேர் அம்பு எய்தான். இராம பாணங்களால் கைகள் இரண்டும் கால்கள் இரண்டும் அறுபட்டன. உடம்பு முழுவதும் கணக்கின்றித் துளைக்கப்பட்டது. அந்நிலையிலும் அப் பெரு வீரன் மலைகளை வாயினுல் கடித்துத் தன்னுள் ளிருந்து வெளிவரும் மூச்சுக் காற்றினுல் ஊதியெறிந்து வானரர்களைக் கொன்ருன்.

'இந்த அழகனுடைய விற்ருெழிலுக்கு ஆயிரம் இராவணர் போதார். அப்படிப்பட்ட விற்ருெழிலுக்கு எதிராக, அந்த இராவணனுன என் தமையனுக்கு உதவி யாக முயன்ற யான், அம்முயற்சிக்கு உதவியாயிருந்த கைகளையும் கால்களையும் இழந்தேன். இனிமேல் அவனுக்கு உதவி செய்தற்கு அந்தக் கை கால்கள்போல உதவத்தக்க வேறு துணைப் பொருள் ஒன்றையும் காண கிலேன். அவன் வாழ்நாள்கள் அவன் காம நோய் கொண்டதனுல் முடிவுற்றன. அந்தக் காம நோய்க்கு இடம் கொடாது இருந்திருப்பானேயானுல், வாழ்நாள் களுக்கு எல்லையில்லாமல் எக்காலமும் வாழ வேண்டிய வனுயிருந்த அவனுக்குத் தப்பிப் பிழைக்கும் வழியில்லை' என்று தன் மனத்துள்ளே உணர்ந்து மிக்க துயருற்ருன்:

" ஐயன் விற்ருெழிற்கு ஆயிரம் இராவணர்
அமைவிலர் அந்தோயான்
கையும் கால்களும் இழந்தனன் வேறினி
உதவலாத் துணைகாணேன்
மையல் நோய்கொடு முடிந்தவா ஞுளென்றும்
வரம்பின்றி வாழ்வானுக்கு
உய்யு மாறரி தென்றுதன் உள்ளத்தின்
உணர்ந்தொரு துயருற்ருன்."

கும்பகருணன் மனம், தமையன் இறந்துவிடுவானே யென்ற துன்பத்தில் ஆழ்ந்திருந்தபோது, அவன் கண்கள், ஒடிந்த தேர்களையும், மடிந்த யானை, குதிரை, ஆள்களை யும் இரத்த வெள்ளம் இழுத்துக் கொண்டோடுவதைக் கண்டன. அக்காட்சி அவன் துன்பத்தை ஒருவாறு மாற்ற, அவன், 'சாகும் தமையனுக்கு ஆகும் உதவி யாதும் செய்வதற்கில்லை. வாழும் தம்பிக்கு நாம் சாகு முன் செய்யக்கூடியதைச் செய்தல் வேண்டும்' என்ற எண்ணம் தோன்ற, இராமனை நோக்கி, 'அடைக்கலம் என்று அலறித் தன்னையடைந்த புறுவைக் காப்பதற் காக, அதனை அம்பெய்து கொல்லத் தொடர்ந்து வந்த வேடனுக்கு, அதன் எடையளவு தன் சதையைத் தருவ தாகச் சம்மதித்துத் தராசுத் தட்டு ஒன்றில் அதனை வைத்து, மற்றொன்றில் தன் சதையை அறுத்து வைக்க, நிறையின் குறை தீராமை கண்டு, தானே அத்தட்டில் ஏறித் தன்னையே தியாகம் செய்த சிபிச் சக்கரவர்த்தியின் வழித்தோன்றலே, அடைக்கலமடைந்தாரை ஆதரித்துக் காக்கும் கடன் ஏற்கெனவே உன் குல தருமமாய் உனக்கு உரியதாய் உள்ளது. ஆதலால் எங்களைத் துறந்து உங்களை அடைந்த என் தம்பியை நீ காத்தல் வேண்டும் என்பது என் இறுதி வேண்டுகோள்.

அரச வடிவங்கொண்டு நிலவுலகில் அவதரித்திருக் கின்ற ஆதி தேவனே, என் தம்பி, ஆன்றோரது ஒழுக்க முறையாக அமைந்த, நீண்ட காலமாகவுள்ள உயர்வான அறநெறியை அறிவானேயன்றி, அவன் பிறந்த அரக்கர் குலத்திற்குரிய குற்றமான வழிகளை அறியாதவன். அவன் முன்னே உன்னை அடைக்கலமாக அடைந்திருக் கின்றான். நீ அவனை அடைக்கலப் பொருளாகக் காத்தலை மீண்டும் யான் வேண்டுகின்றேன்.'

"நீதியால் வந்தநொரு நெடுந்தரும நெறியல்லால்
சாதியால் வந்தசிறு நெறியறியான் என்தமபி
ஆதியாய் உனையடைந்தான் அரசவுருக் கொண்டமைந்த
வேதியா இன்னமுனக் கடைக்கலம்யான் வேண்டினேன்"

என்று மிக்க பணிவுடன் கூறினுன்.

பின்னரும் கும்பகருணன் இராமன்பால் ஒன்று வேண்ட எண்ணி, அவ்வள்ளலை நோக்கி,

'இதுவரை என்னைப் பார்க்கப் பயந்திருந்த தேவர்களும் முனிவர்களும் யான் இறந்த பின்னர், பயம் நீங்கிப் பார்க்க வருவார்கள். அப்படி வரும் முனிவர்களும் தேவர்களும் என் முகத்தை மூக்கிலா முகமென்று சொல்லிக் கொண்டு பார்ப்பார்கள். ஆதலால் அவர்கள் பார்க்கா திருக்கும்படி உன் அம்பினுல் என் கழுத்தை அறுத்துத் தலையை நீக்குவாய். நீக்கிய பின் அந்தத் தலையைக் கடலினுள்ளே முழுகிப் போகும்படி செய்வாய். இது யான் உன்னை வேண்டுகின்ற பொருள்' என்ருன்.

"மூக்கிலா முகமென்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்காமை நுன்கணையால் என்கழுத்தை
நீக்குவாய் நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள்
போக்குவாய் இதுநின்னை வேண்டுகின்ற பொருளென்ருன்."

கும்பகருணன் தன் வாழ்நாளின் இறுதியில் கேட்ட வரத்தை மறுத்தல் முறையன்று என்று எண்ணிய இராம பிரான், ஓர் அம்பால் பேராற்றல் வாய்ந்த அவ்வீரனது தலையைக் கொய்து, மற்ருேர் அம்பால் அத்தலையைக் கடலில் ஆழமான இடத்தில் அழுந்தச் செய்தான்.

கும்பகருணன் இறக்கவே, தேவர்கள் அளவு கடந்த மகிழ்ச்சியால் ஆட, தேவ மாதர் பாடினர். அந்தணரும் முனிவரும் அச்சம் நீங்கி ஆனந்தக் கடலுள் ஆழ்ந்தனர். வானர சேனைத் தலைவர்கள் இராமபிரானைச் சூழ்ந்து கொண்டு வாழ்த்தினர். அப்பொழுது அரக்கரெல்லாம் அஞ்சி, நிகழ்ந்ததை இராவணனுக்குத் தெரிவிக்க ஓடினர்.

# V. பாரதியார்

பாரதியார் என்ற பெயருடையவர்கள் பலர் இருப்பினும், பாரதியார் என்று சொன்னவுடனே மகாகவி சுப்பிரமணிய பாரதியாரையே மக்கள் மனக் கண்ணால் கண்டு மகிழ்வர். பாரதியார் தமிழின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த புதுமைக் கவிஞர்; விடுதலை யுணர்ச்சிக்குத் தமிழகத்தில் வித்திட்ட வீரக் கவிஞர். இவர் 1882-ல் கார்த்திகைத் திங்களில் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரத்தில் சின்னசாமி ஐயரும், இலக்குமி அம்மையும், தமிழ் நாடும் செய்த தவப்பயனாகத் தோன்றினார்.

பாரதியார் காரிகை மட்டும் கற்றுக் கவி பாடிய வரல்லர். கருவிலே திருவுடைய இக்கவிஞர் நாவில் ஏழு வயதிலேயே கவிதையூற்றுப் பொங்கி யெழுந்தது. பதினொரு வயதில் இவர் கற்றவரும் மற்றவரும் வியக்கும் வண்ணம் கவி புனைந்தார். அப்பொழுது இவருக்குப் புலவர்கள் கொடுத்த பட்டமே பாரதி யென்பது என்பர்.

மகாகவி பாரதியாருக்கு நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் கடவுட் பற்றும் மேலோங்கியிருந்தன என்பதற்கு அவருடைய பாடல்களே சான்று பகரும்.

" கல்வி சிறைந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ் நாடு"

என்னும் பாடலைப் பன்முறைப் பாடிப்பாடி மகிழலாம். திருவள்ளுவரை உலகிற்கே தந்த பேறு தமிழ் நாடு

ஒன்றிற்கே உளதென்றும், நெஞ்சையள்ளும் சிலப்பதி காரத்தைப் படைத்துள்ள பெருமையுடையது நம் தமிழ் நாடு என்றும் பாரதியார் கூறியுள்ளது மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை யளிக்கின்றது.

பாரதியார் தமிழ் மொழியின் சிறப்பையும் ஓசையை யும் பலபல வண்ணம் போற்றிப் புகழ்வதைக் காணலாம்.

'தேமதுரத் தமிழோசை' யென்றும், 'தெள்ளுற்ற தமிழ் அமுது' என்றும், 'வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து வளர் மொழி' யென்றும் கவிஞர் கூறியதி லிருந்து அவரது மொழிப்பற்று நன்கு புலனாகின்றது. இத்தகைய இனிய தமிழ்மொழி உலகமெல்லாம் பரவச் செய்தல் வேண்டும் என்பது அவரது பேரவா.

பாரதியார் பல தெய்வங்களைப் போற்றிப் புகழ்ந் துள்ளார். எனினும், அவரது வழிபாட்டுக்குரிய தெய்வம் பராசக்தியே யென்பதை அவர் பாடியுள்ள 'மகா சக்தி வெண்பா', 'ஓம் சக்தி', 'பராசக்தி' முதலிய பாடல்களால் அறியலாம். பாரதியாரின் பக்திப் பாடல்களில் தலை சிறந்து விளங்குவது கண்ணன் பாட்டே. நாம் வழிபடு தெய்வத்தைப் பல நிலைகளில் நின்று வழிபடலாம் என்பதை நம் பக்தி நூல்களிலிருந்து அறிகிறோம். இம் முறையைப் பின்பற்றியே நம் பாரதியாரும் கண்ணனைத் தாயாகவும், தந்தையாகவும், குருவாகவும், சீடனாகவும், நாயகியாகவும், நாயகனாகவும் பாவித்துப் பாடியுள்ளார். ரோமன் கத்தோலிக்க மதத்தில்கூட அடியார்களை நாயகிமாராகவும், ஏசுநாதரை நாயகராகவும் பாவித்து எழுதியுள்ள தோத்திரங்கள் பலவுள. பக்த சிரோமணி யாக விளங்கிய மீராபாய், உலகிலுள்ள ஆன்மாக்களை யெல்லாம் பெண்களாகவும், பகவான் ஒருவனையே நாயகனாகவும் எண்ணிப் பாடியுள்ளாள். கண்ணனுடைய

செயல்களும் திருவிளையாடல்களும் பாரதியாரின் உள்ளத்தைக் கவர்ந்ததற்குக் காரணம், நாலாயிரப் பிரபந்தத்துள் பெரியாழ்வார் அருளிச் செய்த திருப் பாசுரங்களை அவர் படித்ததின் பயனாக இருக்கலாம்.

இத்தகைய சிறந்த கண்ணன் பாட்டை மாணவர்கள் பன்முறைப் படித்துக் கவிதையழகையும் பண்ணழகையும் துய்க்கலாம் :

" கண்ணன் முகமறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்துபய னுண்டோ?
வண்ணப் படமுமில்லை கண்டாய்—இனி
வாழும் வழியென்னடி தோழி?"

'கண்ணன்—என் காதலன்' என்ற பகுதியில் இது போன்ற பல பாடல்களைப் படித்துப் படித்து மகிழலாம்.

பாரதியார் பெண்ணின் பெருமையைப் பறை சாற்ற வந்த பெருங் கவிஞர். 'ஆற்றல் கொண்ட பராசக்தி யன்னை, அருளினால் ஒரு கன்னிகையாகி உண்மைகளை யெடுத்துரைக்க வந்துள்ளாள்' என்று 'புதுமைப்பெண்' என்னும் பகுதியில் கூறியுள்ளது பெண்ணுலகிற்குச் செய்துள்ள மிகப் பெரிய நன்மை எனலாம்.

அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் நாற் குணங்களே பெண்ணரசிகளுக்கு நால்வகைப் படைகளாக விளங்கி, அவர்களைக் காக்கின்றன என்னும் கருத்துக்கு மாறாகப் பாரதியாரின் புரட்சிக் கருத்துக்களைக் காணலாம் :

" நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின் குணங்களாம்."

புதுமைப் பெண், நற்குடிப் பெண்களின் குணங்களாகக் கூறுவன, ஞானம், நல்லறம், வீர சுதந்திரம் என்பன. பண்டைக் காலத்தில் மதுரத் தேமொழி மங்கையர், மாதவப் பெரியோருடன் ஒப்பாக இருந்து வேதங்களைப் பற்றிப் பேசிய முறைமை மாறிக் கேடு விளைந்துள்ளதைக் கண்டு மிகவும் வருந்துகின்றார் பாரதியார்.

செம்மைசால் மாதர் நன்னெறியினின்று திறம்பாமைக்குப் பாரதியார் கூறியுள்ள காரணங்கள் மிகச் சிறந்தனவாய்க் காணப்படுகின்றன:

'நிமிர்ந்த நன்னடையும்,நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், ஞானமும் இருப்பதால், மாதர் ஒழுக்க நெறியிலிருந்து தவறுதல் இல்லை' என்பது பாரதியாரின் துணிபு. ஆகையால் அறியாமையாம் பேரிருளில் ஆழ்ந்து, கலையின்றி வாழும் வாழ்வை உமிழ்ந்து தள்ளுதலே பெண்ணறம் எனப் பேசுகின்றார் அப்பெருங் கவிஞர்.

'இனிப் பெண்மணிகள் சாத்திரங்கள் பல பல கற்று, மூடக் கட்டுக்கள் யாவும் தகர்த்து, ஆண்மக்கள் போற்றிட வாழ்வர்' என்று புதுமைப்பெண் கூறுகின்றாள். விலகி, வீட்டில் ஓர் பொந்தில் வளர்வதை வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

'பெண்மை வாழ்க! பெண்மை வெல்க!' என்று பாரதியார் ஆநந்தக் கூத்தாடுகின்றார். 'துன்பம் தீர்வது பெண்மையினால்' என்றும், 'மனைவியின் வார்த்தைகளே மானம் சேர்ப்பன' என்றும் கவிஞர் கூறியுள்ளது பாராட்டற்குரியது.

பெண்கள் விடுதலைக் கும்மியில் பாரதியார் சொல்லி யுள்ள கருத்துக்கள் பொன்போல் போற்றத்தக்கன. கல்வி ஏடுகளையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த பெரியோர்கள் மாய்ந்துவிட்டமை குறித்துப் பாரதியார் மிக மகிழ்கின்றார். வீட்டுக்குள்ளே பெண்களைப் பூட்டி வைக்கவேண்டும் என்று வீர மொழி களைப் பேசிய பெரியவர்கள் இப்பொழுது தலைகவிழ்ந்து நிற்பதைப் பாரதியார் கண்ணாரக் கண்டு களிக்கின்றார்.

" காதல் ஒருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி"

என்னும் கும்மிப் பாடல் தெளிந்த அறிவினையுடைய ஒரு பெண்மணி மற்றைப் பெண்களின் முன் நின்று வீர முழக்கம் செய்வதுபோல் தெரிகிறது.

பெண்களுக்குத் தக்க கல்வி தரவேண்டும் என்பது பாரதியாரின் பேரவா. இக்கருத்தினை யுடையவரே கம்பநாடரும்.

" பெருந்த டங்கண் பிறைநுத லார்க்கெலாம்
பொருந்து செல்வமும் கல்வியும் பூத்தலால்
வருந்தி வந்தவர்க் கீதலும் வைகலும்
விருந்து மன்றி விளைவன யாவையே"

என்ற சீரிய பாடலால் அறமும் விருந்தோம்பலும் நாட்டில் நடைபெறுவதற்குக் காரணராய் விளங்குவோர் பொருத்தமான கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையுமுடைய பிறை நுதலார்களே என்பது கல்வியிற் பெரிய கம்ப நாடரது துணிபு.

பெண்களுக்கு விவரம் தெரிந்த பிறகுதான் திரு மணம் செய்யவேண்டும் என்றும், தாம் விரும்பாத கணவரை மணந்து கொள்ளும்படி வற்புறுத்துதல் கொடுமை என்றும் பாரதியார் கூறுகின்றார். கணவனை யிழந்த இளம் பெண் மீண்டும் திருமணம் செய்துகொள்ள லாம் என்பதும், ஆனால், இரண்டாவது திருமணம் வேண்டாவென்று நாட்டுக்கு நலமுண்டாக்கும் நன் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோரைத் தடுக்கக்கூடா தென்பதும் அவரது பரந்த மனப்பான்மையாகும்.

'பாப்பா பாட்டு' என்னும் தலைப்பில் பாரதியார் பாடியுள்ள பாடல்கள் குழந்தைகள் முதல் பெரியோர் வரை நாளும் பாடி மகிழ்தற்குரியவை; மகிழ்தலோடு நில்லாது, ஒல்லும் வகை அக்கவிஞர் கூறிய நன்னெறியில் நிற்றற்கு முயலுதல் வேண்டும்.

பாலைப் பொழிந்து, உவகையூட்டி வளர்க்கும் பசுவையும், நன்றி மறவாது வாலைக் குழைத்து வரும் நாயையும், வண்டியிழுக்கும் நல்ல குதிரையையும், வயலை உழுது நாட்டை வளமாக்கும் மாட்டையும் குழந்தை களுக்கு அறிமுகம் செய்துவைக்கும் பாடல்கள் மிக இனியனவாய் விளங்குகின்றன.

" பொய்சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா,
தெய்வம் நமக்குத்துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா "

என்னும் பாடல் ஆண்டில் முதிர்ந்த பெரியோர்களுக்கும் கூறத்தக்க பொருத்தம் உடையதெனினும், குழந்தை களுக்கு இளமைப் பருவத்திலேயே அவர்களுடைய உள்ள மாகிய நிலத்தில் இடும் சிறந்த விதை போன்றது என் பதை நினைக்குந்தோறும் மட்டற்றமகிழ்ச்சி விளைகின்றது.

'மக்களைப் பார்த்துச் சிலரை உயர்ந்த குலத்தில் பிறந்தவர்கள் என்றும், சிலரைத் தாழ்ந்த குலத்தில் பிறந்தவர்கள் என்றும் சொல்லாதே ; அப்படிச் சொல்லுதலே பாவம்' எனக் குழந்தைகளிடம் இளமைப் பருவத்திலேயே பெற்றோரும் மற்றோரும் அறவுரை கூறுவரேல், அம்மொழிகள் குழந்தைகளின் உள்ளத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்துவிடும் என்று பகரவும் வேண்டுமோ ?

வயது முதிர்ந்த பெரியோரும், வயதொடு அறிவு முதிர்ந்த பெரியோரும் வாழும் வகையறியாது, சுயநலப் பேய்களாய், தெய்வ நம்பிக்கையற்றுத் திரிவதைக் கண்ணுரக் கண்டு மிக வருந்திய பாரதியார், அப் பெரியோர்களை மிகச் சிறியவர்களாக எண்ணிக் கீழ்வரும் பாடலைப் பாப்பா பாட்டில் பாடிச் சேர்த்துள்ளார் :

" உயிர்க ளிடத்தில் அன்பு வேணும்—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
வயிர முடைய நெஞ்சு வேணும்—இது
வாழும் முறைமையடி பாப்பா."

குரங்குபோல் பலவிடங்களில் பாய்ந்து, ஓரிடத்தில் நில்லாது வன்மை குன்றியுள்ள மனத்தை, அது போன போக்கில் விட்டுவிடாது, அதைத் தம் வயமாக்கி வயிர மாக்கவேண்டும் என்று பாரதியார் கூறியுள்ள பாடல் அறிவுடையவர்க்கும் அறிவில்லாதவர்க்கும், சிறியவர் களுக்கும் பெரியவர்களுக்கும் மிகப் பொருத்தமாய்க் காணப்படுகின்றது.

பாஞ்சாலி சபதம் எளிய நடையில் அமைந்துள்ள ஒரு காவியம். தமிழில் சிற்றறிவுடைய பலரும் இக் காவியத்தைப் படித்து இதன் பொருட் சிறப்பை அறியலாம். மாணவர்கள் இக்காவியத்தை ஊன்றிப்

படித்தால், பாரதியார் இயற்கை எழிலை எடுத்துக்காட்டும் பேராற்றல் வாய்ந்தவர் என்பதை அறிந்து மகிழலாம்.

பாண்டவர் சேனை துரியோதனன் ஊருக்குச் செல்லும் வழியில் மாலைப்பொழுது வந்துவிட்டமையால் ஒரு பூம்பொழிலில் அமர்ந்தது. அப்பொழுது அருச்சுனன், சேல்விழியாள் பாஞ்சாலியை அழைத்துக்கொண்டு சென்று, தனியிடத்தே பசும்புல் மேட்டில் அமர்ந்து, மாலைப் பரிதியின் மாண்புறு எழிலை அப் பெண்மணிக்குக் காட்டி விளக்குகின்றான்:

'பண்போன்ற மொழியாளே, வானத்தின் புதுமை யெல்லாம் பாரடி; கணந்தோறும் மாறி மாறி நவநவ மாகத் தோன்றும் இந்தக் காட்சியைப்போல் இயற்ற வல்லார் யார் உளர்? கணந்தோறும் புதுப்புது வண்ணம் தோன்றிக் களிப்பளிக்கும் இயற்கையினை என்னென்பேன் யான்! ஒளி மின்னல் பத்துக்கோடியெடுத்து, அவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்ததுபோல் அடிவானத்தில் பரிதிக்கோலம் அளப்பரிய விரைவினொடு சுழலக் காணாய்! மின்னற்கொடி போன்றவளே, நிகரற்ற பச்சை நிற வட்டம் காண்பாய்; நீள் உலகில் இதுபோல் ஒரு பசுமை உண்டோ?'

பாரதியாரின் வெண்ணிலாப் பாட்டு நெஞ்சை அள்ளும் சிறப்புடையது. அதில் வானத்தைக் கடலாகவும் குளமாகவும் கண்டு களிக்கின்றார் கவிஞர்: 'வானக் கடலிடை விழிக்கின்பம் அளிப்பதோர் தீவு' என்று குறிக்கின்றார் வெண்ணிலாவை. 'வானக் குளத்திடை ஒளி மிகுந்த வெண்டாமரை' யென்கிறார் தண்ணிலாவை. 'வெண்ணிலாவானது தன்னை மோதவரும் கருமேகத் திரளினை ஒளி தந்து அழகுறச் செய்யும் செயலானது, தனக்குத் தீது புரியவரும் தீயர்க்கும் நலஞ் செய்

தொளிரும் நல்லவர் செயலை ஒக்கின்றது' என்று பாரதியார் கூறியுள்ளதைப் படிக்கின்றபொழுது,

" இன்னுசெய் தாரை யொறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்ற சிறந்த திருக்குறள் நினைவிற்கு வருகின்றது.

" அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்ப தில்லையே"

என்ற அடிகள் பாரதியாரின் வீரத்தை நன்கு விளக்கு கின்றன.

பயத்தைப் பேயாகவும் பொய்ம்மையைப் பாம்பாகவும் உருவகம் செய்து, பேயினை அடித்துப் பொய்ம்மைப் பாம்பினைப் பிளந்து, அதன் உயிரைக் குடித்துச் சய பேரிகை கொட்டுகின்றார் பாரதியார்.

" காக்கை, குருவி யெங்கள் சாதி —நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்"

என்னும் அடிகள், பாரதியாரின் மிகப் பரந்த மனப் பான்மையைத் தெளிவுறக் காட்டுகின்றது.

பாரதியார் பாடல்கள் எல்லாவற்றிலும் மிகச் சிறந்து விளங்குவது குயில் பாட்டே. இதில் அக்கவிஞர் பெருமானது கவித்திறனையும் கற்பனு சக்தியையும் காணலாம். இப்பகுதியில் சொற்சுவையும் பொருட் சுவையும் சிறந்த் உவமைகளோடு விளங்குகின்றன.

" காலை யிளம் பருதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவரு
வேகத் திரைகளினுல் வேதப் பொருள்பாடி

வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னும் திருநகரின்''

எனக் கவிஞர் பெருமான் தென்புதுவைத் திருநகரின் சிறப்பைக் கூற வந்தவர், பாட்டின் தொடக்கத்திலேயே இயற்கையின் அழகில் ஈடுபட்டு, நீலக்கடலை மரகத மணிக்கும், காலை யிளம்பரிதியை நெருப்புக்கும் உவமை யாக்கியுள்ள திறன் பெரிதும் பாராட்டற்பாலது. இங்கு நக்கீரரின் சிறந்த உவமை நினைவிற்கு வந்து மனத்திற்கு மட்டற்ற மகிழ்ச்சியை யளிக்கின்றது. முருகன் மயில்மேல் ஒளிரும் காட்சிக்கு நக்கீரர், கடல்மேல் ஒளிரும் பரிதியஞ் செல்வனை உவமையாக்கி யுள்ளார் :

'' உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு
ஓவற இமைக்கும் சேண்விளங்கு அவிரொளி''

என்பது அப்பெரும் புலவரது சொல்லோவியம்.

குயில் பாட்டில் பலவகைச் சுவைகளும் பலபல தத்துவங்களும் பரந்துள.

குயில், 'மேற்குலத்தீர், உண்மை முழுதும் உரைத் திடுவேன்' என்று தன் உள்ளத்தில் பதிந்துள்ள உண்மை களை யெல்லாம் யெடுத் துரைப்பது போல் தொடங்கி, 'மானுடவர் நெஞ்சு வழக்கெல்லாம் தேர்ந்திட்டேன். நெஞ்சகத்தே தைக்க நெடுநோக்கு நோக்கிடுவீர். காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில் சாதலை வேண்டித் தவிக்கின்றேன்' என்ற சொற்களைக் கேட்டு நம்பிஞன் மானிடன். 'அடுத்த நான்காம் நாள் வந்தருள வேண்டும், மறவாதீர். சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்; வாரீரேல் ஆவி தரியேன்' என்று குயில் சொன்ன சொற்

களால் மனிதன் மயங்கினான். நான்கு நாள் பொறுத்திருக்க அவனால் முடியவில்லை. ஒரு நாள் கழிப்பதற்கு அவன் பட்டபாடு யார் அறிவார்? மறுநாள் அக்காதலன் அம்மாயக் குயில் ஒரு மரக்கிளையில் வீற்றிருக்கக் கண்டான்; திடுக்கிட்டான்! ஓர் ஆண் குரங்கைக் காதலித்து, ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டான்; குயிலினையும் குரங்கினையும் கொல்ல நினைத்தான்; பின்னர்ச் சிறிது நிதானித்தான். அப்பொழுது அப்பெண் குயில் ஆண் குரங்கைப் புகழ்ந்துரைத்த மொழிகளில் நகைச்சுவை ததும்புதலைக் காணலாம்:

"மேனி யழகினிலும் விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தம் சாதிக்கு மாந்தர்நிகர் ஆவாரோ?
ஆன வரையும் அவர்முயன்று பார்த்தாலும்
பட்டு மயிர்மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போல் ஆக்க முயன்றிடினும்
ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்
வேறெத்தைச் செய்தாலும் வேகமுறப் பாய்வதிலே
வானரர்போல் ஆவரோ? வாலுக்குப் போவதெங்கே?"

மூன்றும் நாள், குயிலின் காதலன் காலைத் துயிலெழுந்து காலிரண்டும் முன்போலச் சோலைக் கிழுத்திட, அங்கு வந்து நின்றான்; சுற்று முற்றும் தேடினான்; மூலையில் ஒரு மாமரத்தில் மோட்டுக் கிளையினிலே நீலக் குயிலினையும், அம்மரத்தின் கீழே கிழக் காளை மாட்டினையும் கண்டான்; வெகுண்டான்; கலக்கமுற்றான்; அவற்றைக்

கொல்ல நினைத்தான்; சிறிது நிதானித்தான். அப்பொழுது அப்பெண் குயில் கிழக்காளையை நோக்கி,

" பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே,
காமனே, மாடாகக் காட்சிதரும் மூர்த்தியே,
பூமியிலே மாடுபோல் பொற்புடைய சாதியுண்டோ?
மானுடரும் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறும் காளையென்று மேம்பா டுறப்புகழ்வர்;
காளையர் தம்முள்ளே கனமிகுந்தீர் ஆரியரே,
நீள முகமும் நிமிர்ந்திருக்கும் கொம்புகளும்
பஞ்சுப் பொதிபோல் படர்ந்த திருவடிவும்
மிஞ்சுப் புறச்சுமையும் வீரத் திருவாலும்
வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்
ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம் நான்கண்டு கடுமோகம் ஆய்விட்டேன்"

எனப் போற்றிப் புகழ்ந்துரைத்த சொற்களில் எளிமையும் அழகும் களிநடம் புரிதலைக் காண்கிறோம்.

குயில் பாட்டு வெளித் தோற்றத்திற்கு ஒரு காதற் கதைபோல் காணப்பட்டாலும், ஆழ்ந்து நோக்குவோருக்கு அதில் பலபல வுண்மைகள் விளங்கும். பெண்ணால் அறிவிழக்கும் பித்தர்க்கும், காதலினைப் போற்றும் கவிஞர்க்கும், மாதர்க்கும் பாரதியார் சிறந்த அறிவுரைகள் வழங்கியுள்ளார். இப்பகுதியை ஊன்றிப் படிப்போர்க்கே உண்மைகள் புலனாகும்.

'ஆன்ற தமிழ்ப் புலவீர், நான் பாடிய குயிற்பாட்டு நெட்டைக் கனவின் நிகழ்ச்சியெனக் கொண்டாலும், கலைஞன் ஒருவனது கற்பனையே யானாலும், வேதாந்த

மாக விரித்துப் பொருளுரைக்க யாதேனும் ஐயம் யிடமிருந்தால் கூறீரோ?' எனக் கவிஞர் பெருமான் குயிற்பாட்டை முடித்திருப்பதிலிருந்து தமிழ்ப் புலவர்க்கெல்லாம் பாரதியாரளித்துள்ள பெருவிருந்து இக்குயிற் பாட்டு என்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

பாரதியார் பாடியுள்ள பாடல்கள் எல்லாம் மறைந்தாலும், இக்குயிற் பாட்டு ஒன்றே, அவர் கற்பனைச் சக்தியின் சிகரத்தை யெட்டிய பெருங்கவிஞர் என்பதையும், இயற்கையின் எழிலை எடுத்துரைக்கும் பேராற்றல் வாய்ந்தவர் என்பதையும் உலகிற்கு எடுத்து விளக்கும்.

---